# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



முருகப் பெருமான், (திருச்செந்தூர்)

மாலை 13 | விரோதி கிருது-ஆடி-ஆகஸ்ட், 1971 | மணி 11

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு.



சென்னை ஏகாம்பரேசுவரர் கோயிலில், நமது தமிழகமுதல்வர் மாண்புமிகு கலைஞர் டாக்டர் திரு. மு. கருணாநிதி அவர்கள், தமது பிறந்தநாள் விழா (3—6—71) அன்று வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல்.

## பொருளடக்கம்


(1) பஞ்ச பூதத் தலங்கள்
(2) சிந்தனைச் செம்மணிகள்
(3) ஏகபாதத் திருப்பதிகம்
(4) நன்று வெளிநாடுகள் சென்று நலமே வெற்றியுடன் மீள்க !
(5) தவத்திரு குன்றக்குடி அடிகளார் வெளி நாட்டுப் பயண வழியனுப்பு வாழ்த்து விழா.
(6) இந்து சமய அறநிலைய சட்ட நிர்வாகம்
(7) தொண்டரடிப்பொடியாழ்வார்.
(8) திருமுறை வழிபாடு


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்


ஆண்டுச் சந்தா ரூ. பத்து மட்டும்                தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்




மாலை 13] விரோதிகிருது — ஆடி — ஆகஸ்ட், 1971 [மணி 11

# பஞ்ச பூதத் தலங்கள்

(காஞ்சிபுரம்)

[ ந. ரா. முருகவேள், M. A., M. O. L. ]

முன்னுரை :

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் எனப்படும் ஐந்தும் பஞ்ச பூதங்கள் எனப்படும். பூத்தல் எனும் சொல், தோன்றுதல் அல்லது வெளிப்படுதல் என்னும் பொருளை உடையது. எனவே, உலகம் தோன்றுதற்குக் காரணமாக முதற்கண் வெளிப்பட்ட, இந்த ஐந்து இயற்கைத் தனி முதற் பொருள்களும், பஞ்ச பூதங்கள் என்று வழங்கப்பெறும். ''வஞ்ச மனத்தான் படிற் றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்'' என்னும் திருக்குறளில், பஞ்ச பூதங்களைப் பற்றிய குறிப்பு வந்திருத்தல் காணலாம். இவ்வாறே,

''மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை''

எனப் புறநானூறு என்னும் சங்ககால நூலின் முதற்பாடலிலும், பஞ்ச பூதங்களைப் பற்றிய குறிப்பு வருதல், நினைவு கூரற்பாலது.

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்பனவற்றை, நிலம் நீர் தீ வளி விசும்பு எனத் தமிழில் வழங்குவர். மண் புனல் அனல் கால்

வான் எனவும் பிறவாறும் கூட, இவற்றை ஏற்றபெற்றி நூல்களில் வழங்குவதுண்டு. இவ்வுலகமானது நிலம் தீ நீர் வளி விசும்பு என்னும் ஐந்துமுதற் பொருள்களால் அமைந்துள்ளது. உலகம் பஞ்ச பூதங்களாலேயே அமைந்துள்ளது என்னும் உண்மையினை, ''நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்'' எனவரும் தொல்காப்பிய நூற்பாவால் தெளியலாம்.

இறைவன் உயிர்களின் நலம் கருதி, இவ்வுலகத்தினையும் இதன் தோற்றத்திற்குக் காரணமான பஞ்ச பூதங்களையும் படைத்தருளியுள்ளான். மண்ணில் திண்மையும், நீரில் சுவையும், தீயில் வெம்மையும், காற்றில் அசைவும், வானிற் கலப்பும் ஆகிய பண்புகள், அமையுமாறு செய்தருளியவன் இறைவனே ஆவன். இப் பஞ்ச பூதங்களுள், வெளியில் கலப்பு என்னும் ஒரு பண்பும், வளியில் கலப்பு அசைவு என்னும் இருபண்புகளும், தீயில் கலப்பு அசைவு வெம்மை என்னும் மூன்று பண்புகளும், நீரில் கலப்பு அசைவு வெம்மை சுவை என்னும் நான்கு பண்புகளும், பாரில் கலப்பு அசைவு வெம்மை சுவை திண்மை என்னும் ஐந்து பண்புகளும் முறையே அமையுமாறு, இறைவனாலேயே தோற்றுவிக்கப்பட்டன. இவ்வுண்மையினையே,

''அருக்கனிற் சோதி அமைத்தோன்; திருத்தகும்
மதியில் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன்; மேதகு
காலின் ஊக்கம் கண்டோன்; நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்; வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் .....''

என்று திருவண்டப் பகுதியிலும் (20—26),

''பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி''

எனப் போற்றித் திருவகவலிலும் (137—141), மணிவாசகர் தமது திருவாசகத்தில் அருளிச் செய்திருத்தல் காணலாம்.

இங்ஙனம் பஞ்சபூதங்களைத் தோற்றுவித்து, அவற்றிற்கு முறையே உரிய பண்பும் செயலும் அமைத்து, அவற்றால் நாம் வாழும் உலகத்தையும், அதன்கண் பற்பல வியத்தகு பொருள்களையும் படைத்தருளிய எல்லாம் வல்ல இறைவனை, நம் பண்டைத் தமிழ் முன்னோர்கள், பஞ்ச பூதங்களின் வாயிலாகவே உணர்ந்து, அப் பஞ்ச பூதங்களின் வடிவில் வைத்து வழிபடுவாராயினர். அங்ஙனம் இறைவனை மண் நீர் தீ காற்று ஆகாயம் என்னும் ஐந்தன் வடிவாகவும் நம் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் வழிபட்டதன் பயனாகவே ''பஞ்ச பூதத் தலங்கள்'' என்பன, நம் தமிழ்நாட்டிற் சிறப்புற அமைந்து, தொன்னெடுங்காலமாகத் தொழுது வழிபடப்பட்டு வருகின்றன.

பஞ்ச பூதத் தலங்களுள், காஞ்சிபுரமும் திருவாரூரும் பிருதிவித்தலம்; திருவானைக்கா என்னும் ஜம்புகேசுவரம் அப்புத்தலம்; திருவண்ணாமலை தேயுத் தலம்; திருக்காளத்தி வாயுத் தலம்; சிதம்பரம் ஆகாசத் தலம் என்று தொன்றுதொட்டு நூல்களாலும் சான்றோர்களாலும் பெரிதும் சிறப்பித்துப் போற்றப்பட்டு வருகின்றன. இவற்றின் இணையற்ற பழமையும் பெருமையும் தெய்விகச் சிறப்பும் எல்லையற்றன. எத்தனையோ பல கோடிக்கணக்கான மக்கள், எத்தனையோ பல நூற்றாண்டுகளாக, இடையறாது யாத்திரை மேற்கொண்டு, தரிசனம் செய்து, பக்தி பூண்டு, போற்றி வழிபட்டு மகிழ்ந்து வரும் ஒப்புயர்வற்ற சிறந்த அருட்பெரும் தலங்களாக, இப் பஞ்ச பூதத்தலங்கள் விளங்கி வருகின்றன. இவற்றைப்பற்றிய பலதிறச் செய்திகளை அறிந்து கொள்ளுதல், பக்தர்களுக்கு மிகவும் பயன்படும் ஆதலின், இங்கு அவைகளுள் ஒவ்வொன்றைப் பற்றியும் முறையே, நாம் இயன்ற அளவு தொடர்ந்து அறிந்து கொள்ள முயல்வோமாக!

பிருதிவித் தலங்கள் இரண்டு :

காஞ்சிபுரம் திருவாரூர் ஆகிய இரண்டும், பிருதிவித் தலங்களாகும். காஞ்சிபுரத்தில் அம்பிகை மணலால் இலிங்கம் அமைத்துத் திருவேகம்பப் பெருமானை வழிபட்டு அருள்

N71.13.11



பெற்றாள். திருவாரூரில் சிவபெருமான் புற்றிடம் கொண்டார் (வன்மீக நாதர்)எனப் பெயர் பெற்றுத் திகழ்கின்றார். காஞ்சிபுரத்தில் அம்பிகைக்கும், திருவாரூரில் இறைவனுக்கும், மிகச் சிறப்பும் முதன்மையும்உண்டு. ஆதலின், காஞ்சிபுரம் சக்திப் பிருதிவித் தலம்; திருவாரூர் சிவப் பிருதிவித் தலம் எனப் பெரியோர்கள் கூறுவர். அம்மையின் அருள் பெற்றே, அப்பனை அறிந்து வழிபடுவது இயல்பும் முறைமையும் ஆதலின், பிருதிவித் தலங்களுள் முதற்கண் காஞ்சிபுரம் பற்றியும், அடுத்துத் திருவாரூர் பற்றியும். இங்கு நாம் ஒரு சிறிது காண்போம்.

**காஞ்சிபுரம் :**

இது சென்னைக்குத் தென்மேற்கே 45 கல் தொலைவில், வேகவதி ஆற்றின் கரையில் உள்ளது. 'மலர்களில் முல்லையும், தேவ மாதர்களில் அரம்பையும், அறங்களில் இல்லறமும் போல, நகரங்களில் காஞ்சிபுரம் தலைசிறந்து விளங்குகின்றது' எனக் **காளிதாசர்** இதனைப் புகழ்ந்துள்ளார். 'கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்' என்பது அப்பர் தேவாரம். கி. மு. 2-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இந்நகரம் பெரும் புகழ்பெற்று விளங்கியுள்ளது. பதஞ்சலி முனிவரின் மகா பாஷ்யத்திலும், மணிமேகலை, பெரும்பாணாற்றுப் படை என்னும் சங்க நூல்களிலும், இந்நகரம் புகழப் பெற்றுள்ளது. கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் தொண்டைமான் **இளந்திரையன்** என்னும் அரசனின் தலைநகராக விளங்கியது. கி. பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் 9 ஆம் நூற்றாண்டு வரையில் இது பல்லவர்களின் தலைநகராக விளங்கியிருந்தது. கி. பி. 642-ஆம் ஆண்டில் **யுவான் சுவாங்** என்னும் சீன யாத்திரிகர் இந்நகரைப் பார்வையிட்டு இதனைப் புகழ்ந்துள்ளார். நலாந்தா பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்களாக விளங்கியிருந்த திக்கநாகர், போதி தருமர், தருமபாலர் முதலியவர்களும், சந்திர குப்த மௌரியனின் அமைச்சராக விளங்கி அர்த்தசாத்திரம் எழுதிய **சாணக்கியர்** என்னும் கௌடில்யரும், காஞ்சி மாநகரில் தோன்றியவர்களே யாவர். 10 முதல் 13 வரையுள்ள நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சியிலும், 14 முதல் 17 வரை விஜய நகர அரசர்களின் ஆட்சியிலும், பின்னர்ப் படிப்படியே ஆங்கில ஆட்சியின் கீழும் இந்நகரம் இருந்து வந்தது. பொய்கையாழ்வார், வேதாந்த தேசிகர், (கி. பி. 1268) ஆகியவர்களின் அவதாரத் தலம். திருமழிசையாழ்வார், கணிகண்ணர், ஆளவந்தார், திருக்கச்சி நம்பிகள், இராமாநுஜர் முதலிய வைணவச் சான்றோர்கள் வாழ்ந்த தலம். திருக்குறளுக்கு உரை வகுத்த **பரிமேலழகர்**, உலகளந்த பெருமாள் கோயிலில் அருச்சகராக விளங்கியவர் ஆவர். கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார் குமர கோட்டத்தில் அருச்சகராக விளங்கினர். சிவஞான சுவாமிகள், தமது சிவஞானபோதப் பேருரையை இங்குத் தங்கி இருந்தபொழுதே இயற்றினர். **ஆதி சங்கரர்** இங்குக் காம கோடி பீடத்தை நிறுவியருளினர். இங்குப்பெரிய காஞ்சிபுரத்தில் நிமந்தகாரத் தெருவில், தொண்டைமண்டல ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ **ஞானப் பிரகாச சுவாமிகள்** அவர்களின் திருமடம் அமைந்திருக்கின்றது. அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் பட்டினத்தார் அருணகிரிநாதர் முதலிய சான்றோர்கள் பலரும் இத்தலத்தைப் பாடிப் போற்றியுள்ளனர். க-பிரமன்; அஞ்சித்தல்-பூசித்தல். பிரமன் பூசித்ததினால் இதற்குக் காஞ்சி எனப் பெயர் அமைந்தது என்பர். காஞ்சி என்னும் ஒருவகை மரம், வளர்ந்து நிறைந்த இடம் என்றும், நிலமகளுக்குக் காஞ்சி என்னும் இடையணிகலனைப் போன்று திகழுவது என்றும், பொருள் கூறப்படுவதுண்டு. காஞ்சிபுரத்திற்குப், புவனசாரம், மும்மூர்த்தி வாசம், விண்டுபுரம், கலிசித்து, இலயசித்து, தபோமயம், பிரமபுரம், ஆதி பீடம், கன்னிகாப்பு, சிவபுரம், என வேறு பல பெயர்களும் உண்டு. இங்குள்ள பாலிமேடு என்னும் இடத்தில், பல்லவர்களின் அரண்மனை இருந்தமைக்குரிய வரலாற்று அறிகுறிகள் காணப்படுகின்றன.

**காமாட்சியம்மை கோயில் :**

மதுரையில் மீனாட்சியம்மை போன்று, காஞ்சியில் சிறப்புற்று விளங்கும் அம்பிகை, காமாட்சியம்மை யாவர். கா-கலைமகள்;

மா-திருமகள். அட்சம்-கண். கலைமகளையும் திருமகளையும் தனக்குக் கண்களாகக் கொண்டவள் ஆதலின், காமாட்சி என அம்பிகை இங்குப் பெயர் பெற்று விளங்குகின்றாள். ஏனைய தலங்களைப் போல இல்லாமல் இங்கு அம்பிகை அமர்ந்தகோலத்தில் வீற்றிருக்கிறாள். அந்நிலையில், அவளது நான்கு திருக்கைகளிலும் முறையே, பாசம் அங்குசம் மலரம்பு கரும்புவில் என்பவற்றை ஏந்தியுள்ளாள். காமாட்சி அம்மையின் கோயில், காஞ்சிமா நகரின் நடுவில் உள்ளது. எல்லாக் கோயில்களுக்கும், திருவிழாக்களுக்கும், காமாட்சியம்மையே நடு நாயகமாகத் திகழ்கின்றாள். கோயிற் கருவறையில் பிலாகாசம் என்னும் ஒரு புனித இடம் உள்ளது. அதன்கண் அம்பிகை, தவம் புரியும் நிலையில் விளங்குகின்றாள். அத்திரு வுருவைத் 'தபசு காமாட்சி' என்பர். இவ்விடத்திற்குக் காமகோடிபீடம் என்பது பெயர். தன்னிடத்துச் செய்த காமிய தருமத்தை ஒன்று கோடியாகப் பெருகச் செய்வதினாலும்; விருப்பம் (காமம்) மிக்க செல்வத்திற்குத் தலைவராகிய குபேரர்கள் போன்ற அனேகரைத் தோற்றுவித்து அருள் புரிதலாலும்; தன்னை வணங்கியவர்க்கு விருப்பம் (காமம்) தரும் பலவகைச் செல்வங்களைக் கோடி கோடியாக வழங்குவதனாலும்; தருமம் அர்த்தம் காமம் மோட்சம் என்னும் உறுதிப் பொருள் நான்கில் காமத்திற்குக் கோடியிலுள்ள வீடுபேற்றைத் தருவதாலும்; க என்னும் பிரமனையும், அ என்னும் திருமாலையும், ம என்னும் உருத்திரனையும் கோடி முறை இறைவி தன் விழியிற் படைத்ததனாலும், இதற்குக் காமகோடி பீடம் எனப் பெயரமைந்தது என்று, திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச் சிவஞான சுவாமிகள் தாம் பாடிய காஞ்சிப் புராணத்தின்கண் விளக்கியிருக்கின்றார். இங்குள்ள திருக்குளம், உலகாணித்தீர்த்தம், பஞ்ச சங்கைத் தீர்த்தம் எனப் பெயர் பெறும். அம்பிகை இறைவன்பால் இரு நாழி நெல் பெற்று, இங்கு முப்பத்திரண்டு அறங்களையும் செய்தருளினள். அதற்கு இடையூறு செய்த பூதம் ஒன்றைத் திருமால் அடக்கினர், அதன் பொருட்டு அவர், நின்றான் -இருந்தான்- கிடந்தான் என்னும் மூன்று நிலைகளில், இத் தீர்த்தத்தின் கரையில் மூன்று அடுக்குகளாக உள்ள சந்நிதியில் எழுந்தருளி விளங்குகின்றார். ஒரு சமயம் திருமகள் திருமாலின்பால் ஊடல் கொண்டு, இங்கு வந்து அம்பிகையை நோக்கித் தவம் புரிந்து கொண்டிருந்தாள். அப்போது திருமால் திருமகளைத் தேடிக்கொண்டு வந்து ஒரு கள்வனைப் போல மறைந்து நின்று கண்டார். இருவரும் காமாட்சியம்மையின் அருளைப்பெற்றுக் களித்து மகிழ்ந்தனர். இதற்கு அறிகுறியாகக் காமாட்சி அம்மையின் சந்நிதியின் வாயிலுக்கு அருகில், திருமாலுக்குக் கள்வனூர் என்னும் ஒரு சந்நிதி அமைந்துள்ளது. இது மங்களாசாசனம் பெற்ற ஸ்ரீவைஷ்ணவத் திருப்பதிகள் நூற்றுஎட்டனுள் ஒன்று. திருமங்கையாழ்வார் தமது பாடலில் இச் சந்நிதியைக் குறிப்பிட்டுள்ளார் (2059). இக்கோயிலில் உலகாணித்தீர்த்தத்திற்கு அருகிலுள்ள உயரிய சபா மண்டபம் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பியது.

**திருவேகம்ப நாதர் கோயில் :**

சைவ சமய ஆசிரியர்கள் நால்வரும் பாடியது. கரிகால் சோழன் அமைத்தது. 'தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்' என மாணிக்கவாசகர் இதனைப் புகழ்ந்துள்ளார். காமாட்சியம்மை மணலால் அமைத்து வழி பட்ட லிங்கமாதலின், இது பிருதிவித் தலம் என்பர். ஏகாம்பரநாதர் என்பதற்கு, ஒற்றை மாமரத்தின் அடியில் வீற்றிருப்பவர் (ஏகம்-ஒன்று; ஆம்பரம்-மாமரம்) என்பது பொருள். வேதங்களே மாமரமாக விளங்குகின்றன என்பது ஐதிகம். கந்த புராணம் குறிப்பிடும் விகடசக்கர விநாயகர், ஆயிரக்கால் மண்டபத்தில் கோபுரத்தின் கீழ் விளங்குகின்றார். இக்கோயிலினுள் 'நிலாத் திங்கள் துண்டம்' என்னும் வைணவத் தலம் உள்ளது. சிவகங்கை, கம்பை நதி என்னும் இரு தீர்த்தங்கள், கோயிலின் வெளிப் பிராகாரத்தில் உள்ளன. இங்கு ஒரு சந்நிதியில் 1008 இலிங்கங்கள், ஒரே இலிங்கத்தில் அமைந்துள்ளன. ஆட்சன் (Hodgson) என்னும் ஆங்கிலேயர், இக்கோயில் திருமதில் திருப்பணி நடைபெறுவதற்குப் பெரிதும் துணை புரிந்தார். அவரின் நினைவகத்தான், காஞ்சிபுரத்தில் 'ஆடிசன் பேட்டை' என்று

ஒரு பகுதிக்குப் பெயர் ஏற்படுவதாயிற்று. திருவேகம்பர்கோயிலின் கொடிமரத்திற்கு அருகில் கச்சிமயானம் என்னும் பாடல் பெற்ற தலமுள்ளது. அதற்குக் கிழக்கே வாலி வழி பட்ட வாலீச்சரம் உள்ளது. காமாட்சியம்மை வழிபட்டமூலலிங்கத்திற்குத் தெற்கில், பிரமன் வழிபட்ட வெள்ளக்கம்பம், வடக்கில் திருமால் வழிபட்ட கள்ளக்கம்பம், உருத்திரன் வழிபட்ட நல்லகம்பம் ஆகியவை உள்ளன. இதன் கோபுரம் 192 அடி உயரம் உள்ளது. கி. பி. 1509 இல் கிருஷ்ணதேவராயர் இதனைக் கட்டினார். முதற்குலேத்துங்கன் (கி. பி. 1070), இரண் டாம் இராசராசன் (கி. பி. 1146), இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1133), மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1178) முதலிய பல அரசர்களின் கல்வெட்டுக்கள் இங்குக் காணப் படுகின்றன.

### வரதராஜப் பெருமாள் கோயில்:

கஜேந்திரன் என்னும் யானையே மலை வடி வாக அமைந்து நிற்க, அதன் மீது இங்குப் பெருமாள் எழுந்தருளியிருப்பதாக ஐதிகம். ஆதலின் இது அத்திகிரி, அத்தியூர் என வழங் கப்பெறும், 'அத்தியூரான் புள்ளையூர்வான்' என் பது பூதத்தாழ்வார் பாடல். சுவாமி தேவ ராஜர், தேவாதிராஜர், பிரணதார்த்திஹரர். பேரருளாளர், அருளாளப் பெருமாள். அம்பாளின் பெயர் பெருந்தேவித்தாயார் என்று வழங்கப்படும். நின்ற திருக்கோலம், படைப்பாற்றலைப் பெறுவதற்காகப் பிரமதே வர் இங்கு வேள்வி புரிந்து அருள் பெற்றார். பிரமன்பால் ஊடல் கொண்ட சரசுவதி, பெரு நீர் வெள்ளமாகப் பெருகி வேள்வியை அழிக்க முயன்றாள். அவள் நதிவடிவம் கொண்டு வேக மாக ஓடி வந்ததனால். ஆற்றுக்கு வேகவதி எனப் பெயர் வந்தது. பிரமதேவரின் வேண்டு கோளுக்கு இணங்கித் திருமால், திருவெஃகா ஸ்ரீயதோக்தகாரி எம்பெருமானாகக் குறுக்கே பள்ளிகொண்டு வேகவதியின் வெள்ளத்தைத் தடுத்துப் பிரமனுக்கு அருள் புரிந்தார். பிர மனின் வேள்வியிலிருந்து புண்ணியகோடி விமானம் தோன்றியது. அப்புண்ணியகோடி விமானத்திலேயே வரதராஜர் எழுந்தருளி விளங்குகின்றார், கிழக்கிலும் மேற்கிலும் கோபு ரங்கள் உள்ளன. அவைகள் முதலாம் வேங்கட பதி, இரண்டாம் வேங்கடபதி (கி. பி. 1575—1642) அரசர்களால் கட்டப்பெற்றன. கோயி லின் கருவறையை அடைவதற்கு 24 படிகளை ஏறிக் கடந்து செல்ல வேண்டும். 24 தத்து வங்களுக்கு மேல் 25—ஆம் தத்துவமாகப் பரவாசுதேவன் ஆகிய திருமால் விளங்குகின் றார் என்னும் தத்துவ நுட்பத்தை இவ்வமைப்பு உணர்த்துகின்றது. இங்கு ஐந்து பிராகா ரங்கள் உள்ளன. வரதர் மேற்கு நோக்கி யுள்ளார். அத்திகிரியின் கீழ் உள்ள குகையில் ஸ்ரீ அழகிய சிங்கரும், ஸ்ரீஹரிதார்த்த தேவி யும் விளங்குகின்றனர். கோயிலின் நூற்றுக்கால் மண்டபம் சிற்ப அழகு மிக்கது. அது விஜயநகர அரசர்கள் கட்டியது. அதன் வடக்கே உள்ள குளம் அனந்த தீர்த்தம். கொடிக் கம்பம் ஒரே கல்லில் 100 அடி உயரம் உடையது. ஐந்து பிராகாரங்களை யுடைய இக்கோயில் 23 ஏக்கர் நிலப்பரப்புடையது. கிழக்கிந்தியக் கம்பெனி யைச் சேர்ந்த இராபர்ட் கிளைவ் நவரத்தின மாலையும், லியோனர்ட் பிளேசு நவரத்தின கிரீட மும் போன்ற, விலை மிகுந்த அணிகலன்களைச் சுவாமிக்கு வழங்கியுள்ளனர், "காசி முதலாகிய நன்னகரி எல்லாம் கார்மேனி அருளாளர் கச்சிக்கு ஒவ்வா" என்பர் வேதாந்த தேசிகர்.

### கச்சிநெறிக் காரைக்காடு:

இத்தலம் இக்காலத்தில் திருக்காலிமேடு என மருவி வழங்கி வருகின்றது. காஞ்சிபுரம் இருப்புப் பாதை நிலையத்திற்குத் தென்கிழக்கே முக்கால் கல் தொலைவில் உள்ளது. இதற்குச் சத்திய விரத க்ஷேத்திரம் என்றும் பெயர் உண்டு. இங்கே "மெய்ப்பொருட்கண் தோற்ற மாய் மெய்யே நிலைபேறாய்" உள்ள சிவபெரு மான், சத்திய சத்தியர், சத்திய சோதகர், சத் திய சங்கற்பர், சத்தியகாமர், சத்திய விரதர் என்னும் பெயர்களுடன் விளங்குகின்றார். முன் னொரு காலத்தில் சிபி என்னும் அரசன் இத்த லத்தை வழிபட்டு இந்திர பதவி பெற்றான். இந் திரபதவியிலிருந்து அவன் தேவர் உலக இன்பங் களில் திளைத்து மகிழ்ந்த பிறகு, அவ்வின்பம் தெவிட்டி உவர்ப்பு அடைந்து. வீடுபேறு எய்த விரும்பி நின்றான். அதனால் தேவர்களின் குரு வாகிய பிருகற்பதி பகவானை அழைத்து வீடு

பேறு எய்துதற்குரிய நெறியை அறிவிக்குமாறு வினவி, அவரது அறிவுரையின்படி இங்கு வந்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றான். அவனால் அமைக்கப்பெற்ற தீர்த்தம் 'இந்திர தீர்த்தம்' என வழங்குகின்றது முன்னொரு காலத்தில் சந்திரனின் மகனாகிய புதன் இங்கு வந்து சிவ பெருமானை வழிபட்டு முதன்மை மிக்க கிரகங் களுள் ஒன்று ஆகும் பேறு பெற்றான். ஆதலின் இந்தத் தலத்திற்குப் புதன்கிழமை சிறப்புடைய ஒரு நாளாகும். இத்தலத்தில் விநாயகர், அம்பிகை, முருகப்பெருமான் முதலியவர்களும், இறைவனை வழிபட்டு மகிழ்ந்தனர். இத் தலத்தைத் திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் பாடிச் சிறப்பித்துள்ளார். ஒரு காலத்தில் காரைச் செடிகள் அடர்ந்து காடுபோல வளர்ந்திருந்ததனால், இத்தலத்திற்குக் ''கச்சி நெறிக் காரைக்காடு' எனப் பெயர் ஏற்பட்டது.

மணிகண்டீசுவரம்:

இது காஞ்சிபுரம் இருப்புப் பாதை நிலையத்திற்கு மிக அருகில், திருக்கச்சிநம்பி தெருவில் உள்ளது. திருப்பாற் கடலினின்று தோன்றிய ஆலகாலம் என்னும் கொடிய நஞ்சினை, உலகத்து உயிர்களும் தேவர்களும் எல்லாம் உய்வதன் பொருட்டுத் தமது பெருங் கருணையினால் சிவபெருமான் உண்டருளி, அதனைத் தமது கண்டத்தின்கண் தம்முடைய அருட்டிறனுக்கு அறிகுறியாக நிறுத்தி வைத்தருளினர். அதனால் அவரது கண்டம் நீலமணி போலும் நிறமுடையதாயிற்று. எனவே அவருக்கு மணிகண்டீசுவரர் என்று பெயர் ஏற்படுவதாயிற்று, இத்தலத்தைத்தேவர்கள் அனைவரும்வழிபட்டுத் தொழுது அமுதம் உண்ணும் பேறு பெற்றனர்.

புண்ணிய கோடீசுவரம்:

இது மணிகண்டீசுவரத்திற்குத் தெற்கே கால் கல் தொலைவில் உள்ளது. திருமால் இங்கு வழிபட்டுக் காத்தற் றொழில் புரிவதற்குமட்டு மேயன்றி, படைத்தற் றொழில் இயற்றவும் ஆற்றல் பெற்றனர். இங்குள்ள திருக்குளத்திலேயே தம்மை வழிபட்டு வந்த கஜேந்திரன் என்னும் யானையின் காலைப் பற்றிய முதலையைத் திருமால் தமது சக்கரப் படையை ஏவிக் கொன்று அருள் புரிந்தார். இங்குள்ள தீர்த்தம் 'கஜேந்திர தீர்த்தம்' எனப் பெயர் பெறும்.

சிவாத்தான ஈசுவரம் ;

இது புண்ணிய கோடீச்சுவரத்திற்குக் கிழக்கில் அரைக் கல் தொலைவில், மிகவும் பாழ்பட்டுச் சிதைந்த நிலையில் உள்ளது. பிரமதேவர் இத் தலத்திற்கு வந்து பாசுபத விரதம் பூண்டு, பிரமீசர் என்னும் பெயரால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, பிரமதீர்த்தம் என்னும் திருக்குளத்தை அமைத்து, சோமயாகம் செய்து சிவபெருமானை வழிபட்டு, உலகங்களைப் படைக்கும் ஆற்றலைப் பெற்றார். தாம் யாகம் செய்த இவ்விடத்தைச் சிவபெருமான் தமக்குரிய இருப்பிடமாக ஏற்றுக் கொண்டு எழுந்தருளி அடியவர்களுக்கு அருள்புரிந்து வருமாறு பிரமதேவர் வேண்டிக் கொண்டதனால், பிரம ஆஸ்தானம் என்பதுமாறிச் சிவ ஆஸ்தானம் (சிவாத்தானம்) என வழங்கப்பெறுவதாயிற்று.

சார்ந்தாசய ஈசுவரம் :

இத்தலம் சிவாத்தானஈசுவரத்திற்கு அரைக் கல் தொலைவில் உள்ளது. முன்னொரு காலத்தில், காசியில் வாழ்ந்திருந்த முனிவர்கள், வேத வியாச முனிவரை வணங்கித் தொழுது வேத முடிவாயுள்ள பொருள் எது என்பதனை விளக்கிச் சுருக்கித் தெள்ளத் தெளியச் சொல்லியருள்க என வேண்டிக் கொண்டனர். அதற்கு அவர் ''நாராயணன் ஒருவனே பரப்பிரம்மம்; ஏனையர் அன்னர் அல்லர்'' என்பதே அனைத்து நூல்களும் ஆராய்ந்து கூறும் உண்மை என்று காசிவிசுவநாதப் பெருமானை இகழ்ந்தது போன்ற குறிப்பு அமையக் கூறினர். அப்போது திருநந்திதேவர் அவரைச் சினந்து, விசுவரூபன் விசுவாதிகன் விசுவாந்தர்யாமி, விசுவசேவியன், விசுவநாதன் என விளங்கும் சிவபெருமானை இகழ்ந்த குற்றம் நீங்க, காசியின் மேம்பட்ட காஞ்சியிற் சென்று சிவபெருமானை வழிபடுமாறு பணித்தனர். அதன்படியே வேதவியாசர் காஞ்சியை அடைந்து, மஞ்சள் நதிக்கரையின்

பக்கத்திலுள்ள மணிகண்டீசுவரத்திற்கு நிருதி திக்கில் சார்ந்தாஸ்ரய லிங்க ஈசுவரர் என்னும் பெயரால் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டார். 'சார்ந்தாஸ்ரய ஈசுவரர்' என்னும் தொடர், தம்மைப் புகலிடமாகக் கொண்டு சார்ந்தவர்களுக்குத் துணையாகத் திகழ்பவர் எனப் பொருள்படும் (ஆஸ்ரயம் - புகலிடம்). இஃது இந்நாளில் ''சாந்தாலேசுவரர் கோயில்'' என மருவி வழங்குகின்றது.

பணாதரஈசுவரம் :

இது பணாமணீசம் எனவும் வழங்கும், இது ஆலடிப் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது. இஃது ஆயிரம் பணாமணிகளையுடைய ஆதி சேடன் வழிபட்டு அருள் பெற்ற தலம். (பணம்-படம், மணி-இரத்தினம். ஆயிரம் தலைகளையும், அவற்றில் இரத்தினங்களையும் உடையவன் ஆதிசேடன். ஆதலின் அவனுக்குப் பணாதரன், பணாமணிதரன் என்பது பெயர்).

முத்தீசுவரம் :

இத்தலம், காஞ்சிபுரத்தில் 'ஆடிசன் பேட்டை' (Hodgsonpet) என வழங்கியிருந்த, காந்தி சாலையில் அறுவை வணிகர் அறச் சாலைக்கு அருகில், பணாதரீசுவரர் கோயிலுக்கு வடகிழக்கிலுள்ளது. காசிப முனிவர்க்குக் கத்துரு, வினதை (சுபருணை) என மனைவியர் இருவர் இருந்தனர். அவ்விருவரும் தங்களுக்குள், அழகிற் சிறந்தவர் யார்? என விவாதித்துப் பூசலிட்டுக்கொண்டனர். தமது கணவராகிய காசிப முனிவரிடம் சென்று, தங்கள் இருவருள் அழகிற் சிறந்தவர் யார் எனக் கூறுமாறு வேண்டினர். அவர் கத்துருவே அழகிற் சிறந்தவள் என்று தீர்ப்புரை வழங்கினார், வினதை தோல்வியுற்றாள். ஒப்பந்த நிபந்தனையின்படி கத்துரு வினதையைச் சிறையிலிட்டாள். அவள் காஞ்சிபுரத்தை அடைந்து, ஆதிபிதேச்சுரத்திற்கு வடகிழக்கிலுள்ள முத்தி ஈசுவரர் கோயிலை வழிபட்டு, கருடனை மைந்தனாகப் பெற்றுச் சிறை நீங்கும் வரத்தைப் பெற்றாள். வினதையும் கருடனும் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டு அருள் பெற்றனர். சைவ சமயத்தைச் சார்ந்தவரும், அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவரும், ஏகாலியர் குலத்தவரும் ஆகிய திருக்குறிப்புத் தொண்டநாயனார் அன்புடன் வழிபட்டு முத்தி பெற்ற தலம்.

பராசரேசுவரம் :

இது காஞ்சிபுரத்தில் காந்தி சாலையிலுள்ள வழக்கறுத்தீஸ்வரர் கோயிலின்உள்ளே உள்ளது. வசிட்ட முனிவரின் புதல்வராகிய பராசர முனிவர், தமது பாட்டனார் ஆகிய வசிட்ட முனிவர்பால் பகைமை கொண்ட விசுவாமித்திர முனிவர், தமது தந்தைமார்களாகிய சக்தி முதலிய நூற்றுவரைச் சுதாசனன் என்னும் அசுரப் பிறப்படைந்த அரசனைக் கொண்டு, கொன்றுஒழித்த செய்தியைத் தன் தாயினால் உணர்ந்தார். அதனால் மிக்க துக்கமும் சினமும் அடைந்து, கொடியவர்களாகிய அசுரர்களை ஒழிக்க உறுதிகொண்டு, அசுரர்களைக் கொல்வதற்குரிய இரட்சோகனம் என்னும் யாகம் புரிந்து, பராசரர் இறைவனை வழிபட்டு அருள் பெற்ற தலம் இது,

திரிகாலஞானேசுவரம் :

இக்கோயில், காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்குள், மதுரன் தோட்டம் என வழங்கிய இடத்தில் அமைந்துள்ளது. முனிவர்கள் பலர் தாம் இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூன்று காலத்திலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ளும் அறிவு பெறுதற் பொருட்டு வழிபட்ட தலம். அண்மையில் இச்சிறிய கோயில் திருப்பணி செய்யப்பெற்று, நன்கினிது நடைபெற்று வருகின்றது.

சப்த தானம் :

முற்காலத்தில் அத்திரி, குச்சன், வசிஷ்டன், பிருகு, கௌதமர், காசிபர், அங்கிரா என்னும் ஏழு முனிவர்கள் முத்தி பெற விரும்பினர். அவர்கள் தமக்குப் பிரமதேவன் அறிவித்தபடி காஞ்சியை அடைந்து சிவகங்கையில் முழுகி, மஞ்சள் நதிக்கரையில், சார்ந்தாசயத்திற்கு

அருகில் தங்கள் பெயரால் ஒவ்வோர் இலிங்கம் தாபித்துப் பூசித்தனர். அந்த ஏழு இலிங் களும் அமைந்துள்ள கோயிலே 'சப்த தானம்' என வழங்கி வருகின்றது (சப்தம், சத்தம்-ஏழு).

**தக்கேசம் :**

இத்தலம் பிள்ளையார்பாளையத்தில் நடுத் தெரு, என்னும் கச்சியப்பன் தெருவில் உள்ளது. பிரமதேவனின் புதல்வனாகிய தக்கன் என்பவன், அகங்காரத்தினால் சிவபெருமானை இகழ்ந்து அவமதித்து, ஒரு வேள்வி செய்யத் தொடங்கினான். அங்ஙனம் செய்தலாகாது என்று தடுத்துத் ததீசிமுனிவர் அவனுக்குப் பல அறிவுரைகள் கூறினார். ஆயினும் அவன் கேளாமல் அவ்வேள்வியைச் செய்ய முற்பட் டான். அதனைகாணுவதற்குவந்த தன்மகளாகிய அம்பிகையையும் அவமதித்து இகழ்ந்தான். அதனால் வீரபத்திரரும், பத்திரகாளியும் தோன்றி, அவ்வேள்வியை அழித்து, அதற்கு வந்திருந்த தேவர்களையும் தண்டித்தனர். வீர பத்திரர் தக்கனது தலையை வெட்டி வீழ்த்தினர், பின்னர் அவன் ஆட்டுத் தலையைப் பெற்றான். அவன் தனது குற்றமுணர்ந்து அது தீருதற் பொருட்டுச் சிவலிங்கம் தாபித்து வழிபட்டு உய்திபெற்ற இடமே தக்கேசம் எனப்படும்.

**காயாரோகண ஈசுவரம் :**

இத்தலம் பிள்ளையார் பாளையத்தில், புதுப் பாளையத் தெருவின் கோடியில் வேகவதி ஆற்றின் கரையிலுள்ளது. இக்கோயிலுக்கு அருகே மாத்தூர்சுவாமிகள் மடம், மெய்கண் கண்டார் ஆதீனமடம் முதலியன உள்ளன. காசிவிநாயகர் கோயில், சிந்தாமணி விநாயகர் கோயில் என்பனவும், இவ்விரு மடங்களுக்கு அருகில் இருக்கின்றன. மனித வருடங்கள் 17,28,000 கொண்டது கிருதயுகம், 12,96,000 கொண்டது திரேதாயுகம், 8,64,000 கொண்டது துவாபரயுகம், 4,32,000 கொண்டது கலியுகம். ஆக 43,20,000 கொண்டது ஒரு சதுர்யுகம். இத்தகைய சதுர்யுகம் ஆயிரம்கொண்டது பிரம தேவருக்கு ஒருபகல். இம்முறையில் நூறு ஆண்டு கள் கழிந்தால் ஒரு பிரமதேவர் இறப்பார். ஒரு பிரமாவின் காலம் திருமாலுக்கு ஒரு பகலாகும். இம் முறையில் நூறு ஆண்டுகள் கழிந்தால் ஒரு திருமால் இறப்பார். இங்ஙனம் இருவரும் இறக்கவரும் ஒவ்வோர் ஊழியின் முடிவிலும், சிவ பெருமான் அவர்களைத் தம்முள் ஒடுக்கி, அவர்களின் உடலைத் தமது தோள்மேல் தாங்கி நடனம் செய்தருளுவார். சிவபெருமான், பிரம விஷ்ணுக்களின் காயத்தை ஆரோகணம் செய்து கொள்ளும் தலமாதலின், இதற்குக் 'காயாரோகணம்' எனப் பெயர் அமைந்தது. இங்குள்ள தீர்த்தம் 'காயாரோகண தீர்த்தம்' 'காயார் குளம்' என வழங்கும். இத்தலத்தில் மகா லட்சுமி இறைவனை வில்வத்தால் வழிபட்டுத் திருமாலைத் தனக்குக் கணவனாகப் பெற்றாள். தேவ குருவாகிய பிருகற்பதி பகவான் இங்கு இறைவனை வழிபட்டார். ஆதலின் வியாழக் கிழமையன்று, காயாரோகண தீர்த்தத்தில் நீராடி இங்கு வழிபடுபவர்கள் இம்மை மறுமை வீடு என்னும் எல்லா நன்மைகளையும் பெறுவார்கள். இயமன் இங்குப் பூசித்துத் தென்திசைக்குத் தலைவனாகும் பேறு பெற்றான். ஆதலின் இங்குள்ள காயாரோகண தீர்த்தத்தில் பிதிரர்கடன் செய்வது மிகவும் சிறப்பாகும்.

**சித்தேசுவரம் :**

இது காஞ்சிபுரத்தில், இராஜாம் பேட்டைத் தெருவில் உள்ளது. காமாட்சி யம்மை கம்பையாற்றங்கரையில் தவம் புரியுங் கால் மஞ்சள் காப்பணிந்து முழுகிய நீர், மஞ்சள் நீர்நதியாகப் பெருகியது. சிவபெருமான் மகிழ்ந்து அந்த நதிக்கரையில் இலிங்கமாகத் தோன்றியருளினார். அவருக்கு 'மஞ்சள்நீர்க் கூத்தர்' என்னும் திருப்பெயர் உண்டாயிற்று, அப்பெருமானைப் பற்பல சித்தர்கள் பூசித்து எண்ணிறந்த சித்திகளை அடைந்தார்கள். அதனால் சித்தேசர் என்னும் பெயர் இப்பெரு மானுக்கு ஏற்பட்டது. சித்தேசுவரர் திருமுன் பில், கச்சேரித் தெருவில் 'சித்த தீர்த்தம்' என்னும் கிணறு ஒன்று உள்ளது. அதில் ஞாயிறு, சனிக்கிழமைகளில் முழுகி வழிபடு பவர்கள், எல்லா நலன்களும் எய்துவார்கள்.

**அரிசாப பயந்தீர்த்த ஈசுவரம்**

இக்கோயில் நெல்லுக்காரத் தெருவின் தெற்கு வரிசையில் உள்ளது. முன்னொரு

காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் ஏற்பட்டது. திருமால் தேவர்களுக்குத் துணையாகச் சென்று அசுரர்களை எதிர்த்தார். அசுரர்கள் அஞ்சிப் பிருகுமுனிவரின் மனைவியும், இலக்குமி தேவியின் அன்னையுமாகிய, கியாதி என்பவள்பால் அடைக்கலம் புகுந்தனர். அசுரர்களுக்குத் துணை புரிந்ததனால் திருமால் தமது சக்கரப் படையை ஏவிக் கியாதியைக் கொன்றார். அதனால் பிருகு முனிவர் மிக்க சீற்றம் கொண்டு, நிலவுலகில் பத்து பிறப்புகள் அடையுமாறு திருமாலுக்குச் சாபம் கொடுத்தார். அதனால் திருமால் மிகவும் மனம் வருந்தி, காஞ்சியை அடைந்து திருவேகம்பரைத் தவம்புரிந்து வழிபட்டார், சிவபெருமான் வெளிப்பட்டு,"எனது அடியார்கள் இட்ட சாபத்தை மாற்றுதல் யார்க்கும் அரிது; அதனை அனுபவித்தே ஆதல் வேண்டும்; ஆயினும் எம்மை வழிபட்டதனால் நீர்அடையும் பத்துப் பிறவிகளும் உலகுக்கு நன்மை பயக்கும்" என்று அருளிச் செய்து, திருமாலின் அச்சமும் கவலையும் போக்கினார். அதனால் 'அரிசாபபயந் தீர்த்த ஈசுவரர்' எனப் பெயராயிற்று.

மதங்கேசம்:

இக்கோயில் நெல்லுக்காரத் தெருவின் கிழக்குக் கோடியில் இறையூழிய மருத்துவ மனைக்கு (Misson Hospital) எதிரில் உள்ளது, இங்கேயுள்ள சிவலிங்கம் மிகப்பெரியது. ஐம் புலன்களை அடக்கி ஆளும் ஆற்றல் பெறுதற் பொருட்டு மதங்கமுனிவர் வழிபட்ட தலமாதலின் இதற்கு மதங்கேசுவரம் எனப் பெயர் அமைந்தது,

அபிராமேசம்:

இக்கோயில் உலகளந்தார் சந்நிதித் தெருவில், சங்குபாணி விநாயகர் கோயிலுக்கு எதிரில் உள்ளது. திருமால் வாமனராகி மகாபலியை அழிக்கும் பொருட்டு இத்தலத்தை வழிபட்டார். தேவேந்திரனின் யானையாகியஐராவதத்திற்குப் பெண்யானையாகிய அபிராமம் பூசித்ததினால் இதற்கு அபிராமேசம் எனப் பெயர் வந்தது.



ஐராவதேசுவரம்:

இக்கோயில் நெல்லுக்காரத் தெருவின் மேற்குக் கோடியில், கச்சபேசுவரர் கோயிலின் எதிரில் உள்ளது. இராசசிம்ம பல்லவ மன்னன் (கி. பி 685—705) கட்டியது. இந்திரனின் வாகனமாகிய ஐராவதம் என்னும் வெள்ளை யானை இங்கு வழிபட்டு யானைகளுக்கெல்லாம் தலைமை பெற்றதுடன், தேவேந்திரனுக்கு வாகனமாகும் சிறப்பும் அடைந்தது.

இஷ்டசித்தீச்சரம்:

இந்தத் தலம், பெரிய காஞ்புரம் இராசவீதியில் இருக்கின்ற கச்சபேசுவரர் கோயிலின் உள்ளே இருக்கின்றது. ஒரு காலத்தில் பிருகு முனிவர் குலத்தில் தோன்றிய ததீசி முனிவர், குபன் என்னும் அரசனுடன் நட்புக் கொண்டு வாழ்ந்து வந்தார். ஒரு நாள் இவர்களிடையே அந்தணர்—அரசர் என்னும் இருவரில், யார் சிறந்தவர் என்று சர்ச்சை எழுந்தது. ததீசி அந்தணரே சிறந்தவர் என்றார், குபன் அரசரே சிறந்தவர் என்றான். இருவருக்கும் பூசல் மிகுந்தது. அரசன் வெகுண்டு முனிவரை வாளால் இரண்டு துண்டாக வெட்டினான். வெட்டுண்டு விழுங்கால், ததீசி முனிவர் மந்திர ஆற்றல் வல்ல அசுரகுருவாகிய சுக்கிரனை நினைத்தார். சுக்கிரர் தோன்றி வெட்டுண்ட உடலைப் பொருத்தி முனிவரை எழுப்பினார். "காஞ்சியிலிள்ள இஷ்ட சித்தீசப் பெருமானை வழிபட்டே, இறந்தவரை உயிர்ப்பிக்கும் மிருத சஞ்சீவினி என்னும் மந்திரத்தை யான் பெற்றேன். இஷ்ட சித்தீசுவரத்திற்குத் தென்பால் 'இஷ்ட சித்தி தீர்த்தம்' உள்ளது. அதில் மூழ்கிப் பிரமனும் சரசுவதியும் படைத்தற்றொழிலும், சத்தியலோக வாழ்வும் பெற்றனர். சூரியன், வேத உருவமான உடலும், ஆயிரம் கதிர்களும் பெற்றான். திருமாலும் இலக்குமியும் காத்தற்றொழிலும், வைகுண்ட வாழ்வும் பெற்றனர் அம்பிகை இறைவனின் திருமேனியில் பாதியாகக் கலந்தார். குபேரன் இழந்த கண்களைப் பெற்று இறைவனுக்குத் தோழனாயினன் துச்சருமேளன் என்பவன் ஊர்வசியின் இன்பம் பெற்றான். கண்ணபிரானின் புதல்வனாகிய சாம்பன் என்பவன், தொழுநோய் தீர்ந்து

நலமடைந்தான். நளனும், பஞ்சபாண்டவர்களும் இதில் மூழ்கித்தமது பகைவர்களை வென்று இழந்த அரசைப் பெற்றார்கள் இத்தீர்த்தத்தில ஞாயிற்றுக் கிழமைகளில் மூழ்குதல், சிறப்பாக வைகாசி மாசி கார்த்திகை ஆடி என்னும் மாதங்களில் மூழ்குதல் பெருநலம் பயக்கும் என்று சுக்கிராசாரியர் கூறினர். அதன்படி ததீசி முனிவர் இங்கு வந்து, இஷ்டசித்தீசத்தில் மேற்கு முகமாக எழுந்தருளியுள்ள சிவலிங்கத் திருமேனியை வழிபட்டு வச்சிரயாக்கை பெற்றனர், குபன் என்னும் அரசனையும் அவனுக்குத் துணையாக வந்த திருமாலையும் வென்றனர்.

**கச்சபேசுவரம்:**

இத்தலம் பெரியகாஞ்சிபுரம் இராஜ வீதியில், வடக்கு நோக்கிய கோபுர வாயிலுடன் விளங்குகின்ற, ஒரு சிறந்த பெரும் கோயிலாகும். இக்கோயிலின் உள்ளேயேயிருக்கும் இஷ்டசித்தீசுவரத்திற்குத் தெற்கில் கச்சபேசுவரர் எழுந்தருளியுள்ளார். ஒரு காலத்தில் ஊழியின் முடிவில் உலகங்கள் அழிந்தபோது இங்குச் சிவபெருமான் சோதிலிங்கமாகத் தோன்றி உலகங்களைப் படைத்தார். பிரமன் சரசுவதியுடன் அவரைப் பூசித்துப் படைத்தற்றொழிலில் தலைமை பெற்றான். தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது மத்தாகிய மந்தரமலை கடலில் அமிழாமல் மிதக்கும்படி, திருமால் ஆமையாக இருந்து தாங்கி, தேவர்கள் அமுதம் பெறத் துணை புரிந்தார். கச்சபம் என்னும் ஆமையின் வடிவம் கொண்டு திருமால் வழிபட்டதனால் இங்குள்ள இறைவனுக்குக் 'கச்சப ஈசுவரர்' என்ற பெயர் வந்தது. துர்க்கை அய்யனார் சூரியன் வைரவர் விநாயகர் முதலியவர்களும் கச்சபேசுவரரை வழிபட்டு அருள் பெற்றனர். இங்குள்ள 'சத்திய மொழி விநாயகர்' வேண்டுவார் வேண்டுவன எல்லாம் தரும் வள்ளலாக விளங்கி வருகின்றார். கச்சபேசுவரத்திற்கு முள்முருக்கமரம் தலவிருட்சம் ஆகும்.

**சுரகரேசுவரம் :**

இது திருவேகம்பநாதர் சந்நிதித் தெருவில் உள்ள கோயில். மிகப் பழமை வாய்ந்தது. பல்லவர் காலத்தது. தூங்கானை மாட அமைப்பை உடையது, ஒருசமயம் தேவர்கள் அனைவருக்கும் கொடிய வெப்பு நோயாகிய 'சுரம்' ஏற்பட்டது. அப்போது அவர்கள் அனைவரும் இங்கு வந்து சுரகர தீர்த்தத்தில் மூழ்கித் தமது சுரம் நீங்கப் பெற்றனர், சுராக்கன் என்னும் அசுரனை இங்குச் சிவ பெருமான் அழித்தருளினர். சுர நோயினால் வருந்துபவர்கள் சுரகரேசரை வணங்கினால் அந்நோய் நீங்கி நலம் பெறுவர்.

**தான்தோன்றீசுவரம் :**

இது சுரகர தீர்த்தத்திற்குத் தெற்கில் உள்ளது, இங்குள்ள சிவலிங்கம் சுயம்பு மூர்த்தமாகத் தானே தோன்றியது. ஆதலின் 'தான் தோன்றி ஈசுவரர்' எனப் பெயர் பெற்றார். வியாக்கிரபாதமுனிவர், வசிட்ட முனிவரின் தங்கையை மணந்து பெற்ற உபமன்யு என்னும் சிறுகுழந்தை, வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்தில் காமதேனுவின் பாலை உண்டு வளர்ந்து வந்தது. பின்னர் அது தன் தந்தையாகிய வியாக்கிரபாத முனிவரின் ஆச்சிரமத்திற்கு அழைத்துச் செல்லப் பெற்றது. அங்குப் பசுவின் பால் கிடைக்காமையால், நெல்லரிசி மாவை நீரில் குழைத்துக் கலக்கிப் பாலாகத் தாய் கொடுத்தாள், குழந்தை அதனை உண்ண மறுத்து, புலம்பி அழுது வருந்தியது. அக்குழந்தையாகிய உபமன்னியமுனிவர், பின்னர்த் தன் தந்தையார் உபதேசித்தபடி, இங்கு வந்து சிவபெருமானை வழிபட்டு, அவரால் திருப்பாற்கடலை அருந்துதற்கு அளிக்கப் பெற்றார். ''பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் அன்று ஈந்தபிரான்'' எனவரும் திருவிசைப்பாப் பாடல் இவ்வரலாற்றையே குறிக்கின்றது.

**மாண்டு கன்னீசுவரம் :**

இக்கோயில் பாண்டவப் பெருமாள் கோயிலுக்குத் தென்கிழக்கில் அரைக்கல் தொலைவில் உள்ளது. மாண்டுகன்னிப முனிவர் இங்கு வழிபட்டு, விண்ணுலக இன்பங்களை மண்ணுலகில் அனுபவிக்கப் பெற்றார். இங்குள்ள தீர்த்தம் ஐபரம்பையர் தீர்த்தம் என வழங்குகின்றது.

**வன்னீசம் :**

இது மாண்டு கன்னீசுவரத்திற்கு மேற்கே உள்ளது. இங்குள்ள இறைவனை வழிபட்டு அக்கினி தேவன் தேவர்களுக்குத் தரப்படும் அவிசைச் சுமக்கும் ஆற்றல் பெற்றான். வன்னி எனப்படும் அக்கினி தேவனால் நிறுவி வழிபடப் பெற்றமையால் இதற்கு வன்னீசம் எனப் பெயர் வந்தது.

**சவுனக ஈசுவரம் :**

இது வன்னீசத்திற்கு ஒரு பர்லாங்கு தொலைவில் உள்ளது, சவுனகர் என்னும் முனிவர் இங்கு வழிபட்டு அருள் பெற்றார்.

**அமரேசுவரம் :**

இது பெரிய காஞ்சிபுரம் நிமந்தக்கார ஒற்றைவாடைத் தெருவில் உள்ளது. ஒரு சமயம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. அப்போரில் தேவர்கள் வெற்றி பெறுமாறு இறைவன் செய்தருளினான். வெற்றி பெற்ற தேவர்கள், இறுமாப்பு எய்திச் செருக்குற்றனர். அவர்களின் செருக்கை அடக்க, இறைவன் ஓர் இயக்கனாக வந்து தேவர்களின் முன்னே ஒரு துரும்பை நட்டு, அதனை வெட்டுபவனே அசுரர்களை வென்ற வீரனாவான் என்று கூறினார், தேவர்கள் அனைவரும் எவ்வளவோ முயன்று பார்த்தும், அத்துரும்பை அசைக்கவும் இயலாதவர் ஆயினர். அந்நிலையில் அம்பிகை வெளிப்பட்டு இறைவனே இயக்கனாக வந்தருளிய செய்தியை உணர்த்தியருளினாள். தேவர்கள் தம் தவறு உணர்ந்து இங்கு இறைவனை வழிபட்டனர். அமரர் (தேவர்கள்) வழிபட்டதனால் இதற்கு அமரேசுவரம் எனப் பெயர் அமைந்தது. முப்பத்துமுக்கோடி தேவர்கள் வழிபட்ட ஈசுவரர் ஆதலின், இவருக்குத் திரிதச ஈசுவரர் என்றும் பெயர் வழங்கும். (திரிதசம்—முப்பத்துமூன்று).

**திருக்கச்சிமேற்றளி :**

இது காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியாகிய பிள்ளையார்பாளையத்தின் நடுவில் இருக்கின்றது. திருமால் தளி என்பது, திருமேற்றளி என வழங்குகின்றது. திருமால் ஒரு காலத்தில் சிவசாரூபம் பெற விரும்பித் தவம் புரிந்தனர். அப்போது அவருக்குச் சிவபெருமான் வெளிப்பட்டு ''வைவசுவத மனுவந்தரத்தில், இருபத்தெட்டாம் கலியுகத்தில், சீர்காழியில் திருஞானசம்பந்தன் தோன்றுவான், அவன் காஞ்சிக்கு வந்து எம்மைப் புகழ்ந்து போற்றித் திருப்பதிகம் பாடுவான், அதனைக் கேட்பதனால் நுமக்குச் சிவசாரூபம் எய்தும்'' என்று அருள் செய்தார், அங்ஙனமே திருமால் சிவசாரூபம் பெற்று மகிழ்ந்த தலம் இது. அப்பர், சுந்தரர் தேவாரப் பதிகம் பெற்ற சிறப்புடையது.

**அனேகதங்காவதம் :**

இது பெரிய காஞ்சிபுரம் புத்தேரித் தெருவின் மேற்குக் கோடியில், கைலாசநாதர் கோயிலுக்குப் போகும்வழியில், அதற்குத் தென்கிழக்கே காற் கல் தொலைவில் உள்ளது. அனேகபம் என்பது யானை. யானை முகத்தையுடைய விநாயகப் பெருமான், அனேகபேச்சுரன் எனத் தமது பெயரினால் இவ்விடத்து, இலிங்கம் நிறுவி வழிபட்டு அருள் பெற்றார். இறைவனின் அருளால் இரணியபுரம் என்னும் இடத்தில் இருந்த அசுரர்களைக் கொன்று, அவர்கள்பால் இருந்த ஆற்றலாகிய வல்லபை என்னும் சக்தியை மணந்தார். திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய திருப்பதிகம் பெற்ற அனேக தங்காவதம் என ஒரு தலம் வடநாட்டில் இருந்தலால், வேறுபாடு அறிவித்தற்கு இதனைக் கச்சி அனேகதங்காவதம் என வழங்குவர். இத்தலத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகம் ஒன்றுண்டு. இக்கோயிலிலேயே இசைஉலகில் அண்மைக் காலத்தில் பெரும்புகழ் பெற்று விளங்கியிருந்த நாயனாப்பிள்ளை என்னும் காஞ்சிபுரம் சுப்பிரமணியபிள்ளைஅவர்கள் நாள்தோறும் இறைவனை வழிபட்டுத் தங்கியிருந்து இசைப் பயிற்சி செய்து அதன்கண் பெரும் கலைத்திறன் எய்தப் பெற்றார் என்பர். ''பீடுபெறப் பெரியோரது இடம், கலிக்கச்சி அனேகதம்காப்பான் இடம்'' எனவரும் தேவாரத் திருமொழியை, இந் நிகழ்ச்சி மெய்ப்பித்ததாகப் பெரியோர்கள் கூறுவர்.

**கையிலாசநாதர் கோயில் :**

இது காஞ்சிபுரத்திலுள்ள கோயில்களி லேயே அனைவராலும் அறியப்பெற்ற, புகழ்மிக்க சிறந்த கோயிலாகும். இஃது அனேகதங்காவதத்திற்கு மேற்கில் காற் கல் தொலைவில்உள்ளது. திரிபுராசுரர்களை அழித்தற் பொருட்டுத் திருமால் தமது கூறுக ஆதிபுத்தன் என்னும் ஒருவனைப் படைத்து, அவனை நாரத முனிவருடன் அனுப்பி, "நீவிர் இருவரும் சென்று திரிபுர அசுரர்களின் சிவபக்தியைச் சிதைத்தால், அவர்கள் தமது தவமும் வலிமை யும் குன்றுவர். அவர்களைச் சிவபெருமான் அழிப்பர்'' என்று கூறி அனுப்பினர். அவ்வாறே அவ்விருவரும் செய்ததினுல் திரிபுராசுரர்கள், சிவபெருமானுல் சிரித்து எரிக்கப் பெற்றனர். சிவபக்தர்களாக இருந்த திரிபுராசுரர்களைக் கெடுத்து அழியச் செய்த பாவம், நாரத முனிவரையும், ஆதிபுத்தனையும், பற்றியது. அவர்கள் காஞ்சியை அடைய, இரும்பு மலை போல் இருந்த தமது பாவம், பருத்தி மலை போல் மெலிவடைந்தது கண்டு, அக்காஞ்சி நகரின் ஒருபகுதிக்குப் 'பருத்திக்குன்றம்' எனப் பெயரிட்டு, அங்கு இருந்து கொண்டு, அதற்கு வடகிழக்கில் சிற்பநலம் அமைந்த இக்கோயிலை அமைத்து வழிபட்டுத் தவம் புரிந்தனர். சிவபெருமான் வெளிப்பட்டு, ''எம் அடியவர்களைப் பொய்ந்நூல் போதித் தாயினும், பொருளாசை காட்டியாயினும் மயக்குகின்றவர்கள், நரகில் வீழ்ந்து வருந்து வர். கற்ப கோடிகாலத்தும் நீங்காத பாவத்தை அடைவர். நீவிர் அத்தகைய பாவம் புரிந்துள்ளீர்கள். ஆதலின் இத்தலத்தில் வலஞ்செய்யப் புகும் வாயிலையும், வெளிவரும் வாயிலையும் நாம் ஒரு சுருங்கையாகச் செய் வோம். அதிற் புகுந்து நீவிர் என்றும் எம்மை வலம் செய்துகொண்டு இங்கு வழிபட்டு வருவீர்களாயின் இறுதியில் நுமக்கு முத்தி யளிப்போம்'' என்று கூறி அருள்புரிந்தனர். அதனுல் நாரதமுனிவரும் ஆதிபுத்தரும் இங்கு வழிபட்டனர் என்பது வரலாறு.

இது காஞ்சியில் உள்ள வரலாற்றுப்புகழ் மிக்க, சிற்பத்திறன் செறிந்த பெருங் கோயி லாகும். இராஜசிம்மன் (கி. பி. 680—705) என்னும் பல்லவ அரசன் கட்டுவித்தது. திரு நின்றவூர்ப் பூசலார் நாயனுருக்கு அருள் செய்ய, இறைவன் அரசனின் கனவில் தோன்றிப் பிறகு தள்ளி வைத்துக் கொள்ளு மாறு கூறியது, இக்கோயிற் கும்பாபிஷேகத்தை யோகும். கைலாசநாதர்கோயில் ''திருக் கயிலையின் அமைப்பையும் அளவையும் அரு ளால் அறிந்து, அதற்கு ஏற்பக் கட்டபட்டதே யாகும்'' என்று அருட்டிரு விபுலாநந்த அடிக ளார் விளக்கியுள்ளார். சிற்பக் கலைத்திறனுக்கே ஒரு பெரும் நிலைக்களமாக, இக்கோயில் விளங் குதலை ஆராய்ந்துவியந்து அறிஞர்கள் பாராட்டி யுள்ளனர். பல்லவர் மரபைப் பழிவாங்க உறுதி பூண்டு வெற்றி கொண்ட இரண்டாம் விக்கிர மாதித்தன் (கி. பி. 733—746) என்னும் சாளுக்கிய மன்னன், இக்கோயிலைக் கண்டு மிகப் பெரிதும் வியந்து, இதனை அழிக்கச் சிறிதும் மனம் வராமல், ஏராளமான நன்கொடைகள் வழங்கிப் போற்றி மகிழ்ந்து சென்முன் என வரலாறு கூறுகின்றது. இதனுல் இக்கோயிலின் சிற்பக் கலைச் சிறப்பை யாவரும் உணரலாம்.

கைலாசநாதர் கோவில் நிறையக் கல் வெட்டுக்கள் இருக்கின்றன.* அவை கி. பி. 8-ஆம் நூற்றுண்டு முதல் 13-ஆம் நூற்றுண்டு வரை தமிழகத்தை ஆண்ட பல்லவர் சோழர் கல்வெட்டுகளாக இருக்கின்றன. அவற்றுள், இக் கோயிலைக் கட்டிய இராசசிம்மன் (680-705) கல்வெட்டுகளும், அவன் மகனை மூன்றும் மகேந்திரன், அவன் மனைவி ரங்கபதாகை முதலி யோர் கல்வெட்டுகளும் உள்ளன. பல்லவரை வென்று தொண்டை நாட்டை ஆண்ட முதற் பராந்தகன், இராசராசன் (985-1014), இராசேந்திரன் (1012-1044), முதற் குலோத் துங்கள் (1070-1120), ஆகியவரின் கல்வெட்டு கள் பலவாகக் காண்கின்றன. சோழர் காலத் தில் இக்கோயில், மாடவீதிகள், வெளிச்சுற்று, மடவளாகம் கமாடவீதி, மடங்கள் முதலிய வற்றையும், அளவிடற்கரிய செல்வத்தையும் பெற்றிருந்தது என்று இக்கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

**திரு அட்டபுயகரம்:**

இது செங்கற்பட்டு அரக்கோணம் கிளைஇருப் புப் பாதையில், காஞ்சிபுரம் நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில், ஆடிசன்பேட்டைத் தேர டிக்கு அருக்கில் உள்ளது ஆதிகேசவப் பெரு மாள், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக் கோலம், அலர்மேல் மங்கைத் தாயார், ககன

ஆகிருதிவிமானம், கஜேந்திர புஷ்கரிணி, சரபன் என்னும் அசுரனுடன் போர் செய்யப் பெருமாள் எட்டுப் புயங்களைத் தரித்த கோலம், கஜேந்திரனுக்குப் பிரத்தியட்சம், பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். அஷ்டபுஜம், அஷ்டபுயங்கம் எனவும் வழங்கும். 'அஷ்டபுஜர் கிருகம்' என்பது அட்டபுயகரம் என மருவி வழங்குகின்றது. கிருகம் என்பதன் சிதைவே, கரம் என அமைந்தது.

### திருத்தண்கா :

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து 2கல் தொலைவில் உள்ளது. விளக்கொளிப் பெருமாள் கோயில் என வழங்கும். சிலர் 'விளக்கடி கோயில்' எனத் தவறாக வழங்குவர். விளக்கொளிப் பெருமாள், தீபப்பிரகாசன், திவ்வியப் பிரகாசன், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், மரகதவல்லித் தாயார், ஸ்ரீகர விமானம், சரசுவதி தீர்த்தம். சரசுவதி தேவிக்குப் பிரத்தியட்சம். வேதாந்த தேசிகர் என்னும் வைணவ சமயப் பெருஞ்சான்றோர் திருவவதாரம் செய்த தலம்.

### திருப்பரமேச்சுவர விண்ணகரம்:

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. வைகுண்டப்பெருமாள் கோவில் என வழங்கும். பரமேச்சுவரவர்மன் என்னும் பல்லவ மன்னர் அமைத்த விஷ்ணுகோயில் ஆதலின், இதற்குப் பரமேச்சுவர விண்ணகரம் என்று பெயராயிற்று. விண்ணகரம் என்பது, விஷ்ணு கிருகம் என்பதன் மரூஉ ஆகும். இக்கோயிலில் பல்லவ வரலாற்றுச் சிற்பங்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. பரமபதநாதன்—மேற்கே திருமுக மண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். வைகுந்த வல்லித் தாயார்—குமுதவிமானம். கயிரவ தீர்த்தம். மேல்தளத்தில் சயனக்கோலமும். அதற்கு மேல்தளத்தில் நின்ற திருக்கோல உருவமும் உள்ளன, சனகாதிகளுடைய சாபம் அடைந்த வைகுந்த உலகத்தின் துவாரபாலகர்களாகிய சயர், விசயர் என்னும் இருவரும், பல்லவன் வில்லவன் என்னும் அரச குமாரர்களாய் உதித்து அரசாட்சி செய்து வருங்கால், இங்கு மகாவிஷ்ணுவைப் பூசித்து அருள் பெற்றனர் என்பது வரலாறு. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

> ''பல்லவன் வில்லவன் என்று உலகிற்
> பலராய்ப் பல வேந்தர் வணங்குகழற்
> பல்லவன் மல்லையர் கோன் பணிந்த
> பரமேச்சுர விண்ணகரம் அதுவெ''

என்பது பெரிய திருமொழிப் பாடற்பகுதி.

### திருவேளுக்கை:

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து 2 கல் தொலைவில் உள்ளது. ''வேள் இருக்கை'' என்னும் இரு சொற்கள் வேளுக்கையென மருவியது. வேள்-விருப்பம். இறைவன் விரும்பி எழுந்தருளி இருக்கும் இடம் என்பது பொருள். முகுந்த நாயகர் கோயில் என வழங்கும். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். கனக விமானம்—— கனக தீர்த்தம். முசுகுந்த வரனுக்கும் பிருகுமுனிவருக்கும் பிரத்தியட்சம். பேயாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம்.

### திருப்பாடகம்:

இது காஞ்சிபுரத்தில் உள்ளது, பாண்டவர் தூதர் கோயில் என வழங்கும். கண்ணபிரான் பாண்டவர்கள் பொருட்டுத் துரியோதனனிடம் அத்தினபுரிக்குத் தூது சென்றபோது, அவன் வஞ்சமாக அமைத்த ஆசனத்தில் இருந்து விசுவரூபம் எடுத்த நிலையில், மிகவும் பெருமை தோன்ற இருக்கும் தலம், பாடு—பெருமை, பாடு+அகம்—பாடகம். பாண்டவ தூதர். கிழக்கே திருமுகமண்டலம் வீற்றிருக்கும் கோலம், உருக்குமிணி, சத்தியபாமை, பத்திர விமானம், மச்சதீர்த்தம். ஜனமேஜய மகாராஜனுக்கும், அரீத மகாமுனிக்கும் பிரத்தியட்சம். பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கைஆழ்வார் மங்களாசாசனம்.

### திருநீரகம்:

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. ஜகதீசப் பெருமாள் சந்நிதியென வழங்கும். ஜகதீசன்,

கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம், நிலமங்கைவல்லி நாச்சியார்; ஜகதீச விமானம், அக்குரூர தீர்த்தம், அக்குரூரர்க்குப் பிரத்தியட்சம். இது உலகளந்த பெருமாள் கோயிலின் உள்ளேயுள்ள திவ்விய தேசங்களுள் ஒன்று. என்றும் பதினாறாக நீண்ட ஆயுள் பெற்ற மார்க்சண்டேயர் பிரளயக் காட்சியைக்காண வேண்டித் தவம் புரிந்து அவ்வாறு அருள் பெற்றது.

**நிலாத் திங்கள் துண்டம்:**

இது காஞ்சிபுரம்ஏகாம்பரேசுவரர்கோயிலில் உள்ளது. ''நிலாத் திங்கள் துண்டத்தான்' எனத் திருமங்கையாழ்வாரால் (2059) மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது. மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், நேரொருவர் இல்லாத்தாயார், புருஷ சூக்த விமானம். சந்திர புஷ்கரிணி, சிவனுக்குப் பிரத்தியட்சம்.

**திருவூரகம் :**

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. உலகளந்த பெருமாள் கோயில் என வழங்கும். மாவலிச் சக்கரவர்த்தியிடம் சென்று மூவடி நிலம் கேட்டுத் திரிவிக்கிரம அவதாரம் எடுத்து மூவுலகங்களையும் அளந்த நிலை. உலகளந்தபெருமாள்-மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், அமுதவல்லி நாச்சியார், சாரஸ்ரீகர விமானம்—சேட தீர்த்தம், உரகம் என்னும் ஆதி சேடனுக்குப் பிரத்தியட்சம். உரகம் என்னும் சொல் நீண்டு ஊரகம் என்று மருவியது. ஊரகம் என்னும் இந்த ஒரு திவ்விய தேசத்திலேயே திருநீரகம், திருக்காரகம், திருக்கார்வானம் என்னும் வேறு மூன்று திவ்விய தேசங்களும்கூட இருக்கின்றன.

**திருவெஃகா :**

இது சிறியகாஞ்சிபுரத்தில் உள்ளது.யதோக்த காரி சந்நிதி என வழங்கும். இத்தலத்து எம் பெருமானுக்கு வேகாஸேது என்று வடமொழியில் பெயர். அதன் ஒரு பகுதியாகிய "வேகா" என்பது "வெஃகா" என்று ஆயிற்று. பெருமாள் சரசுவதி தேவிக்குத் தாம் சொல்லியபடி அருள் செய்தமையினாலும், திருமழிசையாழ்வாரின் சீடராகிய கணிகண்ணர் என்பவர் 'பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்' என்றும், 'பைந்நாகப் பாய் படுத்துக்கொள்' என்றும் சொல்லிய வண்ணம் கேட்டு நடந்து அருள் புரிந்தமையினாலும், இவருக்குச் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' எனப் பெயர் ஏற்பட்டது என்பர். பொய்கையாழ்வார் அவதரித்த தலம். பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், மங்களாசாசனம்.

**திருக்காரகம் :**

இது, காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் உள்ள திவ்வியதேசம், கருணாகரன், தெற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், பத்மாமணி நாச்சியார். வாமன விமானம், அக்ராயதீர்த்தம், காரக முனிவருக்குப் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**திருக்கார்வானம் :**

இதுவும் காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலுக்குள்ளே உள்ளது. நவநீத சோரன்-கமலவல்லி நாச்சியார். மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், புஷ்கல விமானம், கௌரி தடாகம், பார்வதிக்கும் மகாபலி அசுவத்தாமன் ஆகியோருக்கும் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் (2059) மங்களாசாசனம்.

**திருக்கள்வனூர் :**

இது காஞ்சிபுரம் காமாட்சியம்மை கோயிலுக்குள் இருக்கின்றது. ஆதிவராகப் பெருமாள். மேற்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். அபயநாயகி நாச்சியார், வாமன விமானம், நித்திய புஷ் கரிணி. அசுவத்த நாராயணனுக்குப் பிரத்தியட்சம். பூமியைச் சுருட்டிப் பாதாளத்துக்கு எடுத்துச் சென்ற

இரணியாக்கனை வதைத்துப் பூமியை மீட்டருளிய நிலை. திருமங்கையாழ்வார் மங்களா சாசனம்.

**திருப்பவளவண்ணம் :**

காஞ்சிபுரத்தில் உள்ளது. பவளவண்ணப் பெருமாள்—பவளவல்லி நாச்சியார், பிரவாள விமானம்—சக்கரதீர்த்தம்—மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்—அசுவனி தேவர்களுக்குப் பிரத்தியட்சம். திருமங்கை யாழ்வார் மங்களா சாசனம் (2060), இக்கோயிலுக்கு அருகில் பச்சை வண்ணர் கோயில் இருக்கின்றது. (தொடரும்)

**தலபுராணக் கதைகள் :**


இங்கே குறிப்பிடப் பெற்றுள்ள தல புராணக் கதைகள் ஒரு சிலர்க்குப் பொருளற்றனபோல, இக்காலத்தில் தோன்றக்கூடுமாயினும், தொன்னெடுங் காலமாக மக்கட் சூழலில் வழங்கி வந்த கதைக் குறிப்புக்களைப் பதிவு செய்து வைத்த பெருமை, தலபுராணக் கவிஞர்களாகிய ஆசிரியர்களுக்கு உண்டு. சிறுகதை—தொடர்கதை—புதினக்கதை — துப்பறி கதை முதலியனவாக, இஞ்ஞான்று பல்வேறு இதழ்களில் வெளிவரும் பலதிறக் கதைகளை நோக்க, இத் தல புராணக் கதைகள் இழிந்தன வாகிவிடாமல், ஒருவகையில் உயர்ந்த குறிக்கோள்கள் உடையனவாகவே தோன்றுகின்றன. இவைகளிலும் நல்லுண்மைகள் பல விளக்கப் பட்டுள்ளன. ''வாரம்பட்டுழித் தீயவும் நல்லவாம் தீரக்காய்ந்துழி நல்லவும் தீயவாம்''. ஆதலின் இவற்றையெல்லாம் முழுதாகப் புறக்கணித்து விடுவது அறிவுடையோர் செயலாகாது. இக்கதைகள், எத்தனையோ பல நூற்றுண்டுகளாக, நம் மூதாதையர்களாற் சொல்லப்பட்டு வழங்கி வந்தன*வாதலின், இவைகளை ஏற்றபெற்றியுணர்ந்து போற்றி மகிழ்தல்நலம் பயப்பதேயாகும்.

— ஆசிரியர்.

---

(1) "In these anecdotes there is doubtless a large mixture of fable; but they are not on that account unworthy of being recorded; for it is both an authehtic and an important fact that such tales, whether false or true, were heard by our ancestors with eagerness and faith''.

—Lord Macaulay, Difficulties of Travelling.



★

தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டை ஸ்ரீ முத்துக் குமாரசாமி ஆலயத்தில் நிகழ்ந்த தூய்மைப் பரிசளிப்பு விழாவில், துணையாணையர் திரு கே.ராஜா BA.BL. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்

★

# சிந்தனைச் செம்மணிகள்*

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீன குரு மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

## முன்னுரை :

மெய்கண்ட நூல்களுள்ளே ஞானத்துள் ஞானமே உணர்த்துவன, திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் ஆகும். அவை முறையே மூலமும் உரையும் ஆம். அவ்வண்ணமே சிவஞானபோதமும் சிவஞான சித்தியாரும் மூலமும் உரைவிளக்கமும் ஆக வுள்ளன. மெய்கண்ட தேவநாயனர்க்குரிய மாணுக்கர் பலருள்ளே மிகச் சிறந்தவர் அருணந்தி தேவநாயனர். அவருக்கு முன்னரே பல மாணுக்கர் இருந்தனர். அம்மாணுக் கர்க்குப் பாடஞ் சொல்லியருளும் பொழுது தான் ''ஆணவம் என்பது யாது?'' என ஒரு வின எழுந்தது. அருணந்திதேவநாயனர் அவ்வாறு வினவும் வேளைக்கு முன், மாணுக்கர் பலர் சிவஞானபோதம் செவிமடுத்திருந்தனர் என்பது வரலாறு. அதனல் அவரை முதன் மாணுக்கர் எனல் எதனுலோ? மிகச் சிறந்த மாணுக்கர் எனற்குக் காரணம், சகலாகம பண்டிதராயும், ஆசிரியரது குலகுருவாயும், உயரிய அருள் நூலாகிய சிவஞானசித்தியாரை அருளியவராயும், பிறபலதகைமைகள் உடையவராயும் இருந்தமையே, காரணமாகலாம்.

## உரை நூல்கள் :

இச் சிவஞானசித்தியார்க்குப் பலர் எழுதிய உரைகள் உள்ளன. அவற்றுள் மறைஞான சம்பந்தரும், நிரம்ப அழகிய தேசிகரும் எழுதியவை, சிற்சில இடங்களில் அன்றி ஏனைய இடங்களிலெல்லாம் ஒற்றுமை பெரிதுடையன. சிவாக்கிர யோகிகள் உரை, வடமொழிப் பிரமாணங்களை யுடையனவாய்ப் பெரும் பாலும் உண்மை விளக்கம் கொண்டது. இது கற்போரை ஆகம ஞானத்தராக்குவது. முன்னிரண்டும் சங்கற்ப நிராகரணப் பகுதியைப் பொருத்திக் காட்டி விளக்குவன. இது சிவாகமப் பகுதியைக் காட்டித் தெளிவிப்பது. மறைஞானசம்பந்தரும் சிவாகமப் பெயர் மட்டும் கூறினர். யாழ்ப்பாணத்து, ஞானப் பிரகாச முனிவர் உரை அவரே பாடஞ் சொன்னல் அன்றி விளங்காத் தன்மையது. பல இடங்களிற் பிறர் உரைக்கு வேறுபட்டும் மாறுபட்டும் இருப்பது இது வடமொழி வல்லாராயும், இதனெடு சைவ சித்தாந்த சாத்திர ஆராய்ச்சி மிக்கவராயும் இருப்பவரே. அதனைக் கற்றறிதல் கூடும்.

சிவஞான முனிவர் உரை இக்காலத்திற் போற்றிப் படித்து வரப்படுகின்றது. அதில் நூலாசிரியர் கருத்திற்கு வேருய உரைகள் மிக்குள்ளன. அவரது பொழிப்புரையையே

---

* காஞ்சிபுரம் திருக்கயிலாய பரம்பரை, தொண்டை மண்டல ஆதீனம், மெய்கண்ட சந்தானம், ஞானபீடத்துக் குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் அனுப்பி வைத்தருளிய ''அருளுரை'', இங்குச் ''சிந்தனைச் செம்மணிகள்'' என்னும் தலைப்பில் வெளியிடப் படுகின்றது — ஆசிரியர்.

சிறிது கூட்டியும் மாற்றியும் பதவுரையாக்கப் பட்டது சுப்பிரமணிய தேசிகர் உரை. சிவஞான முனிவருரையைத் தெளியவுணர மாட்டாதார்க்குப் பதவுரை சிறிது விளக்கஞ் செய்யும். இங்குச் சிவஞான முனிவர் உரையின் உண்மையை ஆராய்ந்துணர்ந்து கொண்ட முடிபுகளுட் சிற்சிலவற்றை எழுதுகின்றோம். இவைகள் சிவஞான முனிவரரின் உரையினைப் பயிலும் மாணுக்கர்களின் சிந்தனைத்திறனைத் தூண்டி, அவர்களின் ஆராய்ச்சிக்கு மிகவும் பயன்படும் என நம்புகின்றோம்.

## ஆராய்ச்சிக்குக் காப்பு :

"ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத் தன் நால்வாய் ஐங்கரத்தன்" என்றமையால் 'வாரணத்தன்' என்றே இருந்ததாதல் வேண்டும். அது 'வாரணத்தின்' என்று பிழைபட்டது. வாரணமுகத்தன் என்று உரைத்ததும் அதுவே உண்மைப்பாடம் என நிறுவும்.

காப்புச் செய்யுளின் விசேடக் குறிப்பினுள், " 'இருசெவியன்' என்றது இசையெச்சத்தால் 'இரண்டு முறம் போலும் செவியன்' எனப் பொருள் தந்து நிற்றலின், ஒருகோடு முதலியன போலப் பிறிதினியையு நீக்கிய விசேடணம் ஆதற்கு இழுக்கின்மை யுணர்க" என்று எழுதினர்.

(2) இரு செவி என்பது, எண்பற்றி நின்ற பண்புத் தொகை. ஒரு பொருள், முச்சுடர், நான்மறை, ஐயறிவு, அறுசுவை, எழுபிறப்பு எண்குணம் முதலிய பண்புத் தொகை நிலைத் தொடர்களை விரிப்புழிப் பண்பைக் குறிக்கும் சொல்லுக்கும் பண்பியைக் குறிக்கும் சொல் லுக்கும் நடுவில் எப்பெயர்ச் சொல்லும் தொக்கு நிற்றல் இல்லாது. அப்பண்பு குறித்த சொல்லைப் பண்பியைக் குறித்ததாக்கி இரு பண்பியின் அபேதத்தைக் காட்டும் 'ஆகிய' என்னும் பெயரெச்சத்தை விரித்துரைப் பதே இலக்கண மரபு. 'இருசெவி' என்னுந் தொடரில் 'இருமை' என்னும் பண்புமொழி அபூரணமாய் 'இரு' என நின்றது. அது செவி,



என்னும் பெயர்ச் சொல்லொடு செறிந்து, பிரிக்கலாகாததாய் வழங்கப்படுகின்றது. 'இரண்டு' என்பது பண்பி, இருமை என்பது பண்பு.

'இரு செவி' என்றது இருமையாகிய செவி பென விரியாது. இருமை செவி யாகாது. செவி இருமை யாகாது. செவியினிருமையும் செவியும் வேறே. செவி பண்பி. இருமை பண்பு, பண்பைப் பண்பியாக்கிப் பண்பியொடு சேர்த்து(அபேதம் காட்ட) விரிப்பத் தொக்கனவே பண்புத் தொகை.'சாரைப்பாம்பு' என்பது சாரையாகிய பாம்பு என விரிக்கப்படும். இரு செவி என்பது இருவாகிய செவி என விரியாது. இருமையாகிய செவி எனிலோ செவியும் செவியினிருமையும் முறையே குணியும் குணமும் ஆகிக், குணமாகிய குணி எனப்படுங் குற்றமுடையதாம். ஆதலின் அக் குணவாசகக் குறிப்பையறிந்து, குணி வாசகமாக்கிச் செவி என்ற குணி வாசகத் தோடு கூட்டி இரண்டாகிய செவி எனல் வேண்டும்.'ஐம்பாலறியும் பண்புதொகுமொழி' என்னும் தொல்காப்பியத்திற்குத் தக, இரண் டாகியசெவி எனலே முறை. அம்முறை பிறழ்ந்து விரித்துரைப்பது இலக்கண மரபுக்கு மாறும் வேறும் ஆகும்.

இரு செவி என்றது இரு முறம் போலும் செவி எனப் பொருள் பயக்குமோ? பண்புத் தொகைக்கு நடுவே இசையெச்சம் கொள்ள நிற்குமோ? 'தண்ணீர்' என்றதன் இடையில் இசையெச்சம் எவ்வாறு கொள்ளலாகும்? 'அறுசுவையும்' 'இரு செவியும்' அளவைப் பண்புத் தொகையே. சுவையாறு செவி இரண்டு என்னும் பொருளன்றிப் பிறிதொரு பொருள் பயவா அவை. முறச்செவி எனின் முறம் போலுஞ் செவி எனலாம். இரு முறச்செவி எனின், இருமுறம் போலும்செவி எனலாம்.இருசெவிஎன்றால் இரு முறம் போலும் செவி என்னும் பொருளை எவ்வாறு கொள்ள லாம்? இசையெச்சத்தின் இலக்கணம் யாது?

(3) 'அறுவகைச் சமயத்தோர்க்கும்' என்றதை 'அறுவகைச்சமயத்து ஓர்க்கும்' என்று பிரித்துப் பொருளுரைத்தார்.

(4)' 'ஆகமத்தே அருளினல்' என்று கொண்டு (இறைவனூ லெனப்படும் வேதாகம மாகிய) சிவாகமத்தின் அநுபவம் உடைய தேசிகர் அருளிச் செய்யும் உபதேசம் என்று எழுதினர்.

(5) 'விகற்ப முன்ன' என்புழி நிருவி கற்பம் எனப்பொருள் கொண்டும், 'விகற்பம் என்றது தலைக்குறை' என்றும் எழுதினர். இது நூலாசிரியர் கருத்துக்கு முரண்பட்டது. 'கண்டபொருளை' எனத் தொடங்கிய அடுத்த செய்யுளில் 'அவ்விகற்ப வுணர்வு' என்னுஞ் சுட்டின் பொருளும், அதற்குரைத்த இலக்கண மும் நோக்குவார்க்கு, அது போலியுரையும் முரணுரையும் ஆதல் நன்கு புலப்படும்.

1. பெயர்—நச்சினர்க்கினியர்
2. சாதி—மறையவர்
3. குணம்—நல்லவர்
4. கன்மம்—ஓதுவார், உரையாசிரியர்
5. பொருள்—செல்வர்

எனப் பெயர் முதலியன கூறி, இவை ஐந்தும் உண்டு அவ்விகற்ப உணர்வினுக்கு' எனச் சுட்டிய ஆசிரியரது உட்கோட்கு முரணக நிர்விகற்பம் என்றதும், அதற்குள்ள இலக்கணக் குறிப்பு இஃதென்றதும், நம் தலைக்குறையே போலும் !

(6) 'தான் முதல்ஈறுமாகி' தான் (அவனே) முதல் (உலகிற்கு முதற் கடவுள்) என்றும், ஈறும் ஆகி (அவ்வுலகம் ஒடுங்குதற்கு ஏது வாய் நின்ற சங்காரகாரணனே) என்றும் உரைத்தார். தானே என்னும் பிரிநிலை யேகாரம் விகாரத்தாற்ருெக்கது. ஈறு ஆகு பெயர். உம்மை சிறப்பு. ஆகி என்பது பெயர்.

'ஒருவன் வேண்டும்' என்புழி ஒருவனை என் னும் இரண்டாவது விகாரத்தால் தொக்கது. 'மருவிடும்' மருவு வித்தல்-முன்போலவே தோன்றச் செய்தல். 'குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்' என்ருற்போல வில் விகுதி விகாரத்தாற் ருெக்கது. இதற்கு இவ் வுரையிற் பொருத்தமாக எழுதப்பட்டுள்ளது. 'தான்' என்பதற்குத் 'தருபவன்' என்பதும் 'உலகம்' என்பதும் பொருளாகும். 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி' ஆதி யாம் பாதமலரும் அந்தமாஞ் செந்தளிரும் ஆதல் அறியப்பட்ட உண்மையே. ''மற்ருெரு கடவுள் இத்தைத் தருதலால் ஆதியாகச் சாற்றலும் ஆகும். 'மாயையினுள்ள வஞ்சம் வருவது போவதாகும்.'' ''தோற்றமும் நிலையும் ஈறும் மாயையின் தொழில்.'' ''இலங்கிய தோற்றம் நிற்றல் ஈறு இவை இசைதலால்'' ''இப்பூதாதி யெல்லாம் விதிப் படி தோற்றி மாயக் காணலான்'' ''உயிரவை ஒடுங்கிப் பின்னும் உதிப்பதென்'' என்ப வற்ருல், தான் முதல் ஈறுமாகி என்றதன் பொருள் நிச்சயப்படும். ஆக்கிடும் அதிகாரத் திற்கு அழிவினை (43) என்றதற்கு இவ்வுரை பொருந்தாது. அதிகாரம்-பைசந்தி முதலிய வாக்கு மூன்று. அதிகரித்தது அதிகாரம். சூக்குமை அல்லாத பிற மூன்றும் அழியும். சூக்குமை தன் அதிகாரத்திற்குத் தானே அழிவை ஆக்கும் எனலே மெய்ப் பொருள்.

(7) ''பண்ணுவது எங்கே நின்று'' (49) ''நிலை செயல்'' (50) இங்குப் பண்ணுதல் செயல்; நின்று நிலை எனக் கொள்ளப்பட்டன. ஆசிரியர் கருத்து இதுவே. இரண்டிற்கும் விளக்கமாக முறையே 'கற்ற நூற்பொருளும்' எனத் தொடங்கும் பாடல் (நின்றனன் என) நிலையையுணர்த்தியும், ''உயிரவை யொடுங்கிப் பின்னும்'' எனத் தொடங்கும் செய்யுள் (பண்ணுதல் ஆகிய) செயலையுணர்த் தியும் நிற்றல் காண்க. காணின், நிலைசெயல் என்பது உம்மைத் தொகை யெனவும், நிலையும் செயலும் என விரிக்கப்படும் எனவும் விளங்கும். இவற்றை உரையாசிரியர் எவரும் விளக்காதது ஏனே? சிவாக்கிரயோகிகள் 'சீலமோ உலகம்போலத் தெரிப்பரிது' என்றதன் கருத்தில், ''மேலகர்த்தாவினுடைய நிலைக்கும் செயற்கும் உதாரணம் உரைத்தல்'' என் றெழுதியருளினர். அதுசாலச் சிறந்தது. ஏனைய உரையாசிரியர்கள், இந்நிலை செயல் இரண்டற்கும் இருவேறு திருவிருத்தம் அமைத்த வுண்மையைப் புலப்படுத்தினர் களில்லை.

(8) அவ்வகையே ஆறாவது சூத்திரத்திலும், அசித்துக்கும் அசத்துக்கும் ஒவ்வொரு திருவிருத்தம் ஆசிரியர் அருளினர். அதனை உணராது பிழையுற உரை வரைந்திருப்பது, கற்போர்க்கு நற்றெளிவின்மையை ஆக்குகின்றது.

(9) 'மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவம் ஆகும்' என்பது முதல் வாக்கியம். 'ஆய ஆணவம் அகன்ற அறிவொடு தொழிலை ஆர்க்கும்' என்பது இரண்டாவது வாக்கியம். ''நாயகன் எல்லா ஞானத் தொழில் முதல் நண்ணலாலே, காயமோ மாயை அன்று காண்பது சத்திதன்னால்'' என்பது மூன்றாவது வாக்கியம்.

இத் திருவிருத்தத்தின் பொருள்: நாயகன் திருவுருவம் சிவஞானத் திருமேனி, மாயாகாரிய தேகம் அன்று. அது ஆணவ மலத்தைப் பற்றிய உடம்பு. ஆணவம் வியாபக ஞானத்தையும் கிரியையும் மறைக்கும். மறைப்பதாய ஆணவ விருளைச் சிறிது நீக்கும் (விளக்கு போன்ற) மாயையின் காரியமான தேகம், சர்வ வியாபியாய நாயகனுக்குக் கூடாது. அவனுக்கு ஞான மேனியே அன்றி வேறு தேகம் இல்லை. மாயா காரியமான நம் தேகத்திலே அவன் ஞான மேனி கொண்டே இருக்கிறான் என்பது. இதற்குச் சிவஞானமுனிவர் கொண்ட பொருள் அதிவிசித்திரமானது. அநர்த்தமும் ஆயஅதிற் 'பற்றி' என்பது வினையெச்சம், பெயர் அன்று! ஆர்க்கும் என்றது வினை முற்று. ஆணவம் எழுவாய். ஆர்க்கும் பயனிலை. ஆர்க்கும் நாயகன் எனப் பெயரெச்சப் பொருள் உரைத்தது குற்றமேயாகும்.

''ஒன்றதாய் அநேக சக்தி
யுடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்றன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று, போத்திருத் துவத்தை
நிகழ்த்திச் செம்பினிற் களிம்பேய்ந்து
என்றும் அஞ்ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே''

என்னும் திருவிருத்தத்தின்கண், ஆணவம் அறிவு தொழில்களை ஆர்க்கும் என்றதும், அதுவே இங்குக் கூறப்பட்டது என்றதும், உணரின், முனிவர் உரையின் முரண்பாடு நன்கு புலப்படும். ஈரிடத்தும் நூலாசிரியர் கருத்து வேறுபடல் இல்லை.

(10) ஆறாவது சூத்திரப் பொருளையும், முனிவர் உரைகொண்டு பலரும் பிழைபடச் சொல்லியும், எழுதியும் வருகின்றனர்.

'' உணருரு வசத்தெனின் உணரா தின்
மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே ''

என்பதன் உரையை ஆராய்தல் அறிஞர் கடனாகும். இச்சிவஞான சித்தியார் சிவஞான போதத்தின் சூத்திரப்பொருளை உணர்த்தும் உண்மைக்கு வேறாகச் சிவஞானமுனிவர் உரை எழுதினர். இரண்டன் பொருத்தம் இது :—

(1) உணர்உரு (வோ) — ஈசன் அறிவுறும் பொருளோ? (2) உணரா (த) தோ—அறிவுறுதவனோ என்னின், (3) அறிபொருள் (-அறியப்படுபொருள்) அசித்தும் அசத்தும் ஆம்.

(உ) அறியாதது (—அறியப்படாத பொருள்) இன்று (—சூனியம்) ஆம்.

இவற்றுள் ஒன்று (1) என்னும் எண்ணிடப்பட்டன பொருள் வேறுபாடில்லாதன. இரண்டு (2) என்னும் எண்ணிடப்பட்டனவும் ஒரு பொருளன. (3) இருதிறன் அல்லது— (3) (எங்கும் செறிசிவம்) இரண்டும் இன்றி (4) சிவசத்து ஆம் என இரண்டு வகையிலும் இசைக்கும் மன்னுலகு-சித்தொடு சத்தாய் நிற்கும்.

இவ்வாறுணரின், சித்தியாரிற் குறித்த இருவகை (சிவமும்), சித்தும் சத்தும் ஆம். சித்தியாரிற் குறித்த சித்தும் சத்தும் சிவஞான போதத்திற் குறித்த சிவமும் சத்தும் அன்றி வேறில்லை. சிவஞான முனிவர் உரையிலோ ஒருவாற்றான் அறியப்படாமையும், ஒருவாற்றான் அறியப்படுதலும் ஆகிய இரண்டு வகையாலும் சிவசத்தாம்

எனக் கூறுவர் மெய்யுணர்வினிலே பெற்றுயர்ந் தோர் என்றுளது. 'இரண்டு வகையின் இசைக் கும்' என்றதன் விளக்கம் சித்தியாரில் சித்தோடு சத்தாய் நிற்கும் என்பதே. முனிவர் 'என இரண்டு வகையில்' என்றிருத்தலே என இசைக்கும் என்று கொண்டுரைத்தார். வகையிரண்டனையும் நூலாசிரியர்சொல்லாதனவாகவே உரைத்தார். ஒருவாற்றான் அறியப்படாமையும், ஒரு வாற்றான் அறியப்படுதலும்' என்று எவர் எங்குச் சொன்னர்.

'பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவாவாம் இல்லிறப்பான்கண்' என்ற திருக்குறளில், என நான்கும் இகவாவாம் என்று இயைதலே மாற்றி எனஇகவா என்றே என ஆம் என்றே இயைத்துப் பொருள் கோடல் குற்றம். இல்லிறப் பான்கண் நான்கும் இகவாவாம் என்றலே ஆசிரியர் கருத்து. வேறுயாதும் பொருந்தாது. 'என நான் கும் என்புழிப் பகையெனப் பாவமென அச்ச மெனப் பழியென நான்கும் என்று எணணுப் பொருட்டாய் 'என' நின்ற அந்நான்கன் பெயரும் புலப்படுத்தும். 'என' என்ற சொல் லின் பின்னர்த் தொகைப் பெயரும் முன்னர் அத்தொகையின் வகைப் பெயரும் நிற்றல் முறை. சிவசத்தாமென இரண்டுவகையின் மன்னுலகு இசைக்கும் என்றதும் அம்முறை நின்றதே. 'என' என்பது இசைக்கும் என்ற தைத்தழுவுதல் பொருந்தாது. இரண்டுவகையின்

சிவத்தாம் என இசைக்கும் எனச் சொல் வகை செய்தல் பொருந்தாது, அதுவே பிழை படவுரைக்க ஏதுவாய் நின்றது. 'பகை பாவம் அச்சம் பழியென நான்கும் இகவாவாம் இல் லிறப்பான்கண்' (146) என்புழிப்போல 'என் னும்' என்றே.

மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே ஏமம் படைக்கு (766)''

என்புழி 'என இந்நான்கு' என்றது போல 'என இவ்விரண்டு வகையென்றே;

''ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையான் நீளும் குடி'' (1022)

என்புழிப் போல, என்று சொல்லப்பட்ட இரண்டு வகையிலும் என்றே உரைப்பது நன்று. (27, 43, 111, 168; 334, 674, 939, 950, 1042, 1216, 1252, 1257 ஆகிய எண் ணுள்ள திருக்குறள் பரிமேலழகர் உரையை நோக்கிக் காண்க).

சிவஞான சித்தியாரில், 'எங்கும் செறிசிவம்' என்னும் எழுவாயும், 'நிற்கும்' என்னும் பயனிலை யும் அதன் ஆசிரியர் உணர்த்தினர். அவ்வாறு சிவஞானபோதத்திலும் அமைய வாக்கியம் அமைத்துக் கொள்ளல் நன்று. உணருருவோ? உணராததோ? உணருரு அசித்தும் அசத்தும் ஆம்; உணரா(த)து இன்மையாம். உணருருவும் உணராதும் ஆகிய இருதிறனும் அல்லது (-எங் கும் செறிசிவம்) சிவமும் (-சித்தும்) சத்தும் ஆய் நிற்கும். இப்படிக் கொண்டு நோக்கின், சிவசத்தாம் என இரண்டு வகையின் இசைக்கப் படும் சிவம், உணர் உருவாய் அசித்தும் ஆகாது. அசத்தும் ஆகாது. உணராததாய் இல்லதும் ஆகாது என்ற பொருள் பயக்கும்.

சிவஞான சித்தியாரிலும், ஆறுவது சூத்திரத் திற்குச் சிவஞான முனிவர் எழுதிய உரை பொருந்தாப் பொருள்கோளே. 'தம் பொருள் என்ப தம்மக்கள்' என்புழித் திணைவழு வுண்டோ? சொல்லெச்சமாக ஒன்றையும் வருவித்தல் வேண்டா.

1- அறிபொருள் அசித்தும் அசத்தும் ஆகும்.
2. அறியாதது இன்றும்.
3. அந்த இருதிறனும் அல்லது (-எங்கும் செறி சிவம்),

இருதிறன்:- 1. அறிபொருள். 2. அறியாதது, இருதிறனல்லது. 3. சிவசத்து (சித்தோடு சத்தாய் நிற்பது) இம்மூன்றும் முறையே அழி பொருள், பொய்ப்பொருள், மெய்ப் பொருள் எனப்படும். இப்படிப்படும் பாகுபாடு தொல்லை மரபே. இற்றைப் படைப்பன்று. ஸ்ரீசுவாமி நாததேசிகர் அருளிய தசகாரியம் 1, 4, 8 காண்க. திருவுந்தியாரில் சொல்லும் பொருள், சொல்லாத பொருள், இவை அல்லாத பொருள் என்றமை அறிக. 'செய்ரறு சீவன் உண்டேல் தெளிந்த முப்பொருளுந்தேரும் உயிர்மலம் கன்மம் கர்த்தா உபாதானம் ஐந்தும் மெய்யே.

சிவம் (சித்து) சத்து என இரண்டு வகையில் மன்னுலகு இசைக்கும். இவ்வாறு முதல் நூலின் வாக்கியத்திற்குத் தகக்கொள்க. அருணந்தி தேவநாயனர் இப்படிக் கூருமல், ஈசன்மேல் வாக்கியத்தை வைத்து அமைத்தார். அவ்வமைப்புக்குத் தக, ஈசன் (எங்குஞ் செறி சிவம் (உண நருவும் உணராததும் ஆகிய) இரண்டும் இன்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும் என்ருர். சிவம்-(ஈசன்) நிற்கும். அறிபொருள் என்றது சுட்டியறியப்படும் பொருளே. எங்குஞ் செறிசிவம் (ஈசன்) சுட்டிப்றியப்படும் பொருளா காமையுணர நின்றது. அஃதாவது சருவ வியாபியாய பொருளைச் சுட்டியறியாது. வியாபியாய் நின்றறிதல் வேண்டும் என்றதாம். ஆதலாற்ருன் 'எங்குஞ் செறிசிவம்' என்ருர். 'அசித்து' என்றதை விளக்கும் ஒரு திருவிருத்தமும் 'அசத்து' என்றதை விளக்கும் ஒரு திருவிருத்தமும் கூறியருளிய ஆசிரியர் கருத்தறியாது, எழுதியதும் பொருத்தமில்லாத பொருளுரைத்ததும் ஆண்டுணர்தல் அறிஞர்க்கு இயலும். அடுத்த திருவிருத்தத்தில் 'அசத்தும் என்பர்' என்றதை நோக்கின், 'அசித்தாம்' என்றிருத்தல் கூடுமேயன்றி 'அசத்தாம்' என்றிருத்தல் கூடாது. 'அசித்தசத்தாம்' என்றதே (வைப்பு முறைக்குரிய) பாடம். முன் அசித்தும் பின் அசத்தும் அமைத்த முறையே, அடுத்த இருதிருவிருத்தமும் அமைந்தவாறறிக.

'அறிபொருள்' 'சுட்டியுணர் பொருள்' என்றமையும், 'ஈண்டு ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம்' என்ற சிவஞான போதப் பொழிப்புரையும், நோக்கித் தெளிக. இவற்ருல் அசித்தும் அசத்தும் 'அவன் அவள் அது எனும் இவை' யெனப்புலப்படும். படவே, அவன் அவள் அது என்னும் அசித்தும், அது என்னும் அசத்தும் ஆகிய இரண்டும், சுட்டி உணர்பொருள் எனப் பட்டமை தெளிவாம். இப்படி உணரப்படாதது சூனியம் என்க. அசித்து, அசத்து, சூனியம் மூன்றும், முறையே வெவ்வேறு ஆயதிருவிருத்தம் மூன்ருலும் உணர்த்தப் பட்டன. (1) உண்டு போல் இன்ரும் பண்புடையனவற்றிற்கு எடுத்துக் காட்டிய இந்திரமாசாலம், கனு, பேய்த்தேர் முதலியன, அசத்தாய உலகமும், 'அது' எனச் சுட்டியுணரப்பட்ட முப்பொருளே. (2) (1) ஆவதும் அழிவதுமாகி வருதல் (2) அறிவுதானும் தாவல் (3) தனுகரண புவன போகங்களை மேவல் (4) மலங்களாகி விரவல் (5) வேறுமாகி ஓவல் என்ற எல்லாம், ஒருத்தன் ஒருத்தி ஒன்று என்று சுட்டியுணரப் படும் பொருள்களே. அவை சித்துப் பொருளும் ஆகும். ஆயினும் அசித்தாதலை ஐந்து காரணங் காட்டி உணர்த்தினர் ஆசிரியர். (3) 'உணராது இன்மையின்' 'அறியாத தின்ரும்' என்று, இரு நூலிலும் உள்ளது. அதனை 'உணராத பொருள் சத்து' என்னின் எனத் தொடங்கும் திருவிருத்தத்தால் உணர்த்தினர். அதனை விளக்குவதற்கு, 'வானத்திணரார் பூந்தொடையும் யாமைக்கு எழுமயிர்க்கயிறும் போலும்' என்ருர். இந்திர மாசாலம், கனு, கழுதிரதம் எனபன உண்டு இன்று என்னும் இரண்டற்கும் உரியன. 'வானத்திணரார்பூந்தொடையும்யாமைமயிர்க் கயிறும்' இலலையென்னும் ஒன்றற்கே உரியன.

வானத்திணர்ப்பூவும் இல்லை. அதனல் தொடையுமில்லை. யாமைக்கு மயிரும் இல்லை. மயிராற் கயிறும் இல்லை. இவை சூனியம். இந்திரமாசாலம் முதலியன சூனியம் அல்ல. உண்டு போல் இல்லையாம் பண்பினவாம். ஆகவே அவை சத்து ஆகித் தோன்றி அசத்தாயின. அறிவு (சித்து) ஆவதாய் வருதலும், அழிவதாய் வருதலும், ஒன்று விட்டு ஒன்றைத் தாவுதலும், தநுகரண புவன போகங்களாகி மேவுதலும், மலங்களாகி விரவுதலும் வேறுமா யோவுதலும் உடையது. அதனல் சுட்டியுணரப்படுகின்றது. படவே அசித்தாகின்றது.

சிவஞான போதத்திலும் சித்தியாரிலும் அதிகரணங்கள் வேறுபடவில்லை. ஆருவது சூத்திரத்தின் உரையில் மட்டும், அதிகரணம் இவ்விரு நூலிலும் முறையே இரண்டும் மூன்று மாயிருக்கின்றன. சிவஞான போதத்திலே 'உணருரு அசத்து' என்பதற்கு ஓர் அதிகரணமும், 'உணராது இன்மையின்' என்றதற்கு ஓர் அதிகரணமும், 'இருதிறன் அல்லது சிவசத்தாம் என இரண்டு வகையின் இசைக்கும்' என்றதற்கு ஓர் அதிகரணமும் ஆக மூன்று இருத்தல் வேண்டும். சிவஞான சித்தியாரில் இருக்கும் அதுவே அதற்குச் சான்ரும். இங்கு வேறு ஒன்றும் எழுத உண்டு. இதன் விரிவை அஞ்சிப் பிறிதொரு கட்டுரையில் விளக்கலாம் என அது கொள்ளாது விடப்பட்டது.

# ஏகபாதத் திருப்பதிகம்

இராவ்சாகிப் திரு. நல். முருகேசமுதலியார், B. A.

**திருஞான சம்பந்தர்:**

திருஞானசம்பந்த நாயனர், சைவசமயாசாரியார் மட்டுமின்றி, தமிழ் இலக்கியத்துக்கும் ஒரு சிறந்த ஆசிரியராகத் திகழ்கிருர். வாக்கின் தனி மன்னரான நாவுக்கரசரைச் சீகாழியில் சந்தித்ததை 'ஆக்கிய நல்வினைப் பேறு' எனக் கருதி, அவருடைய அந்தமிலாத் திருவேடத்தை நேரே கண்டு தொழுது, மதுரமொழியால் வரவேற்ருர். பெருகும் அன்பும் நண்பும் பொங்கி எழச் சொல் மாலைகள் பல சாற்றினர். நாவுக்கரசர் விடைபெற்றபின், மாருத் திருவுள்ளத்தோடு, தேக்கி மாமறை வெள்ளத் திருத்தோணி வீற்றிருப்பாரைத் தூக்கிய தமிழ் மாலை பாடித் தொழுதார். தாண்டக வேந்தரைச் சந்தித்தபின் திருஞானசம்பந்தப் பிள்ளையார் நவ நவமான கவிநலம் பொருந்திய சொல் மாலைகள், ஊற்றெடுத்தது போல் பாடலாயினர். அவ்வகை வந்த விகற்பச் செய்யுட்கள், மொழிமாற்று, மாலைமாற்று, வழிமொழித் திருவிராகம், எல்லா அடிகளிலும் எல்லாச் சீர்களும் அடங்கி வரும் இயமகமாகிய ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை, ஈரடி, ஈரடியேல் வைப்பு, நாலடிமேல்வைப்பு, சக்கரமாற்று ஆகியவையாம்.

**மூல இலக்கியம:**

இந்த அரிய யாப்புக்களைக் கவிவல்லமையைக் காட்ட, நாயனர் பாடவில்லை. எல்லா ஞானப் பொருள்கோளும் கொண்டவை இப் பாட்டுகள். செய்யுட்குரிய பொருள்கோள்கள் ஆற்றுநீர், கொண்டு கூட்டு முதலாக எட்டு என்பர். இக்காரணத்தாலன்ருே, நம் தெய்வச் சேக்கிழார் ''மூல இலக்கியமாக வெல்லாப் பொருள்கோளும் முற்ற ஞாலத் துயர்காழி யாரைப் பாடினர் ஞானசம் பந்தர்'' எனறு வியந்து ாடிள்ளார். இந்த விகற்பச் செய்யுட் களுக்கு இலக்கணம் காண்போர்க்கு இலக்கியம் இவையே. முன்னர், இவற்றிற்கு இலக்கியம் கிடையாத நிலையில், இவையே பின் வந்த பாடல்களுக்கு மூல இலக்கியமாக ஆயின. தமிழ் கற்போர், இவற்றையே அவ்விகற்பச் செய்யுட்களுக்கு இலக்கியமாகக் கொள்வர்.

**ஏகபாதப் பதிகம்:**

இவற்றுள், திருப்பிரமபுரத்துத் திருஏகபாதப்பதிகம் மிகச் சிறந்தது; சைவசித்தாந்தக் கொள்கைகளை நுட்பமாக எடுத்துரைக்கும் பெருமை வாய்ந்தது. இதற்குப் பொருள் கூறுவது, தமிழ் இலக்கண இலக்கியம் கற்று, சாத்திர ஞானமும் பெற்றவர்க்கன்றி, மற்றையோர்க்கு எளிதன்று.

'ஏகபாதம்' என்பது ஒரு பாடலின் முதற் கண்வரும் ஓர் அடியைப்போலவே, ஏனைய மூன்று அடிகளும் வருவது. ஓர் அடியே, ஏனைய மூன்று அடிகளிலும் மாருமல் வருதலின் ஏகபாதம் என்று பெயர் பெற்றது. இயமகம், அடிதோறும் ஒன்றும் பலவுமாகிய சீர்கள் அடங்கி வருவது. அதனுட் சிறப்புவகையை ''எல்லா மடக்குச் சந்த வியமகம்'' என்பர்.

திருப்பிரமபுரப் பதிகத்தில், நாயனர் இலக்கண முறைவழுவாது, சீகாழிப் பன்னிரு திருப்பெயர்களையும் சார்த்தி, இறைவன் இயல்புகளையும் புகழையும் பாடியுள்ளார். இப்பதிகத்தின் ஒவ்வொரு செய்யுளிலும், அதன் நான்கடியும் ஒரே எழுத்துத் தொடரால் அமைந்து வரும். இது சித்திரகவி வகைளுள் ஒன்ருகும். இது வெவ்வேறு பொருள் தருவதால் ''விகற்பம்'' எனப்படும். எளிதிற் பாட இயலாமல் மிகவும் வருந்தி முயன்று பாடவேண்டுவ தொன்ருதலின், 'மிறைக்கவி' எனவும் இத்தகையவை வழங்கப்படும். (மிறை — வருத்தம்) ஏகபாதத்திருப் பதிகம், 12 பாடல்களைக்கொண்டது. ஆயினும் அதனை 12 வரிகளாலேயே குறிப்பிட்டு விடாலாம்:—

1. பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்
2. விண்டலர்பொழில் வேணுபுரத்தரன்
3. புண்டரிகத்தவன் மேவிய புகலியே
4. விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
5. சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
6. பூசுரர் சேர் பூந்தராயவன் பொன்னடி
7. செருக்கு வாய்ப்புடையான் சிரபுரம் என்னில்
8. பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
9. தசமுகன் நெரிதர ஊன்று சண்பையான்
10. காழியான் அயன் உள்ளவா காண்பரே
11. கொச்சையண்ணலைக் கூடகிலார் உடன் மூடரே
12. கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை

இப்பதிகம் வியாழக்குறிஞ்சிப் பண்ணில் அமைந்துள்ளது. இது ஒரு அழகிய மாலைப்பண். குறிஞ்சியாழ்த் திறத்தொன்று. ஏன் “வியாழக் குறிஞ்சி'' எனப் பெயர் என்பது விளங்க வில்லை. ('யாழ்க் குறிஞ்சி' வியாழக்குறிஞ்சி ஆயிற்றோ என அறியப்படவில்லை). இதன் கட்டளையமைப்பு யாது என்றும் விளக்கப்பட வில்லை. இப்பதிகத்தைப் பரம்பரை ஓதுவார்கள், ஒவ்வொரு அடியையும் எப்படி பாடுகிறார்கள் என்பதும், கேட்டுத் தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லை.

**உரைவளம் :**

இப்பதிகத்தின் பொருள்வளமே, எல்லோரும் சிறப்பாகக் கவனிக்கத் தக்கது. தேவாரத்துக்குப் பண்டைக்கால உரையாசிரியர்கள் எவரும் உரை எழுத முற்படாமையினால், நமக்கு உண்மைப் பொருள் அறிவது இயல வில்லை. இப்பதிகத்துக்கு முதல் முதலாக ஸ்ரீ கண்ணுடையவள்ளலார், தமது திருவுள்ளக் கருத்தாக இயற்றி அருளியதைக் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் துந்துபி ஆண்டு பதித்த அடங்கன் முறையிலும், பின்வந்த பதிப்புகளிலும் தந்துள்ளார். அவற்றுள் மேற்காட்டிய முதலிறுதிப் பாட்டுக்களின் திருவுள்ளக் கருத்தைப் பெரிய புராணத்துக்குத் திரு. ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் தாம் எழுதிய உரையிலும், திரு. சூளை. சுப்பராய நாயகர் தாம் எழுதிய பொழிப்புரையிலும் எடுத்துப் பதிப்பித்துள்ளார்கள். சிவக்கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் (ஸ்ரீசம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகள்), தம் பெரியபுராண உரையில் இப்பதிகத்துக்கு நுட்பமான குறிப்புரை எழுதி உதவியுள்ளார். இக்குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு, கீழ்க்கண்ட உரைக் குறிப்புக்களை எழுதியுள்ளோம்.

**தத்துவக்கருத்துக்கள் :**

இப்பதிகத்தில் காணப்படும் கீழ்க்கண்ட சிறந்த சித்தாந்தக் கருத்துக்களை உன்னி மகிழ்வோம்:

(1) இறைவன், ஞானப் பிரகாசமாகிய பராசத்தியின் பரிபூரணத்தை மிகுதியாக வியந்து, அந்சுப் பராசத்திக்கு அதீதமாகிய சுகமே வடிவாய், முதல் நடு இறுதியாக உள்ள பெரியோன். அவனே பிருகத்தும் மகத்துமாவான்.

(2) பிரமரூபத்திலே சாரும் சீவன் முத்தர்கள்கூட பரமுத்தியை அடைய அவன் பத்தியில் விருப்பமுடையவர்களாவர்.

(3) திருச் சிலம்பினைத் தரித்துப் பஞ்ச கிருத்தியத்தைச் செய்பவனே முதல்வன். அச் சிலப்பு அஷ்டகுலபர்வதங்களும் ஒலி சிறந்த தங்க மணியாக, அகில லோகங்களையும் உள்ளே அகப்படுத்தும் தன்மையும் வாய்ந்தது.

(4) அன்பர்களின் இதயகமலத்திலிருந்து இடையறாது ஆனந்தம் பொழிந்து, மல போதத்தில் தள்ளாமல், அடைக்கலப் பொருளாக உள்ள பெருந்தகை, பிரமாபுரமேவிய பெம்மான்.

(5) உயிர்கட்குக் காப்பாகத் திரிபுண்டரமான திருநீற்றை அணிகின்ற பரம கருணையுடையவனே, இப்பதிகத்தை உவந்துள்ளான்.

(6) புலிக்கால் முனிவருக்கு ஞானானந்தமாகிய நடனத்தைக் கனக சபையிலே ஆடல் செய்து, பரத வித்தையைத் தந்துள்ளான்.

(7) மையல் மானிடமாய்ப் பிறந்த என்னிடமும், குருவடிவாயக் கலந்து ஒன்றிய சிவ

ஞானத்தை அருளினன். பேரின்பமாகிய பரிபூரணத்தை எனதடிமை குலையாமல் இரண்டற வைத்த நளினன்.

(8) சூரியனுடைய களங்கத்தைக் கழுவும் சமுத்திரம்போல, இறைவன் பிறவிக் கடலிலே கீழ்ப்பட்டுக் கிடக்கும் ஆன்மாக்களுக்கு அவர்களைக் கைப்பற்றிக் கரை ஏற்றும் தெப்பமாய்ப் பிரணவ மந்திரத்தை உபதேசிக்கிறுன்.

(9) மும்மலங்களும் கழுவப்பட்ட சிவ ஞானிகளின் கூட்டம் பொலிவு பெறத்தக்க வனப்புடைய திருநடனம் செய்தருள்கிறுன், நம் இறைவன்.

(10) நீறு பூசும் சிவஞானிகளுக்கும், பாவத்தை அரித்துச் சுகத்தைத் தள்ளும் சிறப்புடையோர்கட்கும், மூலப்பொருளாயுள்ளவன் இறைவன்.

(11) திருவருள் ஞானம் வாய்க்கப் பெருதார்க்கு மல மேலீட்டைக் கொடாத சிவனுக்கு விசுவாதீதமான இருப்பிடம் சைதன்னியம் என்னும் அறிவேயாகும். ஆத்தும விகாரமாகிய பர்வத்தினல் இந்திரியங்கட்கு விடயமாகச் சுவர்க்கத்தில் இச்சையுடையானுக்கு அதுவே மெய்யாக விசேடித்து விடும்.

(12) ஒருதரம் 'சிரபுரம்' என்று சொன்னலே, இந்திரியங்கள் அவியப்பெருமல் நாம் சிவனடியில் சேரவல்லோம்.

(13) புலித்தோலுடுத்த பெம்மான் எல்லாமிறந்து அந்தமாயுள்ள சிவஞானிகள் குழாத்துக்கு நேரிதாகிய 'அது' என்ற மெய்ப் பொருளை ('சூனியம்' அல்லது 'தத்துவமசி') நேராகத் தோற்றுவிக்க வல்லான்.

(14) ஆத்தும விகாரமான ஆணவம் ('தசம்' அல்லது 'தைசதம்') போம்படி, என்னறிவில் எதிர்ப்பட்டு சட்சமயங்களுக்கும் கண்காண் பயனுகவுள்ளவன் எம் இறைவன்.

(15) நிலைபெற்ற நின்மலமாகிய சித்தத்தையுடைய பத்தர்களின் உள்ளத்தில், சத்தியப் பொருளாய்க் காட்சி அளிப்பவன் இறைவன். அவனைப் பக்தியுள்ளவர்கள் மட்டுமே உள்ளவாறு காணப் பெறுவர்.

(16) திருமிடற்றில் களங்கமுடையான் (காழியான்) கருணையை நினைத்து, ஞானநாட்டத்தை உடைய சிவஞானிகள் ஆங்காரத்தைத் தவிர்க்கத் தம் கருத்தில் வைப்பர்.


(17) ஆணவமலத்தால் (கொச்சை) மூடப்பட்டோர்கள், அண்ணலைக்கூடகிலார். அவர் மாயாதனுவால் மூடப்பட்ட மூடரேயாவர்.

(18) காழிக் கடவுளை அயன் ஆணவ மயக்கத்தால் காண்பன் என்று நினைத்தால் காண்பனே? மாட்டான். அவன் அக் கடவுளுக்கு அன்னியம் ஆவான் (பரே).


(19) புலாலுடம்பைப் பொய்யென உணராதும், பொய்யென மனங்கொள்ளாதும், தமது நிலைபெற்ற உருவாக நினைத்து வீழும் புறச் சமயத்தவர்கள், நம் இறைவனை உணர்வரோ? உடல் மூடரே-- துவராடையால் உடலை மூடுவர்.

(20) பெத்த முத்தி இரண்டும் தெரியாமல், அலக்கண்படும் (கழு+மலம்) மல போதர்க்கு, மண்டையோட்டில் உண்ணும் (க+உணியன்) நம் கடவுள், அமுதம் போன்றவன்.

(21) கழுமல முதுபதிக் கவுணியன் ஆகிய திருஞானசம்பந்தன் சொன்ன கட்டுரையை (பொருள்பொதிந்த சொல்லை) ஒருவராகிலும், உரை செய்வார் உயர்வார். ஆதலின், நாம் இப்பதிகத்தைப் பொருளுணர்ந்து ஓதி உய்வடைவோமாக :




நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமிரெட்டியார், அவர்கள் தலைமையுரை நிகழ்த்துதல்.



தென்னார்காடு மாவட்டம் நெய்வேலித் தொகுதிக் கோயில்களைச் சேர்ந்த ஸ்ரீ மணிமுத்தாளம்மன் கோயில் திருப்பணித் துவக்கவிழாவில் நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B A. B. L., I. A. S. அவர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்திச் சிறப்பித்தல்.



அடிகளாரும், அறநிலைய அமைச்சரும்.



வழியனுப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் உரையாற்றுதல்.

# "நன்று வெளிநாடுகள் சென்று நலமே வெற்றியுடன் மீள்க"

ந. ரா. முருகவேள், M. A., M.O.L.

*[தமிழ் நாடு தெய்விகப் பேரவையின் தலைவர், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், M.L.C. அவர்கள், வெளிநாட்டுப் பயணம் செல்லுவதன் பொருட்டு, மயிலாப்பூர்க் கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் முன்னிலையிலும், உயர் நீதி மன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையிலும் நிகழ்ந்த வழியனுப்புப் பாராட்டு விழாவில் இயற்றிப் படித்த பாடல்கள், இங்கு வெளியிடப்பெறுகின்றன. (17-7-71)*

*—ஆசிரியர்.]*

தவத்திரு அடிக ளார்க்கும், தகைமைசால் அமைச்சர், மற்றும்
மிகத்திரு அமைந்த சான்றோர், மேலோர்க்கும், என்வ ணக்கம்! (1)

நேரம் இல்லாக் காரணத்தால் நேர்ந்திங் கியான்தான் நிகழ்த்துதற்காம்
சீரின் மிகுபல் செய்திகளைச் செய்யுள் வடிவில் அமைத்துரைக்கேன் (2)

நால்வர் அடிகள் தொடர்பினையான் நணுகப் பெற்றேன்; மற்றவர்தம்
சால்பார் தொடர்பால், என்னுடைய சைவத் தமிழ்வாழ்வு அமைந்ததென்பேன் (3)

ஞானியார் அடிகள், மறைமலையடிகள், நல்அழ கரடிகள், மற்றுத்
தேனையார் சொல்லின் சீர்க்குன்றக் குடியின் சிறந்தநம் அடிகள், என் றிவரே: (4)

எனக்கும், அடிகளார் தமக்கும் இயைந்த தொடர்பு, பலவகையில்
நினைக்கற் கினிய தொன்று; அதுதான் இருப தாண்டாய் நிலவிவரும்! (5)

தகவிற் சைவ சித்தாந்த சமாஜ விழா,ஐம் பத்தொன்றில்
மிகநன் ருய்க்குன் றக்குடியில் மேவிற்று; அன்று முதல் தொடர்பு: (6)
(1951)

உத்தமர் ஓமாந் தூரார் உயரிய தலைமை யின்கீழ்,
மெய்த்திகழ் சமாஜ ஆண்டு விழாச்செய்தார், அடிக ளார்தாம்: (7)

திருப்புத் தூர் நற் றமிழ்ச்சங்கம், திருமுறை மாநாடு, இவற்றில்எலாம்
விருப்பத் துடன்பல் லாண்டுஅழைக்க, மிகச்சென் றிருந்து கலந்துகொள்வேன்: (8)
(1955 முதல் ஆண்டு தோறும்)

திருமுறைச் சிறப்பைத் தேற்றும் சிறந்ததோர் நூலை ஆக்கும்
பெருமையை, அடிக ளார்முன் பேணிநன் றெனக்கே தந்தார்; (9)
(''தமிழில் வழிபாடு'' என்னும் நூல், 1961)

கொழும்பில் விவேகா னந்தர்விழாக் குறித்தே அழைக்கக், கி. வா. ஜ.,
தொழும்சீர் அடிக ளார்உடன்,யான் சொற்பொ ழிவாற்றச் சென்றுவந்தேன்;
(Colombo, Ceylon, 1962—Vivekananda Birth Centenary) (10)

எனைய பலவா றெனக்கிங்ஙன் இனிதே அடிக ளார்அவர்கள்
தனிநன் றுற்று தண்ணளிகள் சால; அவர்தாள் வணங்குகின்றேன்: (11)

(வேறு)

அன்பருளின் இன்புருவே: அருமைமிகு பெருமையினேய்: அளவி லாத
மன்பெருஞ்சீர்த் திருவண்ணு மலைஆதீ னம்தழைக்க வந்த சான்றோய்:
கொன்வரல்ஞா யிறேபோலக் குலவுகுன்றக் குடிவரும்எம் குருவே; நீர்தாம்
நன்றுமிக வெளிநாட்டிற் கேகல்நன்றே: நும்பயணம் நலத்த தாக: (1)

சைவநெறி தழைத்துயரத், தமிழ்மொழிதான் சிறப்பெய்தித், தலைமை ஓங்க,
உய்யுநெறி மக்களெல்லாம் உணர்ந்தொழுகப், பலபணிகள் உஞற்றும் நல்லோய்:
தெய்வசிகா மணிஅருணைத் தேசிக; நீ வெளிநாடு செல்லுங் காலை,
மெய்யின்நினை வழியனுப்பி மிகமகிழ்கோம்: நின்தொண்டு விளங்கி வெல்க. (2)

தனித்தமிழ் இயக்கத் தந்தை. சைவ சித்தாந்தச் சான்ருேர்,
முனைத்தநற் கொள்கை வீரர், மும்மொழிப் புலமை வேந்தர்,
மனித்தருள் தெய்வம் போன்ற மறைமலை யடிக ளார்போல்,
நினைத்திவண் போற்ற நிற்போய்! நின்புகழ் விளங்கி வெல்க! (3)

செந்தமிழ்க்கும் சிவநெறிக்கும் சிறந்தபல தொண்டாற்றும் செம்ம லாக
நந்தமுயர் **திருப்புலிசை ஞானியார் அடிகளார்** நனிதி கழ்ந்தார்:
அந்தமில்சீர் அப்பர்என வைகிநின்ற அவர்க்குப்பின் அரிய ஞான
**சம்பந்தர்** போன்றிவண்நீர், தமிழ்சைவம் தழைப்பிக்கத் தகவே போந்தீர்! (4)

''ஞாலமெலாம் இறைபுகழே நனிபரவல் வேண்டும்''என நயப்புற் றன்பால்
சீலமிகும் உயர்காழித் **திருஞான சம்பந்தர்** தெரித்துச் சென்றார்:
சாலமிக அவர்விருப்பம் தக்காங்கு நிறைவேறச் சான்றோய்: எங்கள்
கோலமிகு **தூயகுன்றக் குடிஅடிகாள்**: பணிசெயும்நும் குறிப்பு நன்றால்: (5)

''எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்''
இப்பாரில் என்றுமுனம் இராமலிங்க வள்ளல்
இறைவனைத்தாம் இறைஞ்சிமிக இனிதேத்தி நின்றார்;
அப்பால்என் னே?அவர்தாம் அங்ஙன்செல்லக் காணோம்:
அருமைமிகும் **எம்குன்றக் குடிஅடிகாள்,** நீர்தாம்
முற்பாற்போந் தவர்விருப்பம் முடித்துவைக்க லுற்றீர்:
**முருகனருள் நும்பயணம் முழுவெற்றி ஆக்கும்:** (6)

பாங்குமிகு சிவநெறியும் பைந்தமிழும் செழித்துமிகப் பண்பார்ந் தோங்க
ஈங்குநும தரும்பெருந்தொண் டிணையற்ற தொன்றாகும்; இறைமைச் சான்றோய்:
தேங்குபெருங் கடல்கடந்த சேணாட்டும் அருள்பரப்பும் திறலோய்; நும்மை
ஓங்குயர்சீர் வெளிநாட்டிற் குவந்துவழி யனுப்பியுய்க்கோம்; உறுக வெற்றி: (7)

(வேறு)

தெளிநாட்டும் தெய்வ சிகாமணிச்சான் றோய்:நும்
**வெளிநாட்டு நற்பயணம்,** வீறுற் — றௌிநாட்டி,
எல்லையிலா வெற்றிமிக எய்திப் பயன்விளைக்க,
**நல்வகையிற்** செய்க,**சிவம்** நன்று; (8)

(வேறு)

**குன்றை முருகன்** திருவருளின் துணைகொண்டு, **அடிகளார்** அவர்கள்,
**நன்று வெளிநா டுகள்சென்று, நலமே** வெற்றி யுடன்மீள்க; (9)

—x——x—

# தவத்திரு குன்றக்குடி அடிகளார் வெளிநாட்டுப்பயண

## வழியனுப்பு வாழ்த்து விழா

இரஷ்யப் பெருநாட்டின் பகுதியாகிய மிர்க்மினிஸ்தானின் அழைப்பை ஏற்றுக் கலைப் பண்பாட்டின் தூதுவராக சோவியத் ரஷ்யாவுக்குச் சென்றுள்ள தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கட்குச் சென்னை, தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 17- 7- 71 சனிக்கிழமை மாலை வழியனுப்பு வாழ்த்து விழா, உயர் நீதிமன்ற நடுவர் திரு. எஸ். மகாராஜன் அவர்கள் தலைமையிலும், பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது. சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. பெ. திருஞானசம்பந்தம், சைவசித்தாந்த மகாசமாசத் தலைவர் திரு. கீ. இராமலிங்கனார், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார், எழுத்தாளர் திரு. அகிலன், திரு. ஈரோடு தமிழன்பன், திரு. ஔவை நடராசன், காட்டூர் திரு. கே. வி. இராமையா ஆகியோர் தவத்திரு அடிகளார் மேற்கொண்டுள்ள ரஷ்யச் சுற்றுப்பயணம், தமிழ்ப் பண்பாட்டிற்கும், தத்துவ நெறிக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து, புத்துணர்வையும் பொலிவையும் வளர்க்கும் என்று பாராட்டி வாழ்த்தினார்கள்.

தருமையாதீனச் சார்பில் அமைச்சர் மாண்புமிகு இராசாராம் அவர்கள், அடிகளாருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழறிவு மிக்கவர், ஆங்கில அறிவு பெற்றவர், வள்ளுவத்திலும் தேவார திருவாசகங்களிலும் ஆழ்ந்த புலமை மிக்கவர், தமிழ் நாடு முழுவதும் தெரிந்தவர், தமிழ் மக்கள் உள்ளத்தை அறிந்தவர், இவர்களின் கடல் கடந்த பயணத்தால், இரஷ்ய நாட்டுச் சுற்றுப் பயணத்தால், தமிழ்க் கலையையும், சமய தத்துவங்களையும் அவர்கட்கு அறிவித்துத் தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித் தருவார்கள் என்பதில் ஐயமில்லை. சமயக் கோட்பாடுகளில் மாறுபட்ட கொள்கையுடைய ரஷ்யாவில் நம் சமயக்கலை, பண்பாடுகளில் ஊறித்திளைத்த அடிகளாரை அந்த நாடு அழைத்திருக்கிறது. இந்த நிலை அடிகளாரின் சிறப்பை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய அடிகளார் ரஷ்யாவில் பேரும் புகழும் பெற்றுத் தமிழகத்தின் சீரும் சிறப்பும் ஓங்கச் செய்து வருவார்கள் என்பது திண்ணம் என்றார்கள்.

தலைவர் திரு. மகாராசன் அவர்கள் ''சைவ ஆதீனக் குருமார்களாக இருப்பவர்களுள் கடல் கடந்து வெளிநாடு சென்று, நம் கருத்துக்களை அவர்கட்கு அறிவித்து, அவர்களிடமுள்ள நற்பண்புகளைத் தெரிந்துவரத் தவத்திரு அடிகளார்தான் முதலில் துணிந்துசெல்கிறார்கள். எளிமையும், அறிவுத் தெளிவும், நாவன்மையும் படைத்தவர்கள், மேலும் துணிச்சல் மிக்கவர்கள், நல்ல பரம்பரையில் உதித்தவர்கள், இவர்கள் சுற்றுப்பயணத்தால் தமிழ் நாட்டின் பண்பும் பெருமையும் ரஷ்ய நாடு நன்கு தெரிந்துகொள்ளும், என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, சென்று சிறப்புடன் வருக என்று இறையருளை வாழ்த்துகிறேன் என்று குறிப்பிட்டார்கள்.

பிறகு தவத்திரு அடிகளார் ஆசியுரை கூறினர்கள். கொண்டும் கொடுத்தும் பணி செய்வதைத்தான் நாயன்மார்கள் நமக்குக் காட்டியுள்ளார்கள். நம் கருத்தை வெளிநாட்டவர்களும், வெளிநாட்டவர் கருத்தை நாமும் பகிர்ந்து கொள்ளுவதுதான், சுற்றுப்பயணத்தால் விளையும் பயனாகும். ஆனல் எல்லாவற்றையும் கொள்ளவும் முடியாது, தள்ளவும் முடியாது. திருவள்ளுவர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசர் அறிவித்துள்ள அருட்செல்வங்களை உலக முழுவதும் எடுத்துச் சென்று பரப்பப் பன்மொழிப் புலவர்கள் தேவை. பன்மொழிப் புலமை மிக்க துறவிகளைத் தமிழ் நாடு தெய்விகப் பேரவையின் மூலம் தயாரித்து உலக நாடுகட்கு அனுப்ப எண்ணம் உண்டு, தமிழ்நாடு அரசும் இதற்குத் துணை செய்யும் என்று நம்புகிறோம். தருமையாதீனம் எனக்குத் தாய்வீடு. என்னை உருவாக்கிய பெருமை தருமைக்குருமணி அவர்கட்கு உண்டு. தாய் சேயைப் பாராட்டி வழி அனுப்புவதாகவே இவ்வாழ்த்துக்களை ஏற்கிறேன், விழாவில் பங்கு கொண்ட எல்லோருக்கும் நமதுநெஞ்சு நிறைந்த வாழ்த்துக்கள் என்று ஆசியுரை வழங்கினர்கள்.

தவத்திரு. சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்கள். இசையரசு திரு, எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள், கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினர்கள். விழா இனிது நிறைவேறியது.

600 008 158585

---

சென்னை மயிலாப்பூர்க் கபாலீசுவரர் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில், தமிழ் நாடு தெய்விகப் பேரவையின் தலைவரும், தமிழ்நாடு மேலவை உறுப்பினரும் ஆகிய தவத்திரு. குன்றக்குடி அடிகளார், M. L. C., அவர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதை முன்னிட்டு, 17.7.71 சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில், தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் முன்னிலையிலும், உயர் நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் B. A. B, L., அவர்கள் தலைமையிலும், அறநிலைய ஆணையாளர் திரு. கே. எஸ். நரசிம்மன் B. A. B. L. I, A. S., அவர்கள் தொடங்கிவைக்க, வழியனுப்புப் பாராட்டு வாழ்த்து விழா மிகவும் சிறப்புற நடைபெற்றது.

பேராசிரியர் திரு அ. மு. பரமசிவானந்தம் M. A., M. Litt., திரு. வ. ஆறுமுகம், தொழிலதிபர் கோவை. திரு. நா. மகாலிங்கம், திரு. கு. அய்யா சுப்பிரமணிய முதலியார், திரு. செல்வ நடராசமுதலியார், தாமரைத்திரு. வ. சுப்பையாபிள்ளை, திரு. பி. ஜி. நடராஜன், J. P, ஞானமணி திரு. வை. இரத்தினசபாபதி, பேராசிரியர் திரு. கீ. இராமலிங்கனர், M. A, பேராசிரியர் திரு. சி. வடிவேல், திரு. அவ்வை. டி. கே. சண்முகம், M. L. C. திரு. கே. இராஜு முதலியார், திரு. சுந்தராஜன், B. A., திரு. கோ. முத்துசாமி, I. A. S,, (ஓய்வு) ஆகிய பெருமக்கள் அடங்கிய விழாக் குழுவின் சார்பில், இவ்விழா நடைபெற்றது.

சேலம் திருமதி ஜெயலக்ஷ்மி அம்மையார் அவர்கள், இறைவணக்கம் பாடினர்கள். பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் வரவேற்புரையும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் சிறப்பு முன்னுரையும், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் அவர்கள் தொடக்க உரையும், நீதிபதி. திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையுரையும், முறையே வழங்கினர்கள். தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள், தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தொழிலதிபர் திரு. நா. மகா-

லிங்கம், திரு. ந. ரா. முருகவேள் M.A.M.O.L. திரு. டாக்டர் ந. சஞ்சீவி, பேராசிரியர் மகா வித்வான் திரு.ச.தண்டபாணி தேசிகர், பேராசிரியர் திரு.க.வெள்ளைவாரணனுர், திரு.நாராயணன், ஞானமணி திரு.வை.இரத்தினசபாபதி,M.A.M.Litt., குன்னூர் திரு.இராமசாமி அடிகள், காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் முதலிய பெருமக்கள் பலர், பாராட்டுரை வழங்கினர்.

பலப்பல கோயில்களின் சார்பில் தவத்திரு அடிகளார் அவர்களுக்கும், அறநிலைய அமைச்சர் அவர்களுக்கும், பூமாலைகள் அணிவித்துச் சிறப்பிக்கப் பெற்றது. தவத்திரு, குன்றக்குடி அடிகளார் அவர்கள் அருளுரை வழங்கிய பின்னர், நன்றியுரையுடனும் இறைவணக்கத்துடனும் விழா இனிது நிறைவேறியது.

—ஆசிரியர்

---

# அறங்காவலர் மாநாடு

சென்னை, செங்கற்பட்டு மாவட்ட இந்து ஆலய அறங்காவலர்கள் சங்கத்தின் 2-ஆவது மாநாடு ஸ்ரீகபாலீசுவரர் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் 20-6-71ஆந்தேதி திரு. கே. கமலக்கண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் திரு. எஸ். சூரியநாராயணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம் கண்ணப்பன் அவர்கள், மாநாட்டைத் துவக்கி வைத்துப்பேசினர். குளித்தலைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கந்தசாமி, திரு. டி. வி. நாராயணசாமி, எம். எல். சி. , ஆகியோர் பேசினர். திரு. வி. ஏ. பாலகிருஷ்ணன் முன் மொழிந்த தீர்மானங்களைத் திரு. எஸ். சூரியநாராயணன் வழி மொழிந்தார்.

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்கள் அனைத்திலும் தமிழிலேயே அர்ச்சனை நடத்தக் கோரியும், வாடகைக்கட்டுப்பாடு சட்டத்திலிருந்து கோயில் சொத்துக்களுக்கு விதிவிலக்கு அளிக்கக் கோரியும், அறங்காவலர்களின் பதவிக்காலத்தை 5 (ஐந்து) ஆண்டுகளாக அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்டும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. திரு. என். எஸ். ராஜாபாதர் முதலியார் நன்றிகூறினர்.

## செய்திச் சுருக்கம்

வட ஆற்காடு மாவட்டம், திமிரி ஸ்ரீ குமரகிரி சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கு, தமிழ் நாடு தெய்வீகப் பேரவையின் தலைவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார், M. L. C. அவர்கள், 26-6-71 அன்று வருகை தந்தார்கள். அறங்காவலர்கள் பூரணகும்பத்துடன் வரவேற்றுப் பொன்னுடை போர்த்து வணங்கி மகிழ்ந்தனர். தவத்திரு அடிகளார் அவர்கள் அருளாசியுரைகள் வழங்கி, அனைவரையும் மகிழ்வித்தார்கள்.

காசிபாளையம் விசுவநாதசுவாமி ஆலயத்தில், திருநெறித் தமிழ்வேதப் பன்னிரு திருமுறை வழிபாட்டுச் சங்கத்தின் முதல் ஆண்டு விழா 29, 30-6-71 தேதிகளில் நடைபெற்றது. திருவாளர்கள் இல. செல்வன் மாகாளியண்ணன், க. மி. முருகானந்தம், அர. திருநாவுக்கரசு, என். கே. வாசுதேவன், கே எஸ். இராமசுவாமி, கா. சீனிவாசன், கே. கே. சுப்பணகவுண்டர், ஜி. கே. பெருமாள் கவுண்டர், கு. பாலசுப்பிரமணியம், பொங்கியணகவுண்டர் ஆகிய அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

— ஆசிரியர்,

—x—x—

# செய்திச் சுருக்கம்

**இன்னம்பர்த் திருப்பணித் துவக்கம் :** கும்பகோணத்தை அடுத்த தேவாரப் பதிகம் பெற்ற இன்னம்பர், ஸ்ரீ எழுத்தறிநாதர் திருக்கோயில் திருப்பணி கடந்த 14-6-71 அன்று, தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. சுமார் ஒரு லட்ச ரூபாய் செலவில் இத்திருப்பணி செய்யப்பட்டுள்ளது. அறநிலைய ஆட்சித்துறைத் தஞ்சைத் துணை ஆணையர் திரு வி. எஸ். கோதண்டபாணி அவர்களும், அறநிலைய ஆட்சித்துறைக் குடந்தை உதவி ஆணையர் திரு. ஆர். அர்ஜுனன் அவர்களும் சிறப்புரையாற்றினர். திருப்பணிக் குழு அங்கத்தினர் திரு. ஆர். இராமசேஷன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு இன்னம்பர்ப் பஞ்சாயத்துச் சார்பிலும் வரவேற்பு மடல் வாசித்தளிக்கப்பட்டது. திருப்பணிக் குழுத் தலைவர் திரு. வி. ஜெனார்த்தனம் நன்றி கூறி, திருப்பணியை முடித்துதவும்படி அனைவரையும் கேட்டுக் கொண்டார். திருப்பணிக்கு நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: திரு. வி. ஜெனார்த்தனம், தலைவர், இன்னம்பர் திருப்பணிக்குழு, 63, கீழக் கடலங்குடித் தெரு, கும்பகோணம்,

**மாணிக்கவாசகர் குருபூசை :** ஆற்காடு நகரிலுள்ள "மாணிக்கவாசகர் நிலைய"த்தின பத்தொன்பதாம் ஆண்டு விழாவும், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை விழாவும், கடந்த ஜூன் மாதம் 27, 28 ஆகிய இரு தேதிகளிலும், பிரத்தியேகமாக அமைக்கப் பட்ட பந்தலில், வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. காலையில் வழிபாடும், உச்சியில் மகேசுவர பூசையும் நடைபெற்றன. மாலை 6 மணிக்கு நடந்த கூட்டத்தில் திருவாசக மணி கே. எம். பாலசுப்பிரமணியம், 'திருவாசகத்தேன்' என்னும் பொருள் பற்றி நீண்ட இனிய சொற்பொழிவாற்றினர். சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் ஏராளமான அறிஞர்களும் புலவர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். மக்களின் விருப்பத்திற்கிணங்க அடுத்த நாளிலும், திருவாசகமணி 'திருவாசகம்' பற்றியே தொடர்ந்து பேசினர். இந்த விழாவினைத் தொடர்ந்து நடத்தி வரும் திருவாளர்கள் : முனுசாமி நாயகர், கிருஷ்ண மூர்த்தி ஆகிய இருவரையும் திருவாசகமணி பாராட்டினர். திரு. சுந்தர உடையார் நன்றி நவில, விழா இனிது முடிவுற்றது.

**சேக்கிழார் விழாவில் திருவாசகமணிச்குப் பொன்னாடை :** சென்னை நகருக்குத் தென் கிழக்கே பன்னிரண்டாவது மைலில் உள்ள குன்றத்தூர் என்ற தலம்தான், பன்னிரண்டாம் நூற்றாண்டில் அநபாய சோழரின் அமைச்சராகவும், சைவத்தின் பன்னிரண்டாம் திருமுறை யின் ஆசிரியராகவும் வாழ்ந்த சேக்கிழார் பெருமானின் அவதாரத்தலமாகும். அப்பெரு மானின் குருபூசை விழா சமீபத்தில் நிகழ்ந்தது. அப்போது அபிஷேகம், அலங்காரம், ஆராதனை முதலியன நடந்த பின், அன்னம் பாலிப்பும் நடந்தேறியது.

அன்று பிற்பகல் சேக்கிழார் கழகத்தின் முப்பதாவது ஆண்டுவிழா, திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடந்தேறியது, திருவாளர்கள் : கீ. இராமலிங்கனாரும், திரு குணபூஷணமும், சேக்கிழாரைப் பற்றிப் பேசினர். திருவாசக மணி தமது தலைமையுரையில் பேசியதன் சாரம்;

"தற்காலச் சீர்திருத்தவாதிகளுக்கு வழிகாட்டியாக உள்ள சேக்கிழாரின் பெரிய புராணத்தில், சாதி வேறுபாடு இல்லாமை, சமபந்தி போஜனம், கலப்புத் திருமணம், தீண்டாமை யொழித்தல், பெண்கள் உயர்வு முதலிய பல விஷயங்களும் அடங்கியுள்ளன. அத்துடன், சுந்தரர் புராணத்தில் "வீழுமவர்க் கிடை தோன்றி மிகும் புலவி புணர்ச்சிக்கண் ஊழியாம் ஒரு கணம் தான் அவ்வூழி ஒரு கணமாம்" என்று வரும் அடிகள், தற்கால விஞ்ஞான மேதை ஈன்ஸ்டின் கண்டு பிடித்துள்ள "ரிலேடிவிடி" தத்துவத்தைக் (Theory of Relativity) குறிக்கின்றன. மற்றும், ஆனய நாயனர் புராணத்தில்,

"மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தஇசைக் குழலோசை
வையந்தன்னையும் நிறைத்து வானும் தன் வசமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற் பொதுவில் நடம்புரியும்
ஐயன்றன் திருச்செவியின் அருகணையப் பெருகியதால்"

என்று வரும் அடிகள், விஞ்ஞானி மார்க்கோனி விளக்கிய கம்பியில்லாத தந்தியின் தத்துவத்தைத் தாங்கி நிற்கின்றன என்று விவரித்தார்.

அதன்பின், திருவாசகமணி இந்தோனேசியாவிலும், ஏனைய கீழை நாடுகளிலும், இதுவரை ஆற்றி வந்துள்ள இணையற்ற இந்து சமயத் தொண்டினைப் பாராட்டிப் பேசிய முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம், திருவாசகமணிக்குப் பொன்னாடை போர்த்தினர். சேக்கிழாருக்கும் சிவத்துக்கும் சிறந்த தொண்டாற்றிவரும் சிவநெறிச் செம்மல் வித்துவான் திரு. மறை திருநாவுக்கரசுக்கும் அவரது அறுபதாம் ஆண்டு நிறைவுவிழாவினை முன்னிட்டுப் பக்தவத்சலம் பொன்னாடை போர்த்தினர். மலேய மாதரசி, திருவருட்செல்வி சரளாதேவி ராஜசுந்தரம் அவர்களின் அன்பளிப்பான பொன்னாடையை, ஸ்ரீமதி ஞானம் மறை திருநாவுக்கரசு அம்மையாருக்குப் பக்தவத்சலம் வழங்கினர். தூத்துக்குடி வித்வான் ஜகதீசன் தமது அரும் தமிழ்க்கவிதை மூலம் அனைவரையும் வரவேற்றுப் பாராட்டி வாழ்த்தினர்.



திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், B.A.B.L., அவர்களுக்கும், 'சிவநெறிச் செம்மல்' வித்வான் மறை திருநாவுக்கரசு அவர்களுக்கும், முன்னாள் முதல்வர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தல்.

# இந்துசமய அறநிலையச் சட்ட நிர்வாகம்

அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள்.

இந்து சமய அறக்கட்டளை (நிர்வாகத்) துறையின் கீழ் 10,040 அற நிலையங்கள் பணி யாற்றி வருகின்றன. அவற்றின் வருவாய் ரூ. 5,51,65,419 என்று மதிப்பிடப்படுகிறது. இந்த அறநிலையங்களில் 156 மடங்களும் 9,052 கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளை களும் அடங்கியுள்ளன. இவற்றின் நிர்வாகம் பகுதிக் குழுமுறை எடுக்கப்பட்டபோது, 1968-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தினல் திருத்தப் பட்ட 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தினுலும் முறைப் படுத்தப்பட்டது. இத்துறையை நடத்தி வருவ தற்கான வருவாய் மேற்படி சட்டத்தின் 92-வது பிரிவின்கீழ்க் கொடுக்கத்தக்க நன்கொடை களிலிருந்தும், தணிக்கைக் கட்டணங்களிலிருந் தும், கிடைக்கின்றது. இப்பிரிவின்படி ரூ. 200-க்குக் குறையாத வருவாய் உள்ள ஒவ் வொரு அறநிலையமும் குறிப்பிட்ட தொகை ஒன்றை இத்துறைக்குச் செலுத்த வேண்டும். 561 கோயில்கள் ரூ. 10,000-க்கு மேற்பட்ட வருவாயுள்ளவையாகும். 4,583 கோயில்களுக்கு ரூ, 1,000 முதல் ரூ. 10,000 வரை வருவாய் கிடைக்கின்றது. ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 க்கும் குறைவாக வருவாய் உள்ள கோயில்கள் 4,896 உள்ளன, ஆண்டுதோறும் கிடைக்கும் கோயில் துறை வருவாய் சுமார் ரூ. 49 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. கோயில் களின் வருமானத்தைப் பெருக்கவும், கோயில் களின் நிதி தவருகப் பயன்படுத்தப் படுவதைத் தடுக்கவும் வேண்டிக் கோயில்களின் நிர்வாகம் இந்து சமய அறக்கட்டளை (நிர்வாகத்) துறை யின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது.

2. **இணைக்கப்பட்ட பகுதிகளிலும் மாற்றப் பட்ட ஆட்சிப் பகுதிகளிலும் உள்ள கோயில்கள், அற நிலையங்கள்:** — 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளுக்கு முன்பு, புதுக்கோட்டை தேவஸ் தானத்திற்கு ஏற்பட்ட செலவு நேரடியாக அரசு நிதியிலிருந்து சரிக்கட்டப்பட்டது. 196 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் அன்றும் அது முதற்கொண்டும் கோயில்களைப் பேணிவரும் பொருட்டுத் தொடர் மானியமாக ரூ. 4 லட்சம் அல்லது கோயில்களுக்கு ஆண்டு தோறும் ஏற்படும் நிகர செலவு, இவற்றில் எது குறைவாக உள்ளதோ அத்தொகைக்கு ஒப் பளிப்பு வழங்கியதன் மூலம் புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள கோயில்களைப் பேணிவருவதற் கான நேரடிப் பொறுப்புக்கள் அனைத்தினின்றும் அரசு தன்னை விடுவித்துக் கொண்டது.

மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதியில் உள்ள இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ் தானங்கள் அவற்றின் சொத்துக்கள், நிதிகள் ஆகியவற்றின் நிர்வாகம், மேற்பார்வை, கட்டுப்பாடு அனைத்திற்கும் கன்னியாகுமரி தேவாஸ்வ வாரியம் பொறுப்பு வகிக்கிறது.

மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதியில் உள்ள, இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவாஸ்வம் குறித்து தனி நிர்வாகத்திற்கு வகை செய்யும் பொருட்டுத்தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு 30-வது சட்டம் அதாவது தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதி) இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவாஸ்வம் சட்டம் இயற்றப்பட்டது. மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதியில் உள்ள அறநிலையங்கள், அறக்கட்டளைகள் உட்பட இந்து பொது அறநிலையங்கள் கட்டளைகள் அனைத்திற்கும் தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் பொருந்துகிறது. தேவாஸ்வ வாரியத்தில் ஒரு தலைவரும், வேறு இரு உறுப்பினர்களும் இருப்பர். இவ்விருவரில் ஒருவர் திருவாங்கூர் மாநில முன்னாள் ஆட்சியாளரால் நியமனம் செய்யப்பட்டு வருகிறார், தலைவரும் மற்றுமொரு உறுப்பினரும் தமிழ் நாடு அரசினால் நியமிக்கப்பட்டு வருகின்றனர். தேவாஸ்வங்களைப் பேணி வருதல் முதலியவற்றிற்காகத் தமிழ் நாடு அரசிடமிருந்து ஆண்டு தோறும் ரூ. 13,68,000 மான்யமாகத் தேவாஸ்வ வாரியம் பெறுகிறது.

3. **இந்துக்கள் அல்லாதவரைக் கோயில்களுக்குள் அனுமதித்தல்:**—எச்சமயத்தைச் சார்ந்தவரும் கோயிலுக்குள் நுழைவதை அனுமதிக்கும் நோக்கத்துடன், தமிழ் நாடு 1947-ஆம் ஆண்டு ஆலய நுழைவு அனுமதிச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட விதிகளை அரசு 1970 ஜனவரியில் திருத்தியுள்ளது. இந்துக் கோயில்களுக்குள் இந்துக்களல்லாதவர் நுழைவதற்கு இயலும் வகையில் அரசு பிறப்பித்த ஆணைகளைத் தள்ளிவிடும் பொருட்டு, 1970 செப்டம்பரில் ரிட் மனு ஒன்று, சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ரிட் மனு முடிவு செய்யப்படும் வரை, அரசு ஆணை செயல்படுவதற்கு உயர்நீதி மன்றம் இடைக் காலத் தடை விதித்துள்ளது. ரிட் மனு விசாரணையில் உள்ளது.

4. **அர்ச்சகர் பயிற்சி நிலையங்கள்:**— இந்து சமுதாயத்தில் பரம்பரை அர்ச்சகர் முறை இருந்து வருவதை நீக்கவும், அதற்கு மாறாகத் தேவையான கல்வித் தகுதிகளைக் கொண்டுள்ளவர்கள் அடங்கிய சமய அமைப்பை ஏற்படுத்தவும் அரசு விரும்பியது. தீண்டாமை, அரிசனங்கள், பொருளாதாரக் கல்வி வளர்ச்சி குறித்த குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் அரசு இவ்வாறு செய்ய எண்ணியது. ஏற்பளிக்கப்பட்ட நிலையங்களில் இவர்கள் அர்ச்சகர்களாகப் பயிற்சி பெறலாமென்றும் இதனால் சாதி வேறுபாடின்றி இந்துக்கள் அனைவரும் அர்ச்சகர்களாக வழிகோலும் என்றும் அரசு விரும்பியது. அதன்படி, தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 22/1959) தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்தச்) சட்டத்தினால் (தமிழ் நாடு சட்டம் 2/1971) திருத்தப்பட்டது. இச்சட்டத்தின் செல்திறனை எதிர்த்து இருமடாதிபதிகளும், திருவல்லிக்கேனி திருத்தணி அர்ச்சகர்களும் நான்கு ரிட் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளதோடு ஒருதலையாகத் தடை ஆணையையும் பெற்றுள்ளனர். இது உச்ச நீதி மன்றத்தில் தற்போது விசாரணையில் உள்ளது. எனவே, அர்ச்சகர்கள் பயிற்சி நிலையம் ஒன்றைத் துவக்கும் செயற்குறிப்புக்கு இன்னும் செயல் வடிவம் கொடுக்கப்படவில்லை.

5. **கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் முறையைக் கொண்டு வருதல்**—தமிழ் மொழியில் அர்ச்சனைகள் செய்யும் திட்டம் இதுவரை 112 கோயில்களில் கொண்டு வரப்பட்டுள்ளது. சுமார் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாளுக்குள் எல்லா ஆலயங்களிலும் தமிழில் திருமுறை அர்ச்சனை துவக்கப்பட வேண்டுமென்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் அறிவுரை வழங்கியுள்ளார். வழிபடுபவர்கள் அவர்களது விருப்பம் போல் தமிழிலோ அல்லது வடமொழியிலேயோ அர்ச்சனைகள் செய்து கொள்ளலாம்.

6. **யாத்திரிகர்களுக்கும் வழிபடுபவர்களுக்கும் வசதிகள்:**— யாத்திரிகர், வழிபடுபவர்களின் பயனுக்காக ஓய்வு விடுதிகளையும், யாத்திரிகர்கள் குடி

யிருப்புகளையும் கட்டும் ஒருங்கிணைப்புத் திட்டம் ஒன்று உள்ளது. இது குறித்துச் சீரான முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளதைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ள லாம்:—

ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீடு

| | ரூபாய். |
|---|---|
| யாத்திரீகர் குடியிருப்புகள் கட்டுதல்— | |
| 1969 .. .. | 1, 10, 700 |
| ஓய்வு விடுதிகளைக் கட்டுதல்— | |
| 1967 .. .. | 3, 95, 400 |
| 1968 .. .. | 2, 73, 200 |
| 1969 .. .. | 6, 34, 000 |
| 1970 .. .. | 10, 60, 000 |

திருச்செந்தூரில் ரூ 6 லட்சம் செலவில் 96 அறைகளைக் கொண்ட புதிய கட்டிடம் ஒன்று கட்டத் தொடங்கப் பட்டுள்ளது.

7. **திருமண மண்டபங்கள் கட்டுதல்**—திருமணம் முதலியவற்றிற்காகத் திருமண மண்டபங்களைப் பொது மக்கள் குறைவான வீதத்தில் வாடகைக்கு எடுத்துக் கொள்ள வசதி செய்யும் பொருட்டு அதிக அளவில் திருமண மண்டபங்களைக் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மண்டபங்கள் வழிபாட்டுக் கூடங்களாகவும் பயன்படுத்தப் படலாம். இது குறித்துச் சீரான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு. | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீடு. ரூபாய். |
|---|---|
| 1967 .. .. | 82,000 |
| 1968 .. .. | 62,000 |
| 1969 .. .. | 4,12,000 |
| 1970 .. .. | 18,42,700 |

8. **சமய நிறுவனங்களின் வருமானம்**;--1377 முதல் 1380 வரையுள்ள விளைச்சல் ஆண்டுகளின்போது சமய நிறுவனங்களின் வருமானம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| விளைச்சல் ஆண்டு | 1377 ... | 3,98,52,754 |
| ,, | 1378 ... | 4,99,25,142 |
| ,, | 1379 ... | 4,87,51,314 |
| ,, | 1380 ... | 5,51.65,419 |

9. **கோயில் நிலங்கள்** :— இம் மாநிலத்தில் கோயில் நிலங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தேவையான நிர்வாகப் பணியாளர்களுடன் நான்கு சிறப்புத் துணைமாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் அதிகாரி தரத்தில் ஒரு சிறப்பு அதிகாரி, ஆகியோரைக் கொண்ட சிறப்புப் பணியாளர்களை நியமிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சமய நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள, சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான எல்லா இயங்காச் சொத்துக்களும், சொத்துக்கள் பதிவேட்டில் முறையாகப் பதிவு செய்யப் பட்டிருக்கிறதா என்றும், கோயில்களின் சுவாதீனத்தில் இல்லாத சொத்துக்களும் கணக்கில் கொண்டுவரப்பட்டுள்ளதா என்றும், அந்தச் சொத்துக்களின் வருமானம் முறையாகக் கணக்கு வைக்கப்படுகிறதா என்றும் இந்த சிறப்புப் பணியாளர் தொகுதி கவனிக்க வேண்டும். ஒவ்வொரு கோயிலுக்கும்

சொந்தமான நிலங்கள், கட்டிடங்கள், மனைகள் முதலியவை சரியான குத்தகைக்கு விடப்படுகின்றனவா, அவை உரிமை அல்லாதாரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றனவா, அதிகாரமளிக்கப்படாத அனுபோகத்தில் அல்லது சுவாதீனத்தில் இருக்கின்றனவா என்பது குறித்துக் கண்டறிவதற்காக அவை குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இது 1970-ஆம் ஆண்டு முதற்கொண்டு செயலுக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு புதுத் திட்டமாகும். சமய நிறுவனங்களால் பேணி வரப்பட்ட சொத்துப் பதிவேட்டையொட்டிச் சுமார் ரூ. 1,90,45,309 மதிப்புள்ள மொத்த வருமானத்தைக் கொடுக்கும் 4,09,356·20 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் இருக்கிறதென்று பணியாளர்கள் நிச்சயித்து அறிந்துள்ளனர். நிலங்களிலிருந்து வரும் இந்த வருமானம், தமிழ் நாட்டிலுள்ள சமய நிறுவனங்களால் கிடைக்கும் மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பாகமாகும். மீதியுள்ள வருமானம் கட்டிடங்கள், வீட்டு மனைகளுக்காக வழங்கப்படும் வாடகைகள், உண்டியல் வசூல், பக்தர்களின் காணிக்கைகள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கிறது. 65,000 ஏக்கர் நிலமுள்ள சுமார் 10,000 நிறுவனங்கள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை என்று தெரிய வந்துள்ளது. இந்த நிறுவனங்களைத் துறையின் கட்டுப் பாட்டின் கீழ்க் கொண்டு வருவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாயுள்ளவையும், ஆனுல் அவர்களது சுவாதீனத்திலும் அனுபோகத்திலும் காணப்படாதவையுமான சுமார் 10,000 ஏக்கர் நிலங்கள் கண்டறியப்பட்டுக் கணக்கில் கொண்டுவரப் பட்டன. இத்திட்டத்தின் நோக்கம் முழுவதும் நாளாவட்டத்தில் எய்தப் பெறும்.

10. கோயில்களைப் பாதுகாத்தலும் புதுப்பித்தலும்: வருவாயற்ற, நிதி தேவைப்படும் கோயில்களுக்கு மொத்த மானியங்கள் வழங்குவதன் மூலம் அரசால் நிதியுதவி அளிக்கப்படுகின்றது. இத்தகைய மொத்த மான்யங்கள் வழங்க, ஒவ்வொரு ஆண்டும் ரூ. 4 லட்சம் ஒதுக்கப்பட்டு வருகிறது. அரசு மான்யத்தைத் தவிர, சமய நிறுவனங்கள் தங்கள் உபரி நிதியிலிருந்து மனமுவந்து அளிக்கிற நன்கொடையிலிருந்து அமைக்கப்பட்ட பொதுநல நிதியிலிருந்து, நிதி தேவையான கோயில்களின் பழுதுபார்க்கும், புதுப்பிக்கும் பணிக்காக, இந்து சமய அறக்கட்டளை ஆணையாளர் நிதி வழங்குவார். பொதுநல நிதிக்கு, இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) நிதியிலுள்ள உபரித்தொகை எதையும் வழங்குவதற்கு அவசியம் ஏற்படும் போதெல்லாம், ஒப்புதலளிக்க அரசும் இசைவளித்து வருகிறது.

11. ''யுனெஸ்கோ'' உதவி.— இம் மாநிலத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான கோயில்கள் சிலவற்றைப் பாதுகாப்பதிலும், புதுப்பிப்பதிலும் ''ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனம்'' அக்கறை காட்டி வந்துள்ளது. திருவரங்கத்திலுள்ள அரங்கநாதசுவாமி கோயிலுக்கு இந் நிறுவனம் 12,000 டாலர்களை, இந்தியாவில் தயாரிக்கப்படாத பொருள்களின் வடிவில் அதாவது, பென்காப்சுலா (ஒருவகை தெளிக்கும் எண்ணெய்) உட்பட அக்கோயிலின் பண்டைக்காலப் பண்பாடு கெடாத வகையில் சுதை வேலைகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படும் பொருட்களை வழங்கியுள்ளது. கிழக்குக் கோபுரம், ஆயிரம் கால் மண்டபத்தில் மேல் அடுக்கு, சேஷகிரிராயர் மண்டபம் ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் பணிகள் இதுவரை முடிந்துள்ளன.

இராமேசுவரத்திலுள்ள ஸ்ரீ ராமநாத சுவாமி கோயில் ''யுனெஸ்கோ'' நிறுவனத்தின் உதவி பெறுவதற்கான இரண்டாவது கோயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ''யுனெஸ்கோ'' வல்லுநர் திரு. ஜி. ஆர். எச். ரைட் என்பவர் கோயிலை வந்து பார்வையிட்டு, தனது அறிக்கையைக் கொடுத்துள்ளார். இந்தக் கோயிலுக்குத் தேவையான பொருட்கள் 'யுனெஸ்கோ'' நிறுவனத்தால் வழங்கப்பட இருக்கிற பொருட்கள் ஆகியவற்றின் பட்டியலு கொடுக்கப்பட்டுள்ளது. மாநில யுனெஸ்

கோ குழு, காஞ்சீபுரத்திலுள்ள ஸ்ரீ வரதராஜ சுவாமி கோயிலையும், சிதம்பரத்திலுள்ள ஸ்ரீநடராசர் கோயிலையும், மூன்றுவது. நான்காவது கோவில்களாக யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவித் திட்டத்தின்கீழ்த் தேர்ந்தெடுத்துள்ளது.

12. **ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் கோபுரத் திருப்பணி :—** ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஸ்ரீ வடபத்திரசாயி கோயிலின் பெரிய கோபுரத்தை ரூ. 4 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் செப்பனிட்டுப் புதுப்பிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளித்துள்ளது. இப்பணி பொதுப் பணித் துறையிடம் பிறர்க்கான பணியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறக் கட்டளைகள் ஆணையாளரின் பொது நல நிதியிலிருந்து இதற்கென மொத்தம் ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள தொகை கோயில் நிதியிலிருந்தும், பொது மக்களிடமிருந்து நன்கொடையாகவும் திருப்பணிக் குழுவினால் வழங்கப்படும். மேற்கூறிய புதுப்பிக்கும் பணிக்காகத் தனிப்பணியாளர்களை நியமிக்கவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

13. **பழனி கோயில் திருப்பணி :** யானைப் பாதை, சரவணப்பொய்கை வாயிலிலுள்ள சுதைப் பணிகள், சரவணப் பொய்கைப் பணிகள், பிற பணிகள் ஆகிய, பல பணிகளைக்கோயில் அதிகாரிகள் நிறைவேற்றி வருகின்றனர். பிரதான கோயிலின் திருப்பணியை மேற்கொள்வது என்பது கோயில் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

14. கோயில்களைப் புதுப்பித்தல், அவற்றைச் சரியான நிலையில் பேணிவருதல். சமய நிறுவனங்களின் வருமானத்தைப் பெருக்குதல், யாத்திரீகர்களுக்கு வசதிகள் வழங்குதல், சொத்துக்களைச் சரிவர நிர்வகித்தல், இதுவரை சரியாகக் கணக்கில் வைத்து வராத சமய நிறுவனங்களின் இயங்காச் சொத்துக்களின் சுவாதீனத்தைத்துறையின்கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வருதல், இதுவரை அதன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்படாதவையும் அதிக வருமானம் உள்ளவையுமான சமய நிறுவனங்களை அதன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வருதல், எல்லோரும் புரிந்து கொண்டு இறை வழிபாட்டில் ஈடுபடுவதற்கு வசதியாயிருக்கும் வகையில் தமிழில் திருமுறை அர்ச்சனை முறையைக் கொண்டு வருதல், பொது மக்கள் நன்மைக்காக ஏராளமானகல்யாண மண்டபங்களைக்கட்டுதல்,கல்விப் பணிகளை ஊக்கப்படுத்துதல் ஆகிய முயற்சிகளில் இத்துறை ஈடுபட்டுள்ளது. இவ்வாறாக, இம்மாநிலத்திலுள்ள சமய நிறுவனங்களின் நிர்வாகம் முழுவதும் இத்துறையால் மேம்படுத்தப்படுகிறது. சமய நிறுவனங்களின் நிர்வாக மேம்பாடு குறித்து நடவடிக்கைகளைத் துறை விரைவாகவும் ஒரே சீராகவும் மேற்கொண்டு வருகின்றது.

(ஒப்பம்) மு. கண்ணப்பன்,

அற நிலைய அமைச்சர்.

# தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய

# திருமாலை

(மூலமும், உரையும்)

முன்னுரை :

சோழ நாட்டில், திருமண்டங்குடி என்னும் க்ஷேத்திரத்தில், அந்தணர் குலத்தில் தோன்றி யருளியவர், தொண்டரடிப் பொடியாழ்வார். இவருக்குப் பெற்றோர்கள் இட்டபெயர் விப்பிர நாராயணர் என்பது. இவர் வேத வேதாந்த நூல்களையெல்லாம் நன்கு பயின்று, ஞானம் பக்தி வைராக்கியம் ஆகியவற்றில் சிறந்து திகழ்ந்திருந்தார். ஆனால் உலகியல் வாழ்க்கையில் உள்ளம் ஈடுபடாமல் உவர்ப் புற்றிருந்தார். ஆதலின் மணவாழ்க்கையை மேற்கொள்ளாமல், பிரமசரிய ஒழுக்கமே கடைப்பிடித்துத் திருவரங்கம் சென்று, அர வணைப் பள்ளிகொண்ட பெருமானை வழி பட்டுக்கொண்டு, அவருக்கே ஆட்செய்யும் உறுதியுடையவராய், நந்தவனம் ஒன்று அமைத்து, அழகிய பூமாலைகள் பல புனைந்து, நாள்தோறும் அரங்கனுக்கு அணிவித்துத் தொண்டு செய்து வந்தார்.

ஒருநாள் திருவரங்கத்திற்கு வடக்கிலுள்ள, உத்தமர்கோயில் என்னும் தலத்தைச் சேர்ந்த, தேவதேவி என்னும் தேவதாசியாகிய இள நங்கை ஒருத்தி, தன் தமக்கையுடன் உறையூர் சென்று, சோழ அரசனின் சபையில் நடனம் செய்து திரும்பி வருங்கால், வெயிலின் கொடுமை தாங்க இயலாமல் இளைப்பாறக் கருதி, வழியில் இருந்த விப்பிரநாராயணரின் நந்தவனத்தில் சிறிது தங்கினாள். அப்போது அவள், பூச்செடிக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த விப்பிரநாராயணரைக் கண் டாள். இறையுணர்வில் ஒன்றித் திளைத் திருந்த ஆழ்வார், அவளைச் சிறிதும் கண் ணெடுத்துப் பாராது தமது பணியிலேயே கருத்தூன்றியிருந்தார். அது கண்ட தேவ தேவி, இவரை எப்படியாவது மயக்கி வசப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று தீர் மானித்துக் கொண்டாள்.

ஒருநாள் அவள் காவிச் சேலையுடுத்து, சாத்வீக வேடம் தரித்து, ஒரு பெரும் வைஷ் ணவ பக்தை போல நடித்து, விப்பிரநாராய ணரை அணுகி, அரங்கனுக்கு நந்தவன கைங் கரியம் செய்யவும், பூமாலைகள் தொடுத்துத் தெய்வப் பணியில் ஈடுபடவும், தன்னை ஏற்றுக் கொள்ளும்படி மிகவும் பணிந்து வேண்டிக் கொண்டாள். அவளது வஞ்சக எண்ணத்தை உணராத விப்பிரநாராயணர், அவளைத் தமது இரக்க உணர்வின் மேலீட்டால் ஏற்றுக் கொண்டார். பெரிய பக்தையைப் போல நடித்த அவள், விப்பிரநாராயணரின் கள்ள மறியா உள்ளத்தை மெல்ல மெல்லக் கவர்ந்து கொண்டாள். பிறகு சில நாளில் அவள் அவரைப் பிரிந்து தன் இல்லம் சென்று விட் டாள். ஆனால் அவளைப் பிரிய லாற்றாத விப்பிரநாராயணர், அவளைத் தேடிக் கொண்டு அவளது இல்லம் சென்றார். பொருளின்றி வெறுங் கையுடன் தேடிக்கொண்டு வந்த அவ ரை, அவளது தாய் அவமதித்து அனுப்பினாள். அந்நிலையில் அவர் பெரிதும் வருந்தி உள்ளம் கலங்கினார்; அந்நிலையிலேயே ஒரு புறந்திண்ணை யில் உறங்கி விட்டார்.

பக்தர்களிடம் அளவற்ற பரிவுகாட்டும் திருமகள் ஆகிய பிராட்டி, விப்பிரநாராயண ரின் நிலை குறித்து இரங்கி, அவரை முன்போற் சிறந்த தொண்டராக்கி ஆட்கொண்டருள வேண்டுமென்று, பெருமாளைப் பெரிதும் வேண் டிக்கொண்டாள். பெருமாளும் அதற்கு இசைந் தருளினர் அதன்படி, பெருமாள் ஓர் அருள் விளையாடலை நிகழ்த்தினர். தாம் மனித வடிவம் கொண்டார். அம்மனித வடிவில், திருவரங்கம் கோயிற் பொன்வட்டில் ஒன்றை எடுத்துச் சென்று, அதனைத் தேவதேவிக்குக் கொடுக்கும் படி விப்பிரநாராயணர் தம்மை அனுப்பியதா கக்கூறி, அப்பொன்வட்டிலைத் தேவதேவியின் தாயினிடம் கொடுத்துச் சென்றார்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், பொன் வட்டில் காணாமற் களவு போன செய்தி, கோயில் அருச்சகர்களுக்குத் தெரிந்தது. அதனை அவர்கள் ஆட்சியாளர்களுக்குத் தெரி வித்தனர். அவர்கள் களவு போன பொருள் குறித்துப் புலன் ஆராயலாயினர். அப்போது அவர்களுக்குப் பொன்வட்டில் தேவதேவியின் வீட்டில் இருப்பது தெரிந்தது. அங்குச் சென்று உசாவிய போது, விப்பிரநாராயணர் கொடுத் தனுப்பியதனுல், தாம் அதனைப் பெற்றதாகத் தேவதேவியும் தாயும் கூறினர். அதனுல் அரசன் விப்பிரநாராயணரே களவு செய்த தாகக் கருதி, அவரைச் சிறையிலிட்டு வருத் தினன்.

உடனே, அடியார்களின் இடர் சிறிதும் பொருத பெருமாள், அரசனின் கனவில் தோன்றி, விப்பிரநாராயணரைத் தடுத்தாட் கொள்வதற்காகத் தாமே இங்ஙனம் செய்த தாகத் தெரிவித்தருளினர். அதனுல் உண்மை அறிந்த அரசன், அடியவரைச் சிறையினின்று விடுவித்து அன்புடன் அனுப்பி வைத்தான். விப்பிரநாராயணர் சிறையினின்று விடுதலை பெற்று வெளிவந்த பின்னர், தாம் நந்தவனப் பணியை மறந் தொழிந்தமை குறித்தும், செய் யாத குற்றத்திற்குச் சிறையிருக்க நேர்ந்தமை குறித்தும், நினைந்து நினைந்து நெஞ்சம் உருகி நைந்து வருந்தினர்.

முன்பு தாம் செய்து வந்த திருத்தொண் டினை விடுத்து உலகியலில் மயங்கி உழன்று வருந்த நேர்ந்த தீவினையை எண்ணி அவர் மிகவும் ஆற்ருமை கொண்டார். அத் தீவினைக்கு உரிய கழுவாய், ‘தொண்டர்களுக்கு மீளா அடிமை பூண்டு ஒழுகுவதேயாகும்’ என்று தேர்ந்து தெளிந்தார். தொண்டர் களின் திருவடித் தீர்த்தத்தையும், பாததூளி யையும் புனிதப் பொ ளாகத் தலைமேற் கொண்டு போற்றி ஒழுகி வந்தார். அதனுல் அவருக்குத் ‘தொண்டரடிப்பொடி’ என்னும் சிறப்புப் பெயர் அமைந்தது. திருவரங்கத்துப் பள்ளி கொண்டருளும் பெருமானை அல்லாது வேறு ஒன்றும் அறியாதவராய், அப்பெருமானி டமே அளவிலாத பக்தி பூண்டு பூமாலைத் தொண்டுகள் புரிந்து நூற்றைந்து வயதுவரை வாழ்ந்திருந்து, பின்னர் அவர் பரமபதம் எய்தினர்.

ஸ்ரீவைஷ்ணவ சமயத்தின் ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவராகிய தொண்டரடிப் பொடியாழ்வார், அருளிச் செய்த நூல்கள் இரண்டு. ஒன்று திருமாலை. மற்றென்று திருப் பள்ளியெழுச்சி. திருப்பள்ளி எழுச்சி, பாம்பணைப் பள்ளிகொள்ளும் பரமனை வைகறையில் துயில் எழுப்பும் நிலையில் அமைந்த பத்துப் பாசுரங்கள் கொண்டது. திருமாலை என்னும் பிரபந்தம், பக்திச் சுவை ஊற்றெடுத்துப் பெருகி மிளிரும் சிறப்புமிக்க, எளிய இனிய நாற்பத்தைந்து பாசுரங்கள் கொண்டது. எவருள்ளத்தையும் கொள்ளைகொள்ளத் தக்க இனிமைச் சுவை யுடையது. ‘‘திருமாலை அறியாதார் பெருமாளை அறியார்’’ என வழங்கி வரும் பழமொழியினல்’ இப்பிரபந்தத்தின் எல்லையற்ற பெருமையினை யாவரும் உணரலாம். அத்தகு சிறப்புமிக்க திருமாலை என்னும் சிறந்த பிரபந்தத்தின் தெய்விகப் பாடல்களையும், இயன்ற வரையில் சுருக்கமாக அவற்றின் கருத்துக்களையும், இங்கு நாம் கற்று மகிழ்வோமாக!

காவலிற் புலனை வைத்துக்
கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து,
நாவலிட்டு உழிதர் கின்றேம்
நமன்மர் தலைகள் மீதே:

மூவுலகு உண்டு உமிழ்ந்த
முதல்வ! நின் நாமம் கற்ற
ஆவலிப்பு உடைமை கண்டாய்!
அரங்கமா நகர் உளானே!

(பொழிப்புரை) திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானே! மூன்று உலகங்களையும், ஊழிக்காலத்தில் திருவயிற்றில் வைத்துப் பின்னர் வெளிப்படுத்தியருளிய முதல்வனே! உனது திருநாமத்தைக் கற்றதனால் ஏற்பட்ட பெருமித உணர்வினால், ஐம்பொறிகளையும் உலகியற் பொருள்களில் மயங்கி ஓடாதபடி அடக்கிக் காவலில் வைத்து, தீவினைகள் ஆகிய பகைக் கூட்டம் விலகி ஓடும்படி எதிர்த்து, வெற்றி முழக்கம் செய்து, எமதூதர் தலைகளின் மேல் கால்களை வைத்து அழுத்தி, நாங்கள் மகிழ்ச்சியுடன் உலவுகின்றோம்.

(குறிப்புரை) முன்னே தம்மைக்காவலில்வைத்த புலன்களைத் தாம் இப்போது காவலில்வைத்து அடக்கினார். புலன்களை அடக்கினால் தீவினைகளை வெல்லலாம் ஆதலின், 'கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து' என்றார். கலி—தீவினைகளாகிய கூட்டம்; கலியுகத்தின் கொடுமைகள் என்றுமாம். நாவல் இடுதல்—தோற்றவர்கள் முன்னே நாவல் மரத்தின் கிளையை நட்டு, வென்றோர் வெற்றி முழக்கம் செய்தல்; அறைகூவுதல் எனினுமாம். ஆவலிப்பு — பெருமிதத்தின் மேலீடு. இறைவனின் திருநாமத்தை ஓதினால் எல்லா நலன்களும் எய்தப்பெறலாம் என்பது கருத்து. 'உழிதருகின்றேன்' என ஒருமையாகக் கூறற்பாலதனை, 'உழிதருகின்றோம்' என்று பன்மையாகக் கூறியது, 'நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்றபடி, நல்லவர் ஒருவரால், அவர்தொடர்புடைய எல்லோரும் நன்மை அடைவர் என்னும் உண்மையை உணர்த்திற்று. வாலிக்கு அஞ்சிக் கிடந்த சுக்கிரீவன், இராமபிரானின் தொடர்பும் துணையும் கொண்டதனால், வாலியைப் போருக்கு அறைகூவி அழைக்கத் துணிவு பெற்றான். அதுபோல நமன் தமர்க்கு அஞ்சிக் கிடந்த ஆழ்வார், முதல்வனின் நாமம் கற்ற ஆவலிப்புடைமையால், தம்மைச்சார்ந்தார் அனைவரோடும் நமன் தமர் தலைகள் மீது நாவலிட்டு உழிதரும் துணிவும் ஆற்றலும் பெற்றார் என்பது கருத்து.(—4)

பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா ! அமரர் ஏறே !
ஆயர்தம் கொழுந்தே ! என்னும்
இச்சுவை தவிர, யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் ;
அரங்கமா நகர் உளானே !

(பொழிப்புரை) அரங்கமா நகர் உளானே : பசுமை நிறம் உள்ள பெரிய மலைபோன்ற திருமேனியையும், பவளம்போன்ற சிவந்த திருவாயையும், சிவந்த தாமரை மலர்போன்ற திருக்கண்களையும் உடைய அச்சுதனே ! தேவர்களுக்கெல்லாம் தலைவனே! இடையர் குலத்தில் தோன்றிய இளஞ் சிறுவனே ! என்று சொல்லித் துதிக்கின்ற, இந்தச் சுவையை அல்லாமல், யான் இந்திரலோகம் சென்று அதனை ஆளுகின்ற அந்தச் சுவையைப் பெற்றாலும், அதனை யான் விரும்பமாட்டேன்.

(குறிப்புரை) பெருமாளின் பேரழகின் திறத்தைப் பச்சை மாமலைபோல் மேனி என்றும், பவளவாய் என்றும், கமலச் செங்கண் என்றும், தாம் அறிந்து அனுபவித்து அழுந்திய திறம் தோன்றப் புகழ்ந்துரைத்தார். அச்சுதன் —தான் என்றும் நழுவாதவன் ; தனது அன்பர்களை என்றும் நழுவ விடாதவன். போய் என்பதனால் போவதிலுள்ள அருமைப்பாடு சுட்டியவாறு. இந்திரலோகம்—பரம பதம். இந்திரன்-தலைவன். 'இந்திரலோகம் ஆளும் அச்சுவை' இனிதன்று என்னாமல், வேண்டேன் என்ற நுட்பம் உணர்ந்து மகிழத் தக்கது. வீட்டுலக இன்பத்தை வெறுத்துப் பழிக்க முற்படாமல், இறை

வனின் திருநாமம் கூறித் துதித்தலில் தமக்குள்ள ஆர்வத்தை மட்டுமே புலப்படுத்திய திறம் போற்றற்பாலது. (2)

வேதநூற் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேனும்,
பாதியும் உறங்கிப் போகும் ;
நின்றதிற் பதின் ஐயாண்டு
பேதை பாலகன் அது ஆகும்;
பிணிபசி மூப்புத் துன்பம் ;
ஆதலாற் பிறவி வேண்டேன்
அரங்கமா நகர் உளானே !

பொழிப்புரை : அரங்கமா நகர் உளானே ! மனிதர்கள் வேதநூல் குறிப்பிட்டபடி, நூறு வயது வரை ஒருகால் வாழ்ந்திருப்பார்கள் ஆயினும், அவ்வயதில் பாதியாகிய ஐம்பது ஆண்டுகள் உறக்கத்தில் கழிந்துவிடும். எஞ்சி நின்ற ஐம்பது ஆண்டுகள் அறிவில்லாத குழந்தை, பாலுண்ணும் சிறுவன், இளைஞன் என்னும் நிலைகளிலும், நோய்களிலும், ஐம்பொறி நுகர்ச்சிகளிலும், முதுமைத் தளர்ச்சியிலும், மற்றும் பலவகையான துன்பங்களிலும் கழிந்துவிடும். ஆதலால் யான் பிறவி எடுத்தலை வெறுக்கின்றேன். என்பிறவியை நீக்கியருள்க.

குறிப்புரை : வேத நூல் — வேதமாகிய நூல்; வேதங்களும் பிற நூல்களும் எனினுமாம். ''கொம்பில் அரும்பாய்க் குவி மலராய்க் காயாகி வம்பு பழுத்து உடலம் மாண்டு போதலை' யாவரும் காண்டலின், ஒரு சிலர் மட்டுமே அரியராக நூறாண்டு வாழப் பெறுவர் என்னும் அருமைப்பாடு தோன்ற 'மனிசர்தாம் புகுவரேனும்' என்றார். 'உறங்க' என்னும் சொல் உறங்கி என வந்தது. ''பதின் ஐயாண்டு'' ($10 \times 5$) என்பது, ஐம்பது ஆண்டுகள் என்னும் பொருளில் வந்தது. பேதை— அறிவில்லாத சிறு குழந்தை. பாலகன்— பாலுண்ணும் சிறுவன். கொடிய தீயவனின் பெயரை நாக்கினாற் கூறக் கூசி, ''அந்தப் பயல்'' என்று கூறுமா போல, காம வயப்பட்டுத் திரியும் காளைப் பருவத்தினை இன்னதெனக் குறிப்பிட்டுக் கூற விரும்பாமல், காளைப் பருவத்தினை அதாகும் என்ற அழகு அறிந்து மகிழற்பாலது. (3)

மொய்த்தவல் வினையுள் நின்று
மூன்றெழுத்து உடைய பேரால்
கத்திர பந்தும் அன்றே
பராங்கதி கண்டு கொண்டான் ;
இத்தனை அடியர் ஆனார்க்கு
இரங்கும்நம் அரங்கன் ஆய
பித்தனைப் பெற்றும் அந்தோ ;
பிறவியுட் பிணங்கு மாறே !

பொழிப்புரை: திரண்டுவந்து நெருக்குகின்ற கொடிய தீவினைகளினுள் அகப்பட்டுக் கொண்டும், மூன்றெழுத்துக்கொண்ட திரு நாமத்தால், மிகவும் கொடிய பாவியாகிய 'கத்திரபந்து' என்பவனும் கூட அல்லவா, பரமபதமாகிய மேலான வீடு பேற்று நிலையைக் கண்டு அனுபவிக்கப்பெற்றான். வெறுப்பின்மையாகிய ஒரு சிறு பண்புமட்டுமே உடையவர்களுக்கும் இரக்கத்தினால் அருள்புரிகின்ற, நம்முடைய அரங்கனாகிய பித்தனைத் தலைவனாகப் பெற்றிருந்தும், உலக வாழ்க்கையில் மயங்கி ஐயோ நாம் வருந்துகின்ற தன்மை என்னே !

குறிப்புரை : தேன்கூட்டை ஈக்களும், நெய்க் குடத்தை எறும்புகளும் சூழ்ந்துகொள்ளுதல் போல, கொடிய பாவங்கள் பற்றிக் கொண்டு வருத்துதலால் 'மொய்த்த வல்வினை'' என்றார். வினைகள் பற்றிக் கொள்ளுதல் திண்ணமாதலால், இறந்த காலத்திற் கூறினார். திருநாமம் இது என்று தெளிவாகச் சொல்லாமல், ''மூன்று எழுத்துடைய பேர்'' என்று குறிப்பாற் கூறினார். அப்பெயரை அறிய ஆர்வம் மேலிட்டு விரும்பிக் கேட்டவழி உணர்த்தலாம் என்னும் கருத்தால். அஃதாவது, ஒற்று நீக்கி எண்ண மூன்றெழுத்தால் வரும் கோவிந்தன் என்பது. கத்திரபந்து என்பவன், பாவி

யருட் பாவியாகிய கொடியவன். அத்தகைய வனும், ஒருமுறை கோவிந்த நாமம் கூறி, அந் நல்வினைப் பயனால் வீடுபேறு அடைந்தான் என்னும் வரலாற்றை உள்ளிப் "பராங்கதி கண்டு கொண்டான்" என்றார். நாமும் அங்ஙனம் இறைவனின் திரு நாமம் கூறி எளிதில் உய்ய லாம் என்பது கருத்து. பரகதி, பராங்கதி என வந்தது ; மேலான நிலை, பரமபதம். இறைவன் நம்மை ஆட்கொள்ள எப்போதும் விரும்பி எதிர்நோக்கி இருக்கின்றான். நாம் செயற்பாலது, அவன் செய்யும் அருளைப் பெறுவதில் வெறுப்பின்றி இருத்தலாகிய ஒன்றே யாகும். அஃது ஒன்றே உடைய வரையும், இறைவன் காரணமின்றியும் வலிந்து வந்து, தன் கருணையினால் ஆட் கொள்ளுதலால், "இத்தனை அடியரானார்க்கு இரங்கும்" என்றார். உம்மை தொக்கு நின்றது, அரங்கன்பால் தமக்குள்ள அன்பும் பரிவும் உறவும் தோன்ற 'நம் அரங்கன்' என்று சிறப் பித்தார். அடியவர்கள்பால் கொண்டுள்ள தனது எல்லையற்ற பரிவால், இது செய்யத்தகும், இது செய்யத்தகாது என்று எண்ணாமல், அவர் களை உயர்த்தித் தான் தாழ்ந்து எளிவந்து நிற்பவன் ஆதலின், அரங்கனைப் 'பித்தன்' என்றும், இத்தகைய தலைவன் ஒருவனைப் பெறுதலின் அருமையை நினைந்து வியந்து 'பெற்றும்' என்றும் கூறினார். பெறுவதற்கரிய தனைப் பெற்றும் பயன்கொள்ளமாட்டாமல் பிணங்கி வருந்துவதனால், உலக மக்களை நோக்கி இரக்க மிகுதியினால் 'அந்தோ' என்று புலம்பி வருந்துகின்றார். (4)


பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான்
பெரியதோர் இடும்பை பூண்டு,
உண்டுஇராக் கிடக்கும் போதும்
உடலுக்கே கரைந்து நைந்து,
தண்துழாய் மாலை மார்பன்
தமர்களாய்ப் பாடி ஆடித்
தொண்டுபூண்டு அமுதம் உண்ணாத்
தொழும்பர், சோறு உகக்கு மாறே!

(பொழிப்புரை) மனைவியரால் எல்லா இன் பங்களையும் நுகர்வதாகக் கருதி, உலகமக்கள் மிகப்பெரிய துயரங்களை யெல்லாம் தாமே வலிந்து பற்றித் தம் மேலிட்டுக்கொண்டு வருந்துகின்றனர். உண்ணவும் நேரமின்றி அலைந்துழன்று, இராக்காலத்தில் உண்கின் றனர். பின்னர் உறக்கம் மேலிட்டு வீழ்ந்து கிடக்கின்றனர். எப்போதும் நிலையற்ற இவ் உடலுக்காகவே கவலைப்பட்டு மனம் கலங்கி வருந்தியலைகின்றனர். குளிர்ந்த துளசிமாலையை, அணிந்த மார்பை உடைய திருமாலுக்கு அடிய வர்களாகி, அவன் குணங்களைப் பாடியும், அதனால் இன்ப மேலிட்டு ஆடியும், தொண்டு செய்தலைக் கடைப்பிடித்து, அவனது அருளனு பவ நுகர்ச்சி அமுதத்தை உண்ண முயலாத இவ்வுலகமக்கள், சோற்றை விரும்பி உழல்கின்ற தன்மை என்னே !

குறிப்புரை : நெருப்பை அணைந்து விடாய் தீர நினைப்பதையும், படமெடுத்தாடும் பாம் பின் நிழலில் ஒதுங்கி இன்பமுற நினைப்பதையும் போல, மனைவியரால் சுகங்கள் துய்க்க நினைப் போர், பின்னர்த் துன்பமே அடைந்து வருந்து தலால், 'பெரியதோர் இடும்பை பூண்டு' என்றார். "இடும்பை எய்தி" என்னாமல் 'பூண்டு' என்றது, கழுத்தில் இட்டுக்கொண்ட கலவடை பின்னர் எடுக்க இயலாமல் இடர்ப்படுத்துவதுபோல, இன்பம் என்று தாம் ஏறட்டுக் கொண்டவை, பிறகு விலக்க இயலாத துன்பமாய்க் கலக்கம் விளைவித்தலை உணர்த்தும். பெண்டிரால் சுகங்கள் உய்க்க நினைப்போர், அவர்தம் அன்பைப் பெறற்குப், பலவகைகளில் பொருள் தேடுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட வேண்டி நேர்தலால், உணவு உண்ணுதற்கும் நேர மின்றி, இராக்காலத்திலேயே உண்ண நேர் தலைக் குறித்து 'உண்டு இரா' என்றார். பக லெல்லாம் அலைந்து திரிந்த களைப்பால், இரவில் உண்ட உடனேயே உறக்கம் மேலிட்டு இருந்த விடத்திற்றானே சாய்ந்து விழுதலால், "கிடக் கும் போதும்" என்றார். அப்போதும் எப்போ தேனும் உயிரைப்பற்றி நினைக்கும் வாய்ப் பின்றி, மீண்டும் மீண்டும் சூது களவு முதலிய சூழ்ச்சிகளால் பொருள் தேடுதற்கே முற்பட்டு நிற்றலால், "உடலுக்கே கரைந்து நைந்து" என்றார். பாடுதலும் ஆடுதலும் இன்பத்தா லேயே நிகழும். அவ்வின்பம் இறைவன்பால் அடிமைப்பட்டோர்க்கே வாய்க்கும் என்பதை

உணர்த்தத் 'தமர்களாய்ப் பாடி ஆடி' என்றும்; தன்னை விரும்பி அடைபவர்களைக் கைவிடாது காப்பாற்றும் கருணை மிக்கவன் என்பதை உணர்த்தத் 'தண்டுழாய் மாலை மார்பன்' என்றும் குறிப்பிட்டார். உடலுக்கு அழகுதரும் அணிகலன்போல, உயிருக்கு நலம் விளைவிப்பது தொண்டே ஆதலை உணர்த்தத் 'தொண்டு பூண்டு' என்றார். தொண்டு புரிதலில் தலைப் பட்டோர்க்கு, அத்தொண்டே சுவையும் நலமும் விளைத்து உயிரைக் காத்து இன்புறுத்துதலின், அதனை 'அமுதம்' என்றார். இத்தகைய அமுதமாகிய உயிர்க்குணவு இருத்தலை அறிந்து உண்ண முயலாது, உடலுக்கு உணவாகிய சோற்றை விரும்பி உழலும் அறிவில் மாக்களை 'அமுதம் உண்ணத்தொழும்பர்' என்று இகழ்ந்தார். தொழும்பர்—நீசர். மண்ணை உண்ணமல் சோற்றை உண்ண வேண்டுமென்று தெரிந்திருப்பவர்கள், உயிருக்கு உணவாவது இறைவனுக்குப் பணிபுரியும் அடிமைத்திறமே என்று உணர்ந்து கொள்ளாதது என்னே? என்னும் கருத்தில், ''தொழும்பர் சோறு உகக்குமாறே'' என்கின்றார். —(தொடரும்)

—ஆசிரியர்.



கேரள மாநிலத்தில், சாத்தன் கோட்டை என்னுமிடத்தில் நடைபெற்ற ''உலகச் சமயங்களின் மாநாட்டில்'', திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், B.A.B.L., அவர்கள் உரைநிகழ்த்துதல் (2-4-71).

# திருமுறை வழிபாடு

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

முன்னுரை:

தமிழ்நாடு எத்தனையோ பலவகையில், தனிப்பெருஞ் சிறப்புகளையுடையது. அவற்றுள், சிறந்ததொரு பெருங் காரணமாகத் திகழ்வன, ''செவ்விய மதுரம் சேர்ந்த, நற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்'' அமைந்த, அழகிய இனிய அரிய கவிதைகளேயாகும். செவ்விய இனிய தெய்விகக் கவிதைகளுக்குத் தமிழகம் போற் சிறந்ததொரு நாடு, வேறு பிறிது எதுவும் இல்லை எனத் துணிந்து சொல்லலாம். ''இங்கிலாந்து தேசம் வேறு பிறிது எதனாலும் அன்றித் தனது கவிதைகளினாலேயே, இத் துணைச் சிறந்த புகழ் வாய்ந்ததாக விளங்குகின்றது'' (1) என மேத்யூ ஆர்னல்ட் என்னும் ஆங்கில அறிஞர் ஒருவர் மொழிந்தமை, நம் அருமைத் தமிழ்நாட்டிற்கே மிகவும் இயைந்ததாக உள்ளது. தமிழ் மொழியிற் போல, மிகமிகச் சிறந்த பக்திப் பாடல்கள், பல்லாயிரக் கணக்கில், வேறு எம்மொழியினும் இல்லை எனத் துணிந்து கூறலாம்.

தமிழ் மக்களின் நயத்தக்க நனிநாகரிகம், தமிழ்க் கவிதைகளின் வாயிலாகத்தான், உலக அரங்கில் இன்று ஓரளவேனும் மதிக்கப் பெற்று விளங்கி வருகின்றது. தமிழ்நாட்டிற்கு இற்றை ஞான்றுள்ள பெருமைகளெல்லாம், பெரும்பாலும் அதன் அழகிய இனிய செஞ்சொற் கவிதைதளால் எஞ்சி நின்றனவேயாகும்.

சைவத் திருமுறைகள்:

தமிழ்க் கவிதைகள், பலப்பல திறத்தன. அவைகளுள்ளே, சைவத்திருமுறைகள் தனிச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தொளிர்வனவாகும். மொழி, சமயம், தத்துவம், இலக்கியம், வரலாறு, பண்பாடு, மன்பதை, வாழ்வியல், நுண்கலைகள் என்னும் பலப்பல துறைகளிலும், சைவத் திருமுறைகள், தமிழ் மக்களின் தனி நாகரிக மேம்பட்டின் நலன்களைத் திறம்பட விளக்கித் தெளிவாக்கும் சிறந்த பெரும் கருவிகளாகத் திகழ்கின்றன எனலாம்.

கவிதை நலத்திற்கு வரம்பாகக் கலைஞர்களாற் கொள்ளப்படும் சங்க காலப்பாடல்களில், ''பாலிற்படு நெய்போல்'' மறைய நின்றுள்ள தெய்விகச் சிறப்புநலம், திருமுறைப் பாடல்களில் ''தயிரின் நெய்போல்'' தெளிவாக விளங்கிச் சிறந்தினிது நிறைந்து காணப் படுதல், அவற்றின் தனிப்பெருஞ் சிறப்பிற்குக் காரணமாகும்.

கலையறிவு உணர்வால் மட்டுமே பாடப் பெற்ற ஏனைய பிற சில உலகியற் கவிதைகளைக் காட்டிலும், இறையருளுணர்வாற் பாடப்

---

1. ''By nothing is England so glorious as by her Poetry".

—Matthew Arnold.

பெற்ற நிறைமொழிப் பாடல்களாகிய திருமுறைகள், எல்லாவகையாலும் ஏற்றம் மிக்குடையன என்பதில் ஐயமில்லை. திருமுறை நூல்களின் ஆசிரியர்கள், நம்மைப் போன்று மனித நிலையில் இருந்து முக்குணங்களின் வயப்பட்டு, ஐயந்திரிவு அறியாமைகளில் அழுந்தி, பலதிறக் குறைபாடுகளும் செறிந்து நிரம்பி நிற்ப, அவற்றைப் பாடினரல்லர். ''எனதுரை தனதுரையாக'' எனத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுவதற்கு ஏற்ப, இவ்வுலகியல் வாழ்விலேயே பசுகரணங்கள் பதிகரணங்களாக மாறி அமையச், சிவமாம் தன்மைப் பெருவாழ்வு பெற்றுச் சீவன்முத்தர்களாக விளங்கி, அந்நிலையில்அவர்களால் திருமுறை நூல்கள்அருளிச் செய்யப்பெற்றன. ஆதலின், திருமுறைகளின் சிறப்புக்கும், தெய்விக நலங்களுக்கும் அளவே இல்லை.

இதுபற்றியே, திருமுறைப் பாடல்கள் பெற்ற திருக்கோயில்களும், தலங்களுமே மிக்க சிறப்பும், முதன்மையும் உடையனவாகத் தொன்றுதொட்டுப் போற்றிப் பாராட்டப் பட்டு வருகின்றன. திருமுறை ஆசிரியர்கள் தோன்றித் தம் 'கால்தரைதோய' நடந்து உலவி வாழ்ந்ததன் பயனாகவே, நம் தென்றமிழ்த் திருநாடானது 'சித்திக்கு வித்தாகிய தென்னாடு' என அறிவறிந்த மேலோர்களால் சாலவும் போற்றிச் சிறப்பிக்கப்படுகின்றது.

திருமுறைகளின் பயனாகவே, உலகில் வேறு எங்கணும் காண்டற்கரிய நிலையில் எண்ணில்லாத பல பெருங்கோயில்கள், கலை நலம் சிறந்த நுண்ணிய பலவேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு, நம் தமிழ் நாடானது ''மண்ணகத்தில் விண்ணகம்'' என்று விளங்கும் படி, மாட்சிமையுற்று வயங்குகின்றது.

இம்மட்டோ! தாம் தோன்றிய காலம் முதல், இதுகாறும் எத்துணையோ பல நூற்றாண்டுகளாக, எண்ணிறந்த பலகோடிக் கணக்கான தமிழ் மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தித் தூய்மை செய்து, அவர்தம் வாழ்க்கையினை வளமுறுத்திப் புனிதமாக்கி உயர்வித்து, உய்வித்து வந்துள்ளவை, திருமுறை நூல்களேயெனின், அத்திருமுறைகளின் பெருமையினை அளவிட்டுரைத்தல் நம்மனோர்க்கு இயலுமோ?

**சான்றோர், புகழுரை:**

(1) இத்தகைய தெய்வத் திருவருள் நலம் செறிந்த திருமுறைகளைக் காட்டிலும், இறைவனை வழிபாடு செய்வதற்குச் சிறந்த துணையாக அமையத் தக்கவை, வேறு பிறிதெதுவும் இல்லை எனக் கூறுதல் மிகையாகாது.

''நல்லிசை ஞானசம் பந்தனும், நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை,
சொல்லிய வேசொல்லி ஏத்து உகப்பான் , , ,''

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''சிவபிரான் மிகவும் விரும்பும் துதிப் பாடல்கள், திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை ஆகிய தேவாரப் பாடல்களே என்றும்; ''அவைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லி ஏத்துதலினாலேயே அவன் மிகமிக உவப்பு அடைகின்றான்'' என்றும்; குறிப்பிடுகின்றார்.

''படியிலா நின்பாட்டில் ஆரூர
னிவிருப்பன் பரமன் என்பது
அடியனேன் அறிந்தனன்; வான்தொழும் ஈசன்
நினைத்நடுத்தாட் கொண்டும், அன்றித்
தொடியுலாம் மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்றும்,
மிடியிலா மனைகள் தொறும் இரந்திட்டும்
உழன்றமையால், விளங்கு மாறே''

எனவரும் நால்வர் நான்மணிச் செய்யுளில், சுந்தரரின் தேவாரத்தில் சிவபெருமானுக்கு உள்ள எல்லையற்ற ஈடுபாட்டினைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் சுவை துளும்ப விளக்கியருளுகின்றார்.

"வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம்நெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்;
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை யுலகில் மற்றையர் இலரே''

எனவரும் செந்தமிழ்ச் சான்றோர் பாடல்கள் போல்வன பலவும், திருவாசகம் முதலிய திருமுறைப் பாடல்களின் உருக்கம் மிக்க திறனை, உணர்த்துதல் காணலாம்.

இவ்வாறே தேவார திருவாசகச் செந்தமிழ் மாமறைகளாகிய திருமுறைகளின் சிறந்த உருக்கத்திறனையும், பக்தி உணர்வு நலனையும், அருளனுபவச் செய்திகளையும் குறித்து வியந்து,

சேல்வருங் கண்ணி இடத்தோய்! நின்
சீர்த்தியைச் சேர்த்தி, அந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப்
புறத்தில் நடக்கச் சற்றே
கால்வரு மாயினும், இன்புரு
ஆகிக் கனிமனம், அப்
பால்வருமோ? அதன்பாற் பெண்களை
விட்டுப் பார்க்கினுமே

எனத் திருவருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க அடிகள், இனிது எடுத்துப் பாராட்டி மொழிந்து இன்புறுகின்றார். இங்ஙனமே!

''தேவரெலாம் தொழச் சிவந்த
செந்தாள் முக்கட்
செங்கரும்பே! மொழிக்கு மொழி
தித்திப்பாக,
மூவர் சொலும் தமிழ் கேட்கும்
திருச்செவிக்கே,
மூடனேன் புலம்பிய சொல்
முற்று மோதான்?''

எனத் தாயுமான சுவாமிகளும், தேவாரத் திருமுறைப் பாடல்களின் தெய்விகத் தீஞ்சுவைச் சிறப்பினை, மிகவும் வியந்து விதந்து குறிப்பிட்டு, அவற்றிற்கு முன்னர் வேறு பிற பாடல்கள் எவையும் சுவைபயவா என்பதனை வலியுறுத்தியருளினர். இவ்வாற்றல் திருமுறைகளுக்கும் இறை வழிபாட்டிற்கும் உள்ள சிறந்த பொருத்தத்தினையும், இயைபினையும் யாவரும் இனிதுணரலாம்.

வழிபாடு :

திருக்கோயில்களில் திருமுறைகளுக்குச் சிறப்பிடம் அளிப்பதும், திருமுறைகளைக் கொண்டு வழிபாடுபுரிவதும். வழிபாடுகள் செய்வித்துப் போற்றுவதும், தெய்வ நம்பிக்கை உள்ள சைவப் பெருமக்கள் அனைவர்க்கும் தலையாய கடமையாகும். வழிபாடு என்பது மன ஒருமையுடன், ஒன்றியிருந்து உள்ளம் கசிந்து செய்யத் தகுவதாகும். இதனை 'ஒருநெறிய மனம் வைத்துணர் ஞான சம்பந்தன்', 'ஒன்றியிருந்து நினைமின்கள்'' ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' எனவரும் அருளுரைகளால் தெளியலாம்.

வழிபாட்டின்போது கூறும் தோத்திரங்களும் மந்திரங்களும் பொருளுணர்ச்சியுடன் நிகழ்தல் வேண்டும். ''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து'' என்றும், ''சொற்பாவும் பொருள் தெரிந்து தூங்காதார் மனத்திருளை வாங்காதானை'' என்றும், நம் சமய ஆசிரியன்மார்கள், நமக்கு அறிவுறுத்தியிருத்தல் காணலாம். "என்னுடைய சொற்கள் மேலே பறக்கின்றன. ஆனால் என்னுடைய நினைவுகள் கீழே தங்கி விடுகின்றன. பொருளுணர்ந்து சொல்லப் பெறாத சொற்கள், ஒருபோதும் மேலுலகத்திற்குச் செல்லுவதில்லை "(2) என மேலை நாட்டுப் பெருங்கவிஞராகிய வில்லியம் ஷேக்ஸ்பியர் சொல்வது, இங்கு நாம் நினைவு கூரத்தக்கது.

---

2. "My words fly up, my thoughts remain below; Words without thoughts never to heaven go"
-William Shakespeare, Hamlet.

மேலும், "தாங்கள் செய்வது இன்னது என்பதனை உணர்ந்து செய்கின்ற சமயக்குருக்கள்மார்கள் மட்டுமேயன்றி, இன்னது செய்யப்படுகின்றது என்பதனை உணர்ந்து புரிந்துகொண்டு, வழிபாடுசெய்கின்ற வழிபாட்டு அன்பர்களும் கூட ஒருசமயத்தின்வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமை யாதவர்களாய்த் தேவைப்படுகின்றார்கள்" (3)என்று, அமெரிக்க நாட்டு இலக்கிய ஆராய்ச்சி யாளரும், பெருங்கவிஞருமான டி.எஸ். எலியட்என்னும் பேரறிஞர் கூறுவதும், இங்கு நாம் சிந்தித்து உணரத்தகும்.

**மறைமலை அடிகள்:**

இதுபற்றியே, திருக்கோயில்களில் வழிபாட்டு நிகழ்ச்சிகளில் தெய்வத் திருவருள் நலம் செறிந்த திருமுறைகளுக்குச் சிறப்பிடம் அளிக்கப் பெறுதல் வேண்டும் எனச் சான்றோர்கள் பலர், பலகாலமாக வற்புறுத்தி வருகின்றனர். இற்றைக்குச் சற்றேறத் தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே, 'தென்சொற்கடந்து, வடசொற்கடற்கு எல்லை தேர்ந்து', ஆங்கிலத்திலும் கரைகண்டு, மும்மொழிப் புலமைச் செம்மலும், பல்கலைக் குரிசிலுமாகத் திகழ்ந்திருந்த சைவசித்தாந்தப் பெருஞ்சான்றோர், தமிழ்க்கடல் சிவத்திரு மறைமலையடிகளார் அவர்கள், இதுபற்றி ஆங்காங்குக் குறிப்பிட்டிருப்பனவற்றுள் சில பகுதிகள் வருமாறு:—

(1)"நமஸ்சிவாய" என்னும் மந்திரத்தில்கண் உள்ள நமஸ் என்னும் சொலுக்கு நேரான தமிழ்ச் சொல் 'போற்றி' என்பதேயாகும். 'போற்றி' என்னும் ஈறுபெற்று,

"ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி"

எனவரும் திருவாசகச் சிவபுராண வரிகளில் நின்ற சொற்றொடர்கள், ஒப்புயர் வில்லாத செந்தமிழ் மந்திரங்கள் ஆகும்.

"திருக்கோயில்களிற் சிவபிரானுக்கு வழிபாடு ஆற்றும் காலங்களில், இச்செந்தமிழ் மந்திரங்களே கூறற்பாலனவாம். இவை கூறி வழிபாடு ஆற்றின், இவற்றை ஓதுவார்க்கும், அருகிலிருந்து கேட்பார்க்கும், சிவபிரான் மாட்டு மெய்யன்பு நிகழும். இவற்றை விடுத்து ஓதுவோர்க்கும் கேட்போர்க்கும் பெரும்பாலும் பொருள் தெரியாத பிறமொழிச் சொற்றொடர்களை மந்திரங்கள் ஆக்கிப் புகலுதல், கரும்பிருக்க அதனை விடுத்து வேம்பு நுகர்ந்து எய்த்தலோடு ஒக்கும்."

—திருவாசக விரிவுரை.

(2)"நந்தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் இறைவனுக்கு வழிபாடு ஆற்றுங்காலங்களில், ஓதுதற்குத் தேவார திருவாசகங்களும், நாலாயிரப் பிரபந்தங்களும் இருக்கின்றன. இவ்வருள் நூல்களால் நுவலப்படுந் திருக்கோயில்களுக்கே எல்லாச் சிறப்பும் தெய்வத் தன்மையும் உளவன்றி, ஏனையவற்றிற்கு அவை இல்லாமை, நம் இந்துமக்கள் எல்லோரும் இனிது உணர்ந்த ஒரு பேருண்மையாகும்.

"கடவுளை நேரே கண்டு, அவனருளால் பல செயற்கருந் தெய்வ வியத்தகு நிகழ்ச்சிகளைச் செய்துகாட்டி, இறைவனருளை நாம் எளிதிற் பெறுமாறு செய்த, அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் முதலான தெய்வ அருளாசிரியர்களும், பொய்கையாழ்வார் பேயாழ்வார் முதலான உண்மை அடியார்களும் அருளிச் செய்த செந்தமிழ்ச் செழும் பாடல்களே, நம்நெஞ்சை நெகிழ்வித்து நம்மை இறைவன்பால் உய்க்குமன்றி, அருள் பெறுத ஏனோர் பிறமொழியில் ஆக்கிய உரைகள்

---

3. "A religion requires not only a body of priests who know what they are doing, but a body of worshippers who know what is being done."

— T. S. Eliot,

Definition of Culture.

நம்மை இறைவன்றன் பேரருளுக்கு உரியராக்க மாட்டா, ஆதலால், இனியேனும் நம் தமிழ் மக்கள் ஏமாந்து கெடாமல், தேவார திருவாசகம் முதலான செந்தமிழ் மாமறைகளை எல்லோரும் அறிந்து நெஞ்சம் நெக்குருக, ஓதி, இறைவற்கு வழிபாடு ஆற்றுமாறு உடனே செய்தல் வேண்டும்''

158585 600 008.

—தமிழர் மாதம்

(3) 'இப்போது கோயிலுள் இறைவனுக்குச் செய்யும் நாள் வழிபாடுகள் பொருத்தமாய் இருந்தாலும், அவை பிறமொழி மந்திரங்களைச் சொல்லிச் செய்யப்படுதலின் பொது மக்கள் அவற்றின் உண்மை அறியாமல் விழிக்கின்றனர்.

தேவார திருவாசகங்களாற் பாடப்பெற்ற கோயில்களே பாராட்டப் படுகின்றன. அல்லாமல், பிறமொழி மந்திரங்களுக்காக எந்தக் கோயிலும் பாராட்டப்படவில்லை. ஆதலால், வழிபாடு முழுவதும் தேவாரதிருவாசகத் தமிழ் மந்திரங்களைக் கொண்டே நடைபெறுமாறு ஒவ்வொரு கோயிலிலும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

—சீர்திருத்தக் குறிப்புகள்.

### தாய்மொழி :

சைவத் திருமுறைகளைக் கொண்டு, தாய் மொழியின் வாயிலாகவேஇறைவழிபாடுநிகழ்த்துதல் வேண்டும் என நாம் விரும்புவது, இயற்கை நெறிக்கு இயைந்த செயலேயாகும். சமயச் சான்றோர் அனைவரும், தத்தம் சமயங்களைத் தமது தாய்மொழியின் வாயிலாகவே முதன் முதலில் பரப்பி வந்தனர். புத்தர்பிரான் பாலி மொழியிலும், மகாவீர வர்த்தமானர் அர்த்தமாகதி மொழியிலும், சாரதுஷ்ட்ரர் பாரசீக மொழியிலும், இயேசுநாதர் ஈபுரு மொழியின் ஒரு கிளையாகிய அரமைக் மொழியிலும், நபிகள் நாயகம் அராபிய மொழியிலும், பசவதேவர் கன்னட மொழியிலும், குருநானக் பஞ்சாப் மொழியிலுமாகத், தத்தம தாய்மொழியின் வாயிலாகவே தமக்குரிய சமயங்களைப் பரப்பியுள்ளனர்.

இவ்வியல்பு காரணமாகவே, உலகின் பல பகுதிகளிலும், பல சமயத்தவர்களிடையிலும், ''தாய்மொழி வாயிலாகவே இறைவழிபாடு நிகழ்த்துதல், முறைமை'' என்னும் கருத்தும் கிளர்ச்சியும், நமது கிறித்தவ இசுலாமியப் பெருமக்களிடமும் ஆங்காங்கே இந்நாளில் மேலோங்கி, ஆக்கமும் ஊக்கமும் பெற்றுத்திகழ்ந்து வருகின்றன.

### முடிவுரை:

இன்னோரன்ன பற்பல செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் கூர்ந்து நோக்கி நினைந்து ஆராய்வோமாயின், தமிழ்நாட்டுச் சைவத் திருக்கோயில்களில், சைவத் திருமுறைகள் சிறப்பிடம் அளிக்கப் பெற்று, அவற்றினை உள்ளம் உருகி ஓதி வழிபாடு நிகழ்த்த வேண்டுவதன் இன்றியமையாமையும், சிறப்பும் யாவர்க்கும் இனிது புலனாகும். நாம் நமது சமயாசிரியர்களையும், அவர்கள் அருளிச் செய்த தெய்வத்திருவருட் பனுவல்களையும், தக்கவாறு மிகப் பெரிதும் போற்றக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

தெய்வத் திருவருளாற் பாடப்பெற்ற திருமுறைகளைவிடச் சிறந்த நூல்கள், வேறு எதுவும் இல்லை; திருமுறைகளிலும் மேலான மந்திரங்கள் இல்லை; திருமுறைகளைக் காட்டிலும் உயர்ந்த தெய்வத் திருவருட் பனுவல்கள் இல்லை. திருமுறைகளே நமக்கு வாழ்வும், வைப்பும் வாழ்முதற் பொருளுமாகத் திகழ்வன. ஆதலின், நாம் நம் திருமுறைகளுக்குச் சிறப்பும் முதன்மையும் அளித்து, நம் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் திருமுறைப் பாடல்களைக் கொண்டு பக்தியுடன் வழிபாடு நிகழ்வித்து, எல்லாம்வல்ல சிவபிரானின் திருவருள் பெற்று உய்யமுயல்வோமாக;

வாழ்க திருமுறை!

வளர்க திருமுறை வழிபாடு!!

– ஆசிரியர்

---

4. ''The International congress of Pastoral Liturgy which met at Assissi and Rome in September 1956 is said to have made a 'veiled recommendation' for the adoption of regional languages in the place of the time-honoured Latin for the Mass, an important religious rite in Christianity''


—Walter La Beau,

Coming Changes in Mass,

Catholic Digest, December 1956, p. 5-12.

5. ''In western Pakistan, Id prayers in Urdu, for the first time, are reported to have been offered, in defiance of the age-long practice of doing it in Arabic verses, creating thereby a stir among orthodox Muslims''.

-Bulletin of the Institute of Traditional Cultures.




தமிழ்நாடு அரசின் பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. க. ராசாராம், B. A. அவர்கள், தவத்திரு. அடிகளார்க்குத், தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள், வழங்கியருளிய பொன்னாடையைப் போர்த்திச் சிறப்பித்தல்.





இன்னம்பர் எழுத்தறிநாதர் திருக்கோயில் திருப்பணியைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார், M. L. C. அவர்கள் துவக்கிவைத்தல். (14—6—71)



தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம்-பரங்கிப்பேட்டை ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் நிகழ்ந்த "தூய்மைப் பரிசளிப்பு விழா" வில் துணையாணையர் திரு. கே. இராஜா, B.A., B.L., அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34
Printed : General Printers, 14-Poonamallee High Road, Madras-3. Editor: N.R.MURUGAVELL, M.A., M.O.L.